

மாலை வேளையின் மங்கலான வெளிச்சத்தில் காற்றிலசையுகின்ற அழகான இந்திய ரோஜா மலர்களைப் பார்த்ததும், உங்கள் இஷ்டத்திற்குரிய சோப்பான வினோலியா ஒயிட்ரோஸின் ஞாபகமேற்படும். உங்கள் எழிலை அதிகப்படுத்த இதன் சுகந்த நுரையைவிட உத்தமமானதோ, தகுதியானதோ வேறு கிடையாது. மிருதுவான நுரையைத்தரும் வினோலியா மிக நேர்த்தியான சருமத்தையும் சுகமாக சுத்தம் செய்கிறது . . . மேலும் உங்களை சுற்றிலும் மனோஹர பரிமளத்தைப் பரவச்செய்கிறது.



வினோலியா ஒயிட் ரோஸ் சோப்

VWR 30-23 TM

VINOLIA COMPANY LIMITED, LONDON, ENGLAND



அம்மா, உனக்குச் சகலமும் தெரிந்ததுதான்!

பூரண ஆரோக்கியமும் ஜொலிக்கும் கண்களுடன் கூடிய மலர்ந்த முகமும் ஏற்படுவதற்கு முக்கிய காரணம் குடல்கள் சரிவர வேலை செய்வதைப் பொறுத்துள்ளது. மலச்சிக்கல் ஏற்படாமல் குடல்கள் சரிவர வேலை செய்வதற்கு குழந்தைகள் விரும்பும் போமெமின்ட்தான் மிக எளிய சாதனம்.


சுலபமாக
மலமிளக்கும்
உன்னத சஞ்சீவி

போமெமின்ட்
லாக்ஸெடிவ் சூயிங் கம்

ரூ. 1—2—0, ரூ. 0—7—0 ஆகிய இரு சைஸ்களில் எங்கும் கிடைக்கும்

சென்னை மாகாணத்துக்கு விற்பனை ஏஜன்டுகள் :
ஓரியண்டல் மர்க்கன்டைல் ஏஜன்ஸி, 99-A, அரமனைக்காரத் தெரு, மதராஸ்

No. 3.



வேளையில் பள்ளிக்கூடம் சீக்கிரம் விளையாடல்

உங்களை ரொம்பவும் புத்திசாலிகளாகவும், காரியகரமாகவும், ஆதாரவாகவும், செய்யக் கூடியது.



பள்ளிக்கூடத்திற்கு, காலேஜுக்கு அல்லது விளையாடுவதற்கு போய்வர, ஹிந்த் ஸைக்கிள் உங்களை வெகு சீக்கிரத்தில் கொண்டு போகும்.

HIND India's Own

HC. 28

தயாரிப்போர்கள்: ஹிந்த் ஸைகிள்ஸ் லிமிடெட்,
சென்னை இராஜதானிக்கு (சுதேச ஸமஸ்தானங்கள் உள்பட)
சோல் ஏஜன்டுகள்: டி லக்ஸ் ட்ரேடிங் கோ., பாலக்கரை, திருச்சி.
பிராஞ்சு: 11, பிராட்வே, சென்னை.



தாய்மார்களுக்கு இந்த பாஷை நன்கு தெரியும்

ஒரு குழந்தையின் அழுகைக்கு உண்டான அர்த்தத்தை விட எந்த பாஷையிலும் அவ்வளவு அர்த்த புஷ்டியான ஒரு வார்த்தைகூட கிடையாது. ஒரு குழந்தையை குளிப்பாட்டி, ஆகாரம் கொடுத்தாலும், அந்த சமயம் ஒரு உடைமாற்றம் அவசியமில்லாமலிருந்த போதிலும், அது அழுமாயின் கஸ்ஸன்ஸ் வைட் க்ராஸ் அளிக்கும் சுகத்தையும் ஹிதத்தையும் அது விரும்புகிறது என்பதை ஒவ்வொரு புத்திசாலியான தாயும் நன்கு அறிந்து கொள்ளலாம். வியர்வை உபாதை, அரிப்பு, புண் வலி இவைகளினின்றும் குழந்தையைப் பாதுகாக்க தினசரி இரண்டு வேளையாவது தாராளமாக வைட் க்ராஸ் பேபி பவுடரை உபயோகிக்கவும்.

இங்கிலாந்தில் கஸ்ஸன்ஸினால் தயாரிக்கப்பட்ட இந்தப் பிரசித்திப் பெற்ற பவுடர் இந்தியாவெங்கும் பம்பாய் மூல்லர் & பிப்ஸ் (இந்தியா) லிமிடெட்டாராலும் அவர்களது பிராஞ்சுகளாலும் விநியோகிக்கப்படுகிறது.



Ad. No. 10.

அழகின் சிறப்பு

சருமசுகத்தின் மகிமையே



உங்கள் வசீகரம் பெரும்பாலும் மேனியழகை பொறுத்திருக்கிறது. மேனியழகு சரும சுகத்தினால் மட்டுமே ஏற்படுகிறது. சருமத்தைப் போஷிக்கும் குணமுடையதும் ஆன்டிஸெப்டிக்குமான தைலங்கள் சேர்ந்துள்ள கேடில் ரெக்ஸோனாவில் அடங்கியிருப்பதால் அது சருமத்தை ஆரோக்கியமாக வைத்துக் கொள்வதுமல்லாமல் சரும அழகு ஏற்படவும் உதவுகிறது. அதிசீக்கிரத்தில் தாராளமாயுண்டாகும் ரெக்ஸோனாவின் நுரை சருமத்திற்குள் சுகமளிக்கும் கேடிலை சேர்த்து ஆற்றலுடன் அழகையும் கொடுக்கின்றது. கேடில் கலந்துள்ள விசேஷமான சோப் இது ஒன்றே. அதனாலேயே, சருமத்தை மச்ச மறுக்களிலிருந்து பாதுகாத்து ஆரோக்கியத்தையளித்து ஒவ்வொரு மங்கையும் விரும்பும் மேனியழகைத்தரும் குணத்தை இச்சோப்புப் பெற்றிருக்கிறது.

ஆரோக்கிய மிருதியால் சோபையடையும் சருமத்தை முக்கியமாகக் கருதும் ஆடவர்கள், ரெக்ஸோனாவின் சுறுசுறுப்பளித்து சக்தியை ஊட்டும் திறமையை மெச்சுவார்கள். சுகமான சருமமேற்பட விரும்பும் ஆடவர்களுக்கு, ரெக்ஸோனா இன்றியமையாதது என்று உண்மையாக சொல்லலாம்.

குழந்தைக்கு ரெக்ஸோனா: குழந்தையின் மெல்லிய சருமத்தில் புண்கள், சிணப்புகள் ஏற்பட வழியுண்டு. ரெக்ஸோனாவின் மருந்து சேர்ந்த நுரை சிறு கைகால்களை சாதாரண சரும வியாதிகளிலிருந்து காப்பாற்றுகிறது.

★ ரெக்ஸோனாவிலுள்ள கேடில், ஆன்டிஸெப்டிக்கும் சுகமளித்துப் போஷிக்கும் தன்மையுடையதுமான தைலங்கள் சேர்ந்த விசேஷ கலப்பு மருந்து. இம்மருந்து சருமப் பாதுகாப்பிற்கு ரொம்பவும் உத்தமமானது.

சருமசுகத்திற்கு ரெக்ஸோனா

R.P. 21A-29-40 TM. REXONA PROPRIETARY LIMITED

கல்கி

பொருளடக்கம்

மலர் 6 இதழ் 38 | 1947 ஏப்ரல் 20 | சர்வஜித்ஸு சித்திரை 7

இந்தியாவின் கௌரவம் உயர்ந்துவிட்டது! ரொம்ப ரொம்ப உயர்ந்துவிட்டது! இமய மலையின் உச்சியையே எட்டி விட்டது! வானத்தையே கூட முட்டுகிறது என்று சொல்லலாம்.

நம்முடைய இடைக்கால சர்க்கார் உபதலைவராகிய பண்டித ஜவாஹர்லால் நேரு நான்கைந்து நாட்களுக்கு முன்பு டில்லியிலே ஒரு பொதுக் கூட்டத்தில் பேசியபோது, "மற்றொரு பெரிய நாட்டுடன் நாம் ஸ்தானிக உறவை ஏற்படுத்திக் கொள்ளப் போகிறோம் என்ற செய்தி இதற்குள்ளாகப் பத்திரிகைகளில் வெளி வந்திருக்கும்" என்றார்.



அந்தப் புதிய நாடு எது என்பதை தேச மக்கள் பத்திரிகைகளில் தேடிக் கண்டு பிடித்தபோது அவர்களுக்கு உண்டான ஆச்சரியம் கொஞ்ச நஞ்சம் அல்ல. இன்று உலகத்திலேயே பிரம்மாண்ட வல்லரசாகவும் உலக அரங்கத்திலே கேந்திர ஸ்தானம் வகித்து வருவதுமான சோவியத் ருஷ்யா இந்தியாவின் சுதந்திரத்தை அங்கீகரித்து அதனுடன் ஸ்தானிக உறவை ஏற்படுத்திக் கொள்ள இணங்கியிருக்கிறதென்றால், அதைப் பார்த்து யார்தான் பெருமை கொள்ளாமலிருக்க முடியும்?

ருஷ்யாவைத் தவிர, இன்னும் இரு பெருநாடுகள் ஏற்கனவே நம்முடைய சுதந்திரத்தை அங்கீகரித்து நம்முடன் ஸ்தானிக உறவை ஏற்படுத்திக் கொண்டு, நம்மைக் கௌரவித்திருக்கின்றன. அவை அமெரிக்காவும் சீனாவுமாகும்.

அமெரிக்க ஸ்தானீகராகப் போகும் பாக்கியம் கிடைத்த ஜனாப் ஆஸப் அலி—ஹிஸ் எக்ஸலென்ஸி ஆஸப் அலி அமெரிக்கா சென்று ஆகாய விமானத்திலிருந்து இறங்கும் காட்சியை நமது அட்டைப் படத்தில் காணலாம்.

ஜனாப் ஆஸப் அலி பெரிய தியாகி. சிறந்த தேசபக்தர். சென்ற 1942 இயக்கத்தின் போது அவரும் அவருடைய குடும்பமும் அடைந்த கஷ்ட நஷ்டங்கள் தேச மக்கள் எல்லோருக்கும் நன்றாகத் தெரியும்.

இத்தகைய அருமையான தியாகியைப் பண்டித நேரு அமெரிக்காவுக்கு இந்திய ஸ்தானீதிபதியாகத் தேர்ந்தெடுத்தபோது, "சபாஷ்!" என்று தேச முழுவதும் சந்தோஷ ஆரவாரம் செய்தது.

சென்ற வாரத்தில் ஜனாப் ஆஸப் அலிக்கு நியூயார்க் நகரத்தின் மேயர் விருந்தளித்த வைபவத்தைப் பற்றிப் படித்த இந்தியர் ஒவ்வொருவரும் தாங்களே அந்த கௌரவத்தைப் பெற்றதாகக் கருதிப் பூரித்தார்கள். ஜனாப் ஆஸப் அலியின் மூலம் இந்திய - அமெரிக்க தேசங்களின் நட்பும், வர்த்தகப் போக்குவரத்தும் மேலும் மேலும் வளர்ந்து பெருகும் என்று எதிர்பார்க்கலாம்.

போன் : 84188

★

ராதா ஸில்க் எம்போரியம்

(பட்டு ஜவுளி வியாபாரம்)

மயிலாப்பூர்

★

பிராஞ்சு :

கும்பகோணம்



அரைக்கீரை விதைத் தைலம்

●

அரைக்கீரை விதையுடன் 72 - வித சரக்குகளும், அநேக பச்சிலைகளும் சேர்த்துத் தயாரிக்கப்பட்டது. இத் தைலத்தை வாரம் இரு முறை தேய்த்து ஸ்நானம் செய்து வர சிரசைப் பற்றிய சகல வியாதிகளைப் போக்குவதுடன் கண் மறைப்பு முதலிய கண் சம்பந்தமான வியாதிகளையும். காது குத்தல், காதில் சீழ் வருதல் முதலிய வியாதிகளையும் கண்டிக்கக் கூடியது.

தயாரிப்பவர்கள் :

டி. எஸ். ஆர். அண்டு கோ., கும்பகோணம்

●

மதராஸ் ஸிடி ஏஜண்டுகள் :

புஷ்பவனம் ஸ்டோர்ஸ், பைகிராப்ட்ஸ் ரோடு, திருவல்லிக்கேணி

கோயமுத்தூருக்கும் பாலக்காடுக்கும் சோல் ஏஜண்டு :

B. பாலபட்டாபி, வைசியாள் தெரு, கோயமுத்தூர்

மலர் 6 | தமிழ்த் திருநாடு தன்னைப் பெற்ற தாயென்று கும்பிடடி பாப்பா —பாரதியார் | இதழ் 38

என்ன சேதி?

ராஜாவின் தலை

“பொன் வைக்கிற இடத்தில் பூ வைப்பது போல” என்பதாகத் தமிழ் நாட்டிலே வெகு காலமாக ஒரு பழமொழி இருந்து வருகிறது. பழமொழிகளையும் காலத்துக் கேற்பப் புதுமொழியாக மாற்றியமைக்க வேண்டியது அவசியம் அல்லவா? மேற்படி பழமொழியை எப்படி மாற்றியமைப்பது என்று நம்முடைய நிதி மந்திரி ஜனாப் லியாகத் அலிகான் அவர்களைக் கேட்டால், “வெள்ளி வைக்கிற இடத்தில் நிக்கல் வைப்பது போல” என்பதாகத்தான் அதை மாற்றச் சொல்வாரென்பது நிச்சயம்.

இடைக்கால சர்க்கார் பதவிக்கு வந்த பிறகு நிதி சம்பந்தமாகச் செய்திருக்கும் இரண்டு புரட்சிகரமான காரியங்களிலே ஒன்று, ஸ்டர்லிங் நாணயத்திலிருந்து ரூபாய்க்கு விடுதலை அளித்ததாகும். மற்றொன்று இப்போதுள்ள ரூபாய் நாணயத்தை நிக்கலிலேயே முழுக்க முழுக்க வெளியிடுவது என்பதாகும்.

சென்ற மகா யுத்தத்தின் போது, இரவல் குத்தகைத் திட்டத்தின்படி இந்திய சர்க்கார் அமெரிக்காவிடமிருந்து 23 கோடி அவுன்ஸ் வெள்ளியை வாங்கியிருக்கிறதாம். அதை நாம் இப்போது வெள்ளியாகவே திருப்பிக் கொடுத்தாக வேண்டும். ஆனால், சர்க்கார் கைவசம் வெள்ளி இல்லை. புதிதாக வாங்குவதென்றால் விலை அதிகம். ஆகவே இந்த ரூபாய்களில் உள்ள வெள்ளியை எடுத்து மேற்படி கடனை அடைத்து விட்டு, நிக்கலிலேயே புதிதாக எல்லா ரூபாய்களையும் போட்டு விடுவதென்று முடிவு செய்திருக்கிறார்கள். இப்படிச் செய்யப் போவது நாம் மாத்திரம் அல்ல. பிரிட்டன், கானடா போன்ற நாடுகளும் இம்மாதிரியே எல்லா நாணயங்களையும் நிக்கலிலேயே வெளியிடப் போகின்றன.

இந்த நிக்கல் நாணயத்தில் இனி ராஜாவின் தலை இராதாம். ஏனெனில் இந்தியாவில் பிரிட்டிஷ் அதிகாரம் அடுத்த வருஷம் ஜூன் மாதத்தோடு சமாப்தியாகின்றதல்லவா? இனி வெளியாகும் நாணயங்கள், கரன்ஸி நோட்டுகள் எதிலும் ராஜா தலையைக் காண முடியாது.

யார் கேட்பார்கள்?

நூற்றொருவர் கூட்டமாகிய திருதராஷ்டிர குலத்துக்குள்ளே விதுரன் என்று ஒரு புத்திமான் இருந்தான். பாண்டவர்களை எதிர்க்க வேண்டாமென்றும் தர்மமே வெல்லும் என்றும் அவன் துரியோதனனிடம் எவ்வளவோ சொல்லிப் பார்த்தான். ஆனால் துரியோதனன் கேட்கவில்லை. கடைசியில், விதுரன் அந்தப் பாதகர்கள் கூட்டத்தைச் சேராமல் வில்லை முறித்துப் போட்டு விட்டு வீட்டிலே உட்கார்ந்து விட்டான். பிறகு, துரியோதனாதியர்கள் எல்லோரும் ஒருவர் பாக்கியில்லாமல் இறந்து மறைந்தார்கள் என்பது எல்லோருக்கும் தெரியும்.

இப்போது அமெரிக்காவிலும் அந்த மாதிரியாக ஒரு விதுரன் இருக்கிறார். அவருடைய பெயர் ஹென்றி வாலேஸ். அவர் அமெரிக்க சர்க்கார் வர்த்தக மந்திரியாக இருந்தவர். ட்ரூமனுக்கு நல்லது சொல்லப் போக, கடைசியில் அவர் தம்முடைய வேலையையே ராஜீநாமாச் செய்யும்படியாக, அதாவது, தம்முடைய வில்லையே முறித்து விட்டுப் போகும்படியாக நேர்ந்தது. அவர் சென்ற வாரம் பிரிட்டனுக்குப் போயிருந்த போது, பிரிட்டிஷ் மக்களுக்குச் செய்திருக்கும் ஒரு பிரசங்கம் விதுரன், திருதராஷ்டிர குலத்துக்குச் செய்திருக்கும் பிரசங்கத்தை ஒத்திருக்கிறது. “அமெரிக்கா இந்த மாதிரியாகவே போய்க் கொண்

டிருக்குமானால் மூன்றாவது உலக யுத்தம் ஏற்படுவது நிச்சயம்'' என்பதாக அவர் சொல்லி யிருக்கிறார். அது மாத்திரம் அல்ல; ருஷ்யாவைப் பகைத்துக் கொள்வது பெருந் தவறு என்பதாகவும் அவர் சொல்லி யிருக்கிறார். அமெரிக்கா தனிப்பட்ட முறையில் ஒரு தேசத்துக்கும் பண உதவி செய்யக் கூடாதென்றும் ஐக்கிய தேச ஸ்தாபன மூலமாகவே உதவிசெய்ய வேண்டுமென்றும் சொல்லி யிருக்கிறார். ஆனால், அவருடைய பேச்சை யுத்த வெறி கொண்ட அமெரிக்கர் கேட்பார்களா என்பதுதான் சந்தேகம். அவர் பேரில் சட்டப்படி நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றல்லவா அமெரிக்காவில் கிளர்ச்சி ஆரம்பமாகி யிருக்கிறது?

அச்சாளர் மகாநாடு

அச்சுத் தொழில் அருமையான தொழில்; அதிசயமான தொழில்; மனித சமூகத்தின் சரித்திரத்தில் மகத்தான புரட்சிகளை உண்டாக்கிய தொழில்; மக்களின் அறிவை வளர்ப்பதற்கும், அவர்களுடைய வரண்ட வாழ்க்கையை வளமுள்ளதாகச் செய்வதற்கும் அச்சுத் தொழில் பயன்படுவது போன்று வேறு எந்தத் தொழிலுமே பயன்படுவதில்லை.

திடீரென்று ஒரு நாள் இவ்வுலகில் பத்திரிகைகளும் புத்தகங்களும் இல்லாமற் போனால் வாழ்க்கை எவ்வளவு சூனியமாய்ப் போய்விடும் என்று யோசித்துப் பாருங்கள். வாழ்க்கையில் இன்பத்தைக் காண முடியாத மனிதன், இலக்கியத்தில் நிச்சயம் இன்பத்தைக் காணலாம். பொழுது போக்குவதற்குக் குற்றமற்ற நண்பர்கள் வேண்டுமென்றால், மனிதனுக்குப் புத்தகங்களை விட்டால் வேறு கதி ஏது? இருக்குமிடத்தில் இருந்து கொண்டே மனிதனைத் தேவனாக வாழ வைக்கும் மகாத்மாவின் அஹிம்ஸா போதனையை அறிந்து கொள்ளச் சாதனமா யிருப்பதும் அச்சுத் தொழிலே யல்லவா?

கத்தி முனையைவிடப் பேனா வலிமையுள்ளது என்கிறார்கள்; வீராதி வீரன் நெப்போலியனைக் கூட அந்தப் பேனாமுனை அஞ்சி நடுங்கச் செய்தது என்கிறார்கள். ஆனால், அச்சுத் தொழிலின் துணையின்றி ஒரு நாளும் பேனா முனை கத்தி முனையை விடக் கூர்மையுள்ளதா யிருக்க முடியாது; வீராதி வீரன் நெப்போலியனைக்கூட அஞ்சி நடுங்கச் செய்திருக்க முடியாது. ஒரு நாட்டில் அச்சுத் தொழில் எவ்வளவு தூரம் முன்னேற்ற மடைந்திருக்கிறது என்று பார்த்து, அதிலிருந்து அந்த நாட்டின் முன்னேற்றத்தையே அளந்து விடலாம்.


அப்பேர்ப்பட்ட அச்சுத் தொழில் நம் நாட்டில் முன்னேற வேண்டுமானால், அந்தத் தொழிலில் ஈடுபட்டுள்ள தொழிலாளர் முன்னேற்றமடைய வேண்டும். எனவே, நாளது மாதம் 26, 27, 28 தேதிகளில் தமிழ் மாகாண அச்சுக்கூடத் தொழிலாளர் முதலாவது மகாநாடு தஞ்சையில் கூடுகிறது என்று அறிந்து மிகவும் மகிழ்கிறோம். சென்னை மாகாணத்து அச்சுத் தொழிலாளர் பெருந் திரளாக மேற்படி மகாநாட்டுக்கு விஜயம் செய்து முதலாவது மகாநாட்டை முதல்தரமான மகாநாடாக நடத்தி வைப்பார்களென்று எதிர்பார்க்கிறோம். மகாநாட்டில் அச்சுத் தொழிலாளர் தங்கள் முன்னேற்றத்துக்குரிய ஆலோசனைகளைச் செய்து தீர்மானங்களை நிறைவேற்றுவதுடன், அச்சுத் தொழிலின் முன்னேற்றத்தையும் கருதி வேலைத் திட்டங்களை வகுத்துக் கொள்வார்கள் என்று நம்புகிறோம். அச்சுத் தொழிலாளரின் முன்னேற்றத்தில் பொது மக்கள் சிரத்தை கொள்வதும் மிக்க அவசியமாகும். ஏனெனில், அச்சுத் தொழிலாளரின் முன்னேற்றமே தேச முன்னேற்றத்தை அளக்கும் அளவு கோல் அல்லவா?

புது வருஷம்

தமிழ்ப் புது வருஷம் பிறந்திருக்கின்றது. புதுத் தமிழ் ஆண்டில் தமிழ் வளர்ச்சிக்காக ஒரு தொண்டு புரியுமாறு தமிழ் நூலாசிரியர்களையும் தமிழ்ப் பதிப்பாளர்களையும் கேட்டுக் கொள்கிறோம். 1946-ம் வருஷத்தில் புதிதாகவோ, புதிய பதிப்பாகவோ வெளியான தமிழ்ப் புத்தகங்கள் ஒவ்வொன்றுக்கும் நாலு பிரதி வீதம் ஸ்ரீ ம. பெ. பெரியசாமி, ஸ்ரீ ராமகிருஷ்ண வித்யாலயம், கோயமுத்தூர் என்ற விலாசத்துக்கு அனுப்பக் கோருகிறோம். தமிழ் வளர்ச்சிக் கழகத்தின் பரிசுத் திட்டத்துக்காக மேற்படி புத்தகப் பிரதிகள் கோரப்படுகின்றன. நாலு பிரதிகளில் இரண்டு பிரதிகளுக்கு உரிய கிரயம் கொடுக்கப்படும். தயவு செய்து பட்டியல் அனுப்பி வைக்கவும். ரயில்வே பார்சலில் புத்தகம் அனுப்ப விரும்புவோர் பெரியநாயக்கன் பாளையம் ரயில்வே ஸ்டேஷன் என்பதைக் குறிப்பிட வேண்டுகிறோம்.

தமிழ் வளர்ச்சிக் கழகம்

முட்டைக்குள் என்னவோ?


"லார்ட் மௌண்ட்பாட்டன் மகாத்மா காந்தி, ஜனுப் ஜின்ன முதலிய தலைவர் களுடன் பூர்வாங்க சம்பாஷணைகள் நடத்தி யான பிறகு முடிவான திட்டத்தைப் பற்றித் தீர்க்கமாக ஆலோசனை செய்து வருகிறார். சிலநாளில் அவருடைய புதுத்திட்டம் வெளி வரலாம் என்று எதிர்பார்க்கப் படுகிறது."
—— பத்திரிகைச் செய்தி
உஸ், சத்தம் போடாதீர்கள்!
SHASTRY


இந்தியாவும் ருஷ்யாவும் பரஸ்பரம் அரசாங்க தூதர்களை மாற்றிக் கொள்வதென்று தீர்மானிக்கப் பட்டிருக்கிறதாம். அந்த விசேஷ சம்பவம் நடைபெறும் தினத்தில் இப்படி ஒரு உடை மாறுதலும் நடந்தால் நன்றாயிருக்குமென்று நமது கார்ட்டூனிஸ்ட் கருதுகிறார்.
பத்திரிகை நிருபர்: பாக்கிஸ்தான் என்பதற்கு விளக்கம் கேட்டுப் போகலாம் என்று வந்தேன்
அம்மா இரும்! பாக்கிஸ்தானுக்கு அர்த்தம் கண்டு பிடிப்பதிலேதான் குவாதே ஆஜம் ஈடுபட்டிருக்கிறார்.
“பாக்கிஸ்தான் என்பதற்கு ஜின்னா பொருள் கூறுகிறபடியால்தான் முடிவு ஏற்பட வழியில்லாமலிருக்கிறது!” என்று ஜவாஹர்லால்ஜி சென்ற வாரத்தில் கூறினார்.
பத்திரிகை
தேசப படங்கள்
சட்டப் புத்தகம்

கஷ்டமான கட்டம்

"பிரிட்டனில் இருப்பதைக் காட்டிலும் இந்தியாவில்தான் சர்ச்சிலுக்கு அதிக சீடர்கள் இருக்கிறார்கள்."

'சுருங்கக் கூறி விளங்க வைத்தல்' என்பதற்கு மேற்படி ஒரு வாக்கியத்தைக் காட்டிலும் சிறந்த உதாரணம் கிடைப்பது அரிது.

இன்றைய இந்திய அரசியல் நெருக்கடியையும் உள்நாட்டுக் குழப்பங்களையும் குறிப்பிட்டுப் பேசியுள்ள வடமேற்கு எல்லைப்புற மாகாணப் பிரதம மந்திரி டாக்டர் கான்சாகிப், இந்தியாவிலுள்ள சர்ச்சிலின் சீடர்களைப் பற்றிப் பிரஸ்தாபித்திருக்கிறார்.

இந்தியாவின் சுதந்திரத்துக்கு முட்டுக்கட்டை போடவேண்டுமென்ற சர்ச்சிலின் அபிலாஷையை மேற்படி சீடர்கள் கர்ம சிரத்தையுடன் நிறைவேற்ற முயற்சித்து வருகின்றார்களென்றும், ஆனால் அவர்களுடைய முட்டாள்தனமான முயற்சியில் மண் விழுவது நிச்சயம் என்றும் டாக்டர் கான்சாகிப் சந்தேகத்துக்கு இடமின்றி சொல்லியிருக்கிறார்.

• • •

இந்திய அரசியல் நிலைமை தற்போது கஷ்டமான ஒரு கட்டத்தை அடைந்திருக்கிறது.

நாற்புறங்களிலிருந்தும் நெஞ்சைப் பிளக்கும் செய்திகள் வந்து கொண்டிருக்கின்றன.

உச்ச நிலை அடைந்துள்ள வகுப்பு வெறிக்கு ஆயிரக் கணக்கில் பெண்மணிகளும் சிசுக்களும் கூட பலியாகி வருகின்றார்கள்.

முற்றுப் பெற்றதென்று எல்லோரும் நினைத்துக் கொண்டிருந்த நவகாளிப் பேயாட்டம் மீண்டும் புத்துயிர் பெற்று விட்டதென்ற திடுக்கிடும் செய்தி எல்லோரையும் துடிதுடிக்கச் செய்திருக்கிறது.

வகுப்பு வெறியாட்டங்களும் அரசியல் குழப்பங்களும் நாட்டை அந்தகாரத்தில் ஆழ்த்தி விடுமோ என்று கூட எல்லோரும் ஏங்குகின்றனர்.

எனினும், இச் சந்தர்ப்பத்தில் பண்டித ஜவாஹர்லால் நேரு, சர்தார் வல்லபாய் பட்டேல், பாபு ராஜேந்திர பிரசாத் இம்மூன்று மாபெருந் தலைவர்களும் ஏககாலத்தில் புரிந்துள்ள வீர கர்ஜனைகள், சகலருடைய மனப் புண்ணுக்கும் சிறந்த சஞ்சீவியாக இருக்குமென்பதில் சந்தேகமில்லை.

மற்றும் அப் பெரியார்களின் மணிமொழிகள் எல்லோருக்கும் புதிய நம்பிக்கையையும், புதிய சக்தியையும், உற்சாகத்தையும் உண்டு பண்ணுவதாக இருக்கின்றன.

"சமாதானமா, அல்லது போராட்டமா? இரண்டில் ஒன்று முடிவு செய்ய வேண்டிய சமயம் வந்து விட்டது. நாம் விரும்புவது ஒன்றுபட்ட இந்தியாவா அல்லது பிரிக்கப்பட்ட இந்தியாவா? இவ் விஷயத்தையும் இனி ஒரு க்ஷணமும் தாமதமின்றி முடிவு செய்ய வேண்டும். பாக்கிஸ்தானத்தில் சேர வேண்டுமென்றோ அல்லது ஹிந்துஸ்தானத்தில் சேர வேண்டுமென்றோ நாம் எந்த மாகாணத்தையும், தேசத்தின் எந்தப் பாகத்தையும் நிர்ப்பந்தப் படுத்த விரும்பவில்லை" என்று பண்டித நேரு கூறியிருக்கிறார்.

ஜாலியன் வாலாபாக் நினைத்தன்று புது டில்லியில் நடந்த பெரும் கூட்டத்தில் ஜவாஹர்லால்ஜி பேசிய போது, தேசத்தை அல்லல் படுத்தி வரும் பல்வேறு பிரச்னைகளையும் அலசி, அவற்றைத் தீர்ப்பதற்குரிய அரிய யோசனைகளையும் குறிப்பிட்டிருக்கிறார்.

முஸ்லிம் லீக் சிருஷ்டித்துள்ள உள்நாட்டுப் பிரச்னையை மூன்றாவது மனிதர்கள் தீர்த்து வைப்பதைக் காங்கிரஸ் விரும்பவில்லை. மூன்றாவது மனிதர்கள் தீர்த்து வைப்பதென்பதும் முடியாத காரியம். அதில் அவர்கள் தலையிடுவதால் அதிக சிக்கல்களும் அதிக குழப்பங்களுமே ஏற்படும். இந்தியாவின் எதிர்கால விதியை இந்தியர்களேதான் நிர்ணயித்துக் கொள்ள வேண்டும்.

இதற்காகத்தான், காங்கிரஸ் காரியக் கமிட்டி சமரஸம் பேசுவதற்காக முஸ்லிம் லீக்கை அழைத்தது.

அவ்விதம் அழைப்பு அனுப்பி ஒன்றரை மாதம் கடந்து விட்டது. ஆனால், இன்னும் லீக் அதற்குச் செவி கொடுக்காதது விசித்திரமாக இருக்கிறதென்று பண்டித நேரு வருந்தி யிருக்கிறார்.

இந்தியாவின் முன்னேற்றத்துக்கு முட்டுக் கட்டை போடுவோர், தங்கள் இஷ்டப்படி தனிக்காட்டு ராஜாவாக இருப்பதில் நம் தலைவர்களுக்கு ஆட்சேபணை இல்லை. அவர்கள் பிரிந்து போவதாயினும் நீதியுடனும் நேர்மையுடனும் பிரிந்து போகட்டும் என்பது தான் தலைவர்களின் கோரிக்கையாகும்.

"பாக்கிஸ்தான் என்றால் என்ன என்று நாம் பல தடவைகள் கேட்டும் லீக்கர்கள் இதுவரை அதை விளக்கிக் கூறவில்லை" என்றும் ஜவாஹர்லால்ஜி குறிப்பிட்டிருக்கிறார்.

வைஸ்ராய் லார்டு மவுண்ட் பாட்டனும் அதே கேள்வியை ஜனாப் ஜின்னாவிடம் கேட்டதாயும், அவ்விஷயமாக யோசிக்க தமக்கு அவகாசம் கொடுக்க வேண்டுமென்று ஜின்னா பதில் அளித்ததாயும் பத்திரிகைச் செய்திகள் கூறுகின்றன.

இவ்வாறாக, பாக்கிஸ்தான் என்றால் என்ன என்பது பற்றி இன்னும் ஜின்னாவே ஒரு முடிவுக்கு வந்திருப்பதாகத் தெரியவில்லை!

* * *

கிணறு வெட்ட பூதம் புறப்பட்டதாம்! அதுபோலவே ஜின்னா வெட்டிய கிணற்றிலிருந்து பாக்கிஸ்தானாகிற தண்ணீர் வருவதற்குள் பாஞ்சாலப் பிரிவினை, வங்காளப் பிரிவினை போன்ற பூதங்கள் சீறிக்கொண்டு கிளம்பி விட்டன.

அந்தப் பூதங்களைத் திருப்தி செய்தாலன்றி பாக்கிஸ்தான் ஜலத்தை லீக்கர்கள் ஒரு காலத்திலும் பார்க்க முடியாதென்ற நிலைமை இப்போது ஏற்பட்டிருக்கிறது.

இவ் விஷயமாக பாபு ராஜேந்திர பிரசாத் கூறியிருப்பதைக் கேளுங்கள்:

"இந்தியாவைப் பிளக்க நாம் விரும்பவில்லை. ஆனால். இந்தியாவைப் பிளந்துதான் தீர வேண்டுமென்ற நிலைமை ஏற்படுமாயின், பாஞ்சாலத்தையும் வங்காளத்தையும் பிரித்துத்தான் தீரவேண்டுமென்ற கோரிக்கையை யாராலும் தடுக்க முடியாது. ஆனால், ஒன்று மாத்திரம் நிச்சயம். இந்தியாவைப் பிரிப்பதால் முஸ்லிம்களுக்கும் ஹிந்துக்களுக்கும் கஷ்டமே ஏற்படும். அதிலும் முஸ்லிம்களுக்குத்தான் அதிக கஷ்டம் ஏற்படும்" என்று பாபு ராஜேந்திரர் பாக்கிஸ்தான் விபரீதத்தை அம்பலப்படுத்தி யிருக்கிறார்.

* * *

இந்தியா ஆசியாவுக்கே திலகமாக விளங்குமென்றும் ஆசிய நாடுகளுக்குத் தலைமை வகிக்கும் ஆற்றல் இந்தியாவுக்கு உண்டென்றும் நம் தலைவர்கள் கூறி வந்தனர். ஆனால், அவர்களின் தீர்க்க தரிசனம் இவ்வளவு சீக்கிரத்தில் நிரூபணமாகுமென்று எவரும் நினைத்திருக்க மாட்டார்கள்.

இந்தியா இன்னும் பூரண சுதந்திரம் பெறவில்லை. உள்நாட்டுப் பூசல்கள் தேசத்தையே அல்லோலகல்லோலப்படுத்தி வருகின்றன. அப்படியிருந்தும், ஆசியாவிலுள்ள சுதந்திர நாடுகளுக்கு இந்தியா தலைமை வகிக்கும் உண்மை சமீபத்தில் நிகழ்ந்த அகில ஆசிய மகாநாட்டில் வெளியாகியது.

இப்போதே இந்தியா இவ்வளவு பெருமையுடன் விளங்குமாயின், பூரண சுதந்திரமும் பிரமாத சக்தியும் பெற்றுள்ள இந்தியா, உலக மேடையில் எத்தகைய முக்கிய ஸ்தானம் வகிக்கும் என்பதை எவரும் கற்பனை செய்து கொள்ளலாம் என்று பண்டித நேரு கூறியிருப்பது இந்தியர் ஒவ்வொருவருடைய உள்ளத்திலும் ஆனந்த பரவசத்தை உண்டாக்கும்.

* * *

இப்போதே இந்தியாவில் மகத்தான நெருக்கடிகளும் நரபலிகளும் ஏற்பட்டு வருகின்றன. அப்படியிருக்க, பிரிட்டிஷார் இந்தியாவை விட்டுச் சென்றதும் இந்நாட்டில் என்ன நேருமோ என்று திகில் கொண்டு தவிப்போருக்கு சர்தார் வல்லபாய் பட்டேல் அபயமளித்திருக்கின்றார்.

"இப்போது நம் தேசம் நெருக்கடியான கட்டத்தை அடைந்திருக்கிறது. எனினும் மகா வல்லமை பொருந்திய பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தை எதிர்த்துச் சென்ற பல ஆண்டுகளாகப் போர் புரிந்து வந்துள்ள நம்மை அச்சம் என்பது அணுகவும் கூடாது. அன்னியர்களை எதிர்த்துத் தியாக அக்கினியில் மூழ்கி அஞ்சா நெஞ்சம் படைத்துள்ள காங்கிரஸ் வாதிகள், பிரிட்டிஷார் போய்விட்டால் தேசத்தின் கதி

என்னவென்று ஏன் அஞ்ச வேண்டும்? காங்கிரஸ் எத்தனையோ கஷ்ட நஷ்டங்களை அனுபவித்து, எத்தனையோ சோதனைகளைக் கடந்து, எத்தனையோ போர்களையும் நடத்திய பின் தனது இலட்சியத்தை அடைந்திருக்கிறது. எனவே, சுயராஜ்யம் அடையும் தறுவாயில் நாம் சோர்வடையக் கூடாது. அதற்கு மாறாக நாம் அளவற்ற உற்சாகத்துடன் எதிர்கால நிலைமையைச் சமாளிக்க மார் தட்டி நிற்க வேண்டும். தேசம் புனர் ஜன்மம் அடையும்போது புதிய பிரச்னைகள் எழத்தான் செய்யும். நாம் எதற்கும் அஞ்சாமல் அவற்றைச் சமாளிக்க வேண்டும்'' என்று சர்தார் கர்ஜித்திருக்கின்றார்.

* * *

இந்த நெருக்கடியான சமயத்தில் முஸ்லிம் லீக்கின் கடமை யென்ன? இந்தியாவின் சுக துக்கங்கள் முஸ்லிம்களின் சுக துக்கங்களே யாகும். இந்தியா கஷ்டப்படும் போது முஸ்லிம்கள் மாத்திரம் சுகப்பட முடியாது. அதுபோலவே இந்தியா சுபிட்சமாக இருந்தால் முஸ்லிம்களுக்குக் கஷ்டமிராது.

ஒன்று முஸ்லிம் லீக்கர்கள் பாகிஸ்தான் கோரிக்கையைக் கைவிட வேண்டும். இல்லாவிடில், பாகிஸ்தான் என்னவென்பதை விளக்கி சமரசமான முறையில் தங்களுடைய கோரிக்கையை நிறைவேற்றிக் கொள்ள வேண்டும்.

இரண்டுமின்றி சண்டித்தனம் செய்து கொண்டிருப்பதால், யாருக்கும் நன்மை ஏற்படாது.

பாழும் ஹிந்து முஸ்லிம் வேற்றுமையைத் தங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்ளலாம் என்று பகற் கனவு கண்டு வரும் இந்திய மன்னர்களின் முடக்கு வாதத்துக்கு, சர்தார் பட்டேல் கூறியுள்ள புத்திமதி அருமருந்தாக அமையுமென்று நம்புகிறோம்.

மன்னர்கள் வர்க்கம் மறைந்து விட வேண்டும் என்பது தமது உத்தேசம் அல்லவென்றும், எனவே அவர்கள் அரசியல் நிர்ணய மகா சபையைப் பகிஷ்கரிக்கும் தற்கொலைக் கொள்கையை உதறித் தள்ளிவிட்டு அச் சபையில் கலந்து கொண்டு இந்தியாவின் சுதந்திரத்துக்கு உதவி புரிய வேண்டுமென்றும் சர்தார் மன்னர்களைக் கேட்டுக் கொண்டிருக்கிறார்.

மற்றும் பொது உடைமை வாதிகளின் தியாகத்தையும் தைரியத்தையும் உற்சாகத்தையும் பாராட்டியுள்ள சர்தார், அவர்களின் தற்போதைய போக்கைக் குறித்து வருந்துவதைக் கண்டு தேச க்ஷேமத்தில் கருத்துக் கொண்ட ஒவ்வொருவரின் உள்ளமும் உருகும் என்பது நிச்சயம்.

சென்ற பல வருஷங்களாகக் காங்கிரஸ் செய்த தியாகமெல்லாம் யாருக்காக? ஏழை விவசாயிகளுக்காகவும் தொழிலாளர்களுக்காகவும் தான்.

பல்வேறு மாகாணங்களிலும் காங்கிரஸ் சர்க்கார் பதவி யேற்று இன்னும் சில மாதங்கள் கூட ஆகவில்லை. தேசத்திலோ உணவுக் கஷ்டமும், பஞ்சமும், பிணியும் தாண்டவமாடுகின்றன. காங்கிரஸ் மந்திரிகள் சமாளிக்க வேண்டிய பிரச்னைகளோ எண்ணில் அடங்கா. இந் நிலைமையில், உள்நாட்டுக் கலகங்கள் காரணமாக நரபலிகள் நித்திய சம்பவமாகி விட்டன. பூரண சுதந்திரம் கைநழுவும்படி செய்யப் பிற்போக்காளர்கள் தங்களுடைய முழு பலத்தையும் உபயோகித்து வருகிறார்கள்.

அப்படியிருக்க, பிரிட்டிஷார் இந்தியாவை விட்டு வெளியேறும் வரையில் பொறுத்திருக்கக் கூடாதா என்று சர்தார் வேண்டிக் கொண்டிருப்பதைக் கண்டு எவர்தான் கண்ணீர் வடிக்காமலிருக்க முடியும்?

ஏழை பங்காளரான மகாத்மா காந்தியையும், சிறந்த சமதர்மவாதியான பண்டித ஜவாஹர்லால் நேருவையும், இதர சத்திய சீலர்களையும் தியாக மூர்த்திகளையும் தலைவர்களாகக் கொண்ட காங்கிரஸைக் காட்டிலும் ஏழைகளிடம், ஏழைத் தொழிலாளர்களிடம், ஏழை விவசாயிகளிடம் அதிக அனுதாபம் கொண்ட ஸ்தாபனம் இருக்கின்றதா?

கைக்கு எட்டியுள்ள சுதந்திரமாகிற பழம் வாய்க்கு எட்டவில்லை. அதற்குள், காங்கிரஸைத் தாக்குவது தன் விரலால் தன் கண்ணையே குத்திக் கொள்ளுவதாகாதா?

எனவே, இந்த நெருக்கடியான சமயத்தில் பொது உடைமை வாதிகளும், அபேத வாதிகளும், சகலரும் காங்கிரஸைப் பலப்படுத்த வேண்டும். காங்கிரஸ் மகா சபையின் பூரண வெற்றிதான் தேசத்தின் வெற்றி! தேசத்தின் வெற்றிதான் நாற்பது கோடி ஏழை மக்களின் வெற்றி!

கம்பர் தரும் காட்சி

டி.கே.சி.

175. எந்தப் பிறவிக்கோ இது?

சீதாபிராட்டியைப் பூமியோடு தூக்கித் தேரின் மேல் வைத்தான் ராவணன். 'விடு தேரை' என்றான் பாகனை நோக்கி. ஆகாய மார்க்கமாகத் தேர் பறந்து போகிறது.

போகிற மாத்திரத்தில் மலைகள், மரங்கள், மான்கள், யானைகள் ஆகிய பலவும் சீதையின் கண்ணுக்குத் தென்பட்டன.

துன்ப வெறியில் அவைகளைப் பார்த்து "ராமனிடம் போய் நீங்கள் சொல்லக் கூடாதா?" என்று புலம்புகிறாள்.

சிறிது நேரம் கழித்து ஒரு விதமான தெளிவு உண்டாகி, ராமன், லக்ஷ்மணன், பரதன் இவர்களைக் கூவி அழைத்துத் தன்னைக் காப்பாற்றக் கூடாதா என்று கதறுகிறாள்.

இந்தச் சந்தர்ப்பத்தில் சடாயு (கழுகுகளுக்கு அரசன்) அந்த மார்க்கமாகப் பறந்து செல்ல நேர்ந்தது. தேரையும் சீதையையும் ராவணனையும் பார்த்துக் கொண்டான்.

சீதையைப் பார்த்து "பயப்பட வேண்டாம் அம்மா" என்று ஆறுதல் சொன்னான். பிறகு யோசனை பண்ணினான். சரி, இவனைத் தீண்டவில்லை இந்த ராவணன் என்று அறிந்து கொண்டவனாய், உள்ளிருந்து மூண்டு எழுந்த கோபத்தை அடக்கிக் கொண்டு, சமாதான முறையில் பேச ஆரம்பிக்கிறான், ராவணனைப் பார்த்து.

'ஆண்டுற் றஅ—
ணங்கினை 'அஞ்சல்' என,—
தீண்டுற் றிலன்
என்றுணர் சிந்தையி னன்,
மூண்டுற் றெழு
வெங்கதம் முற்றிலை னய்,
மீண்டுற் றுரை
யாடலை மேயின னல்.

[ஆண்டு உற்ற அணங்கினை: அங்கே சந்திக்க நேர்ந்த சீதையை; அஞ்சல் என: பயப்பட வேண்டாம் என்று சொல்லி விட்டு; தீண்டுற்றிலன் என்று உணர் சிந்தையினன்: ராவணன் சீதையைத் தீண்டவில்லை என்று எண்ணிய காரணத்தால், சமாதானம் ஏற்பட்டது சடாயுவுக்கு; மூண்டு உற்று எழு வெங்கதம் முற்றிலனாய்: கோபத்தை மேலே போகாமல் அடக்கிக் கொண்டவனாய்; மீண்டு உற்று உரையாடலை மேயினனால்: ராவணனை நோக்கிப் பேச ஆரம்பிக்கிறான்.]

•

ராவணனைப் பார்த்துச் சொல்லுகிறான் சடாயு:

'பேதாய்! பிழை
செய்தனை: பேருல கின்
மாதா அனை—
யாளை,ம லைக்கொடு நீ
யாதா கதி—
னைத்தனை: எண்ணமி லாய்!
ஆதா ரம்நி—
னக்கினி யாருள ரோ?'

[மனக் கோடு: மனப்பூர்வமாக விஷயம் தெரிந்து இருந்தும்; ஆதாரம் நினக்கு இனி யார் உளரோ: இப்பேர்ப்பட்ட தெய்வத்தை (சீதையைத்) தவிர்த்து உன்னுடைய வாழ்க்கைக்காக வழிபடக் கூடிய வேறு தெய்வம் உண்டா?]

•

"உன்னுடைய மரபினரான கரன் முதலியவர்கள் யார்க்கும் தோற்றவர்கள் அல்ல. அவர்களில் ஒருவர் பிழையாதபடி மாண்டு போன காரியம் உனக்குத் தெரியும்."

'உய்யா மல்ம—
லைந்(து)உமர் ஆருயி ரை,
மெய்யா கஇ—
ராமன்வி ருந்திட வே

கையா ரமு —
  கந்துகொ(டு) அந்தகனார்
ஐயா! புதி(து)
  உண்ட(து)அ றிந்திலை யோ?'

[உய்யாமல் மீளாந்து உமர் ஆருயிரை: ஒருவர்கூடப் பிழைக்காமல் போர் செய்யும் காரணமாக, கரன் முதலான உனது இனத்தினர் தங்கள் உயிரை; மெய்யாக இராமன் விருந்திடவே: நான் பார்க்கும்படி உண்மையாகவே ராமன் விருந்திட்டான்; கையார முகந்து கொடு: அந்த உயிர்களைக் கையால் எடுத்து எடுத்து: அந்தகனார்: எமனார்; ஐயா புதிது உண்டது: அடடா புது விருந்து உண்டதை, — அறிந்திலையோ?]

* * *

ஏதற்காக ராவணன் இந்தத் தொழில் செய்தான் என்று சடாயுவுக்கு விளங்கவில்லை. இந்தப் பிறப்பினால் உறவினரோடு இறந்து நிர்மூலமாக வேண்டுமானால், அதற்கு இந்தத் தொழில் மாதிரிப் பாதகத் தொழில் வேறு ஏதும் இடையாதே!

'இம்மைக்(கு) உற —
  வோடும்இ றந்தொழி யும்
வெம்மைத் தொழில்
  இங்(கு)இதன் மேலிலை யால்;
அம்மைக்(கு) அரு
  மாநர கம்தரு மால்;
எம்மைக்(கு) இத —
  மாகஇ(து) எண்ணினை நீ?'

[இம்மைக்கு: இப் பிறப்பில்; உறவோடு: உறவினரோடு; அம்மைக்கு: பிறவிக்கு அப்பாலே; அருமா நரகந் தந்துவிடும்: பெரிய நரகத்தைத் தந்துவிடும், உண்மை இப்படி இருப்பதனால்; எம்மைக்கு: எந்தப் பிறவிக்கும் பிரயோசனம் என்று, அப்பா, — இப்படித் தொழில் செய்ய எண்ணினாய் நீ?]

இம்மையில் சுற்றத்தாரோடு பழிக்கு உள்ளாகி இறந்தொழியப் போகிறாய். அம்மையிலோ (மறு பிறப்பில்) கொடிய நரக வேதனைக்கு உள்ளாகப் போகிறாய்.

இவ்வாறு இம்மையையும் அம்மையையும் சொல்லிவிட்டு விஷயத்தை முடிக்கத்தான் தோன்றும். ஆனால் கம்பர் இம்மையையும் அம்மையையும் கடந்து அப்பால் போன மாதிரி ஒரு தனி வேகத்தோடு பேசுகிறார்:

"எம்மைக்(கு) இத —
  மாகஇ(து) எண்ணினை நீ?"

வான சஞ்சாரம்

இசைத்தேனீ

கொஞ்ச காலமாய் அபூர்வமாகி விட்டதோர் உயர்தரக் கச்சேரி ஏப்ரல் 1உ திருச்சி நிலையத்தில் அமைந்ததே சென்ற வாரத்திய விசேஷம். பாடியவர் தஞ்சாவூர் லக்ஷ்மி நாராயண பாகவதர். சாரீர சம்பத்தும், பாணியழகும் கொண்டு கேட்போரை எளிதில் ரஸிக்க வைக்கும் கலைச் சிறப்பும் படைத்தவர். மிகத் தெளிவாய் வழங்கிய சுப பந்துவராளியும், கற்பனை செழிப் நிறைந்து விஸ்தாரமாய் வெளிவந்த காம்போதியும் முதல் ஸ்தானத்துக்குப் போட்டியிட்டன. 'ஆடிய வேடிக்கை' என்ற கல்யாணி உருப்படியின் நிரவல் ஸ்வரப்ரஸ்தாரங்கள் ராகபாவத்துடன் கலகலத்திருந்தன.

அன்று அதே நிலையத்திலிருந்து கேட்ட மற்றொரு கானம், நயசாரீரமும், பிர்க்காப் பொழிவும் கொண்டு கவனத்தைக் கவர்ந்தது. சங்கராபரணம், ஷண்முகப்ரியா, காமவர்த்தினி ராகங்களும் உருப்படிகளும் சிறப்பாயிருந்தன. பாடியவர் டி. கே. லக்ஷ்மணன்.

2உ சென்னையில் ஜி. சிதா இனிய குரலில் சுகவழியாய் தோடி, காமவர்த்தினி ராகங்களை இழைத்தது மனோஹரமாயிருந்தது.

3உ திருச்சியில் நடந்த மாயவரம் ராஜமய்யரின் முழுநேரக் கச்சேரி வெகு ஜோராயிருந்தது. உற்சாக மனப்பான்மையுடன் கேட்போரையும் உற்சாகப்படுத்தும் தன்மையுடையவர். பிர்க்காப் பொழிவும், உருக்கமான பிடிகளும் கொண்ட அவரது அன்றையத் தோடியே அதற்கு அத்தாக்ஷியாகும். தர்பார், ரஞ்சனி ராகங்களும் வளப்பாயிருந்தன.

அன்று சென்னையில் வி. சூடாமணி, கனிப்பும் ரஞ்சகமும் கொண்ட குரலில் பைரவியைக் கச்சிதமாய்ப் பொழிந்தார். லலித பஞ்சம ராகத்தில் மாத்திரம் சிறிது தொய்வு விழுந்தது. மொத்தத்தில் கச்சேரி சுகமாயிருந்தது.

6உ சென்னையில் ஒரு மணி நேரக் கச்சேரி செய்த பாலமுரளி கிருஷ்ணனின் கானம் நடுவில் சிலகாலம் ரேடியோவில் கேட்காமலிருந்ததுண்டு. அதன் காரணத்தை அன்றையக் கச்சேரியிலிருந்தே ஊகிக்கலாம். வாலிபத்தில் மதுரமாயிருந்த அவரது குரல், இப்போது உடைந்து தடித்திருக்கிறது. ஆனால் அதன் உதவுபடிக்குக் குறைவில்லை. ஷட்சுருதி ரிஷபச் சேர்க்கையால் அழகுபடும் வாகதீச்வரியை அனாயாசமாய்க் கையாண்டது பாராட்டத்தக்கது. சாவேரி ஒரே பிர்க்கா மழையாயிருந்தது. பல்லவி ராகமாய் கௌரிமனோஹரியைச் சக்கை போடு போட்டார். இவர் பாண வேடிக்கை வேலைப்பாடுகளில் இறங்காமலும், சற்று நிதானமாயும் அழுத்தமாயும் பாடுவாரானால் எளிதில் ஒரு நட்சத்திரமாய் விளங்குவார்.

திருச்சியில் 8உ நடந்த மகாராஜபுரம் விச்வநாதய்யரின் கானம், கற்பனைச் சிறப்பும் தனிமையாய் இழையும் வழியும் கொண்டு, அமோகமாயிருந்தது. ரீதி கௌளையில் அவ்வழி நன்கு பிரதிபலித்தது. கேதார கௌளையிலும், ஷண்முகப்ரியாவிலும் மேல் பஞ்சமம் வரை சரளமாயும் தாராளமாயும் விட்டுப் பாடி மனமுருக வைத்தார். 'அந்த ராம சௌந்தர்யம்' 'ராமனைத் தருவாயோ' உருப்படிகள் பாவம் நிறைந்திருந்தன.

★★★ சென்னைச் சட்டசபைத் தலைவர் கனம் சிவஷண்முகம் பிள்ளை அவர்களும் விட்டலபுரம் ஸ்ரீ வேங்கடாச்சாரியார் அவர்களும் எட்டயபுரம் பாரதி மண்டபத்துக்கு நன்கொடை யளித்து உதவியது அப்படியே நின்று விடவில்லை. மேலும் சில தமிழன்பர்கள் நன்கொடை அனுப்பி வைத்திருக்கிறார்கள். அவர்களில் நாமக்கல் கவிஞர் ஒருவர். தேசிய மகா கவியின் ஞாபகார்த்த முயற்சிக்குக் காந்திய கவிஞர் அளித்திருக்கும் நன்கொடை நூறு ரூபாயையும் நூறாயிரம் ரூபாய் என்றே கருதிப் போற்ற வேண்டியது நியாயமாகும். அகிலமெல்லாம் பெறக்கூடிய அவருடைய உற்சாகம் ததும்பும் ஆதரவுக் கடிதத்தை மகிழ்ச்சியுடன் கீழே வெளியிடுகிறோம்.



நாமக்கல்
9-4-47

அன்புமிக்க ஸ்ரீ ரா. கிருஷ்ணமூர்த்தி
அவர்களுக்கு

'கல்கி'யில் ஸ்ரீ. சின்ன அண்ணாமலை யவர்கள் எழுதியிருந்த 'சாமி சரணம் ஐயப்பா' என்ற கட்டுரையைப் படித்த போது எட்டயபுரத்தில் தங்களுடைய நன் முயற்சியால் உருவாகி வரும் 'பாரதி மண்டபத்' திருப்பணி பூர்த்தியாக இன்னும் பதினாயிரம் ரூபாய் தேவை என்பதைப் பார்த்தேன்.

மின் விசிறிக்காகப் பணம் வசூலாகிக் கொண்டிருந்த போது தாங்கள் 'போதும் போதும்' என்று எழுதி வசூலை நிறுத்தாமல் இருந்திருந்தால் இந்தக் குறை நேர்ந்திருக்காது.

என்றாலும் என்ன? பாரதியாரின் ஞாபகார்த்தமாக இன்னும் பதினாயிரமோ அதற்கும் அதிகமோ கொடுப்பதற்குத் தமிழன்பர்கள் தயங்க மாட்டார்கள்.

ஸ்ரீ. ராஜாஜி அவர்கள் அந்த மண்டபத்திற்கு அஸ்திவாரக் கல் நாட்டிய போது தமிழர்களிடையே பொங்கி எழுந்தோடிய ஆர்வத்தைக் கண்ட எவருக்கும் இதில் ஐயமில்லை.

இத்துடன் என்னுடைய காணிக்கையாக நூறு ரூபாய் அனுப்பியிருக்கிறேன்.

'என்றுமுள தென்றமிழ் சேர்' பாரதியார் திருநாமம் வாழ்க!

தங்களன்பன்
வெ. இராமலிங்கம்

★ ★ ★ தமிழ்நாட்டில் "மணிக்கொடி" பத்திரிகையின் மூலம் புதிய தமிழ் எழுத்தாளர் பரம்பரை தோன்றியதென்பதை நேயர்கள் அறிவார்கள். அத்தகைய பத்திரிகையை ஆரம்பித்து நடத்திய ஸ்ரீ கே. ஸ்ரீனிவாசன் பின்னர் பம்பாய் நகரத்துக்குச் சென்று "ப்ரீ பிரஸ் ஜர்னல்" பத்திரிகையின் ஆசிரியராக இருந்து நடத்தி விட்டு, தற்சமயம் "நேஷனல் ஸ்டாண்டர்டு" பத்திரிகையின் ஆசிரியராகப் பிரசித்தி பெற்று விளங்குகிறார். நிகழும் ஆண்டில் பம்பாய்த் தமிழ்ச் சங்கத்தின் தலைவராக அவர் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார். அதன் ஆதரவில் ரஸிகமணி டி. கே. சி. அவர்களின் தலைமையில் இவ்வருஷம் கம்பன் விழாச் சிறப்பாகக் கொண்டாடப் பட்டது பற்றி 16-4-47 "தினமணி"யில் நேயர்கள் படித்திருப்பார்கள். அத்தகைய தமிழ் அன்பர்,—பத்திரிகை உலகப் பிரமுகர்,—நூறு ரூபாய் நன்கொடையுடன் அனுப்பிய வாழ்த்துச் செய்தி நேயர்களுக்கு மிகக மகிழ்ச்சி தரும் என்று நம்புகிறோம்.

Editorial Department.
TELEPHONE NOS.
35132
35435

The National Standard

TELEGRAMS "STANDARD"
POST BOX 867

NEWSPAPER HOUSE, COLABA,
BOMBAY 5

அன்புள்ள நண்பர்
ஸ்ரீ கிருஷ்ணமூர்த்திக்கு

9. 4. 47

நமஸ்காரம்

பாரதி நமது வாழ்வை அழகு பெறச் செய்ய வந்த ஒரு சில்பி - ஒரு சொல் தச்சன்

அவர் நினைவு தமிழர்கள் மனதில் கெட்டியாக இருக்க எட்டையாபுரத்தில் ஒரு கல் மண்டபம் நிறுவ நீங்கள் முயற்சித்து வருவது பாராட்டற்குரிய தொண்டு. பாரதி பெயர் கொண்ட கூரையின் கீழ் நிழலும் அமைதியும், கல்வியும் கலையும் கொழித்து விளையாட வேண்டும் என்னும் இச்சை ஒவ்வொரு தமிழருக்கும் இயல்பாகவே பிறக்கும்.

மண்டபத்திற்குக் கல் கொடுப்பவர் பலர் கொடுக்கட்டும். இதோ ஒரு அணில் பிடி மணல். பாரதி லட்சியம் பெருகுக.

இங்ஙனம்
கே. ஸ்ரீனிவாசன்



அபலையின் கண்ணீர்

கல்கி

எனக்கு ஞாபக சக்தி ரொம்ப அதிகம் உண்டு என்பது நேயர்களுக் கெல்லாம் தெரிந்திருக்கும் என்று எண்ணுகிறேன். உதாரணமாக, எனக்குப் பெயர் வைத்து நாற்பது வருஷத்துக்கு மேல் ஆயிற்று. ஆயினும் என்னுடைய பெயரை இன்னும் ஞாபகம் வைத்துக் கொண்டிருக்கிறேன்! என்னுடைய இளம் நண்பர் ஒருவர் எட்டு வருஷத்துக்கு முன்னால் பழக்கமானார். இரண்டாவது தடவை அவரைச் சந்தித்த போது, "என்ன மிஸ்டர் துரைசாமி! சௌக்யந்தானே?" என்று கேட்டேன். "சௌக்யந்தான். ஆனால் என் பெயர் துரைசாமி இல்லை; முத்துசாமி!" என்று அவர் சொன்னார். அப்புறம் நாலு தடவைக்கு மேல் என்னுடைய ஞாபகத்தை அவர் மாற்ற முயன்றும் பயன்படவில்லை. கடைசியில் அந்த மனிதர் "முத்துசாமி" என்ற பெயர் எழுதிய அவருடைய பௌண்டன் பேனாவை என்னிடம் ஞாபகார்த்தமாகக் கொடுத்து விட்டுப் போன பிறகுதான், பழைய "துரைசாமி" என்ற பெயரால் அவரை அழைப்பதை நிறுத்தினேன்.

இவ்வளவு அபார ஞாபக சக்தி உள்ள என்னிடம் சென்ற வாரத்தில் ஒரு மனிதர் திடீரென வந்து, "என்னைத் தெரிகிறதா?" என்று கேட்டார்.

அதற்குத் திட்டமான பதில் எதுவும் சொல்லாமல் ஒரு மாதிரி புன்னகை புரிய முயன்றேன்.

அந்த மனிதர் உரத்த சத்தம் போட்டு, "என்னைத் தெரிகிறதா என்று கேட்டேன்" என்றார்.

அதற்கு மேல் ஞாபக சக்தியோடு செவியின் சக்தியும் போய்விடப் போகிறது என்று பயந்து, "தெரிகிறது!" என்றேன்.

"என் பெயர் என்ன?" என்று கேட்டுவிட்டு அவர் புன்னகை புரிந்தார்.

"முகம் தெரிகிறது; ஆனால் பெயர்தான் கொஞ்சம் மறந்து போயிருக்கிறது!" என்று தடுமாறினேன்.

"சரியாய்ப் போச்சு! நான்தான் தேசத் தொண்டன் குமாரலிங்கம்; இப்போதாவது தெரிகிறதா?" என்று கேட்டார்.

என் தலை சுழலத் தொடங்கியது.

"அதாவது தமிழ் நாட்டிலுள்ள ஆயிரக் கணக்கான குமாரலிங்கங்களில் நானும் ஒருவன்" என்றார்.

போன உயிர் திரும்பி வந்தது.

"ரொம்ப சந்தோஷம்!" என்றேன்.

"சந்தோஷமாவது, மண்ணாங் கட்டியாவது! சந்தோஷப் படுவதற்கு என்ன இருக்கிறது? துக்கப் பட்டு இரத்தக் கண்ணீர் வடிக்கவல்லவா வேணும்?" என்று அந்த மனிதர் சொன்னபோது, உண்மையில் அவருடைய கண்கள் புதிதாய்ப் பழுத்த மிளகாய்ப் பழத்தைப்போல் சிவந்து விட்டன.

"நான் சொல்வது சரியா, இல்லையா?" என்று மறுபடியும் கேட்டார்.

"சத்தியமாய்ச் சரிதான்!" என்று ஒரு போடு போட்டுவிட்டு எழுந்தேன்.

"எங்கே எழுந்திருக்கிறீர்? உட்காரும்! இனிமேல் 'சோலைமலை இளவரசி' 'நீலமலை இளவரசி' என்பது போன்ற கற்பனைக் கதைகளை எழுத வேண்டாம். உண்மையாக நடந்த கதைகளையே எழுதும். உண்மைக் கதைகள்தான் கற்பனைக் கதைகளைவிட எவ்வளவோ ஆச்சரியமாயிருக்கின்றனவே!" என்று சொன்னார். நான் திரும்ப உட்கார்ந்ததும் அவர் தம் கதையைச் சொன்னார்.

மிக்க ஆச்சரியமான கதைதான்; சந்தேகமில்லை. அதனாலேயே இங்கு எழுதுகிறேன்.

முதற் பாகம்

மேற்படி தேசத் தொண்டருடைய பெயர்......அடாடா! மறந்தல்லவா போய் விட்டது? போனால் போகட்டும், சிவராஜன் என்று வைத்துக் கொள்ளலாம். அதனால் மோசம் ஒன்றும் முழுகிப் போகாது.

சிவராஜன் ஒரு தேசத் தொண்டன். பல முறை சிறை புகுந்திருக்கிறான். 1942-ல் அவன் சில காலம் யு. ஜி. யாக இருந்தான். (யு. ஜி. என்றால் தெரியு மல்லவா? அண்டர்-கிரௌண்ட் வீரன்; அதாவது தலை மறைவா யிருந்து போலீஸாரிடம் பிடிபடாமல் புரட்சி இயக்கத்தை நடத்தியவன்.) பிறகு தானாகவே போலீஸாரிடம் ஒப்புக் கொடுத்துக் கொண்டதின் பேரில் பன்னிரண்டு குற்றங்களுக்கு அவன் மேல் விசாரணை நடந்து, மொத்தம் 140 வருஷம் சிறைத் தண்டனை அடைந்தான்! இரண்டு வருஷம் சிறையிலிருந்துவிட்டு விடுதலை யடைந்து வெளியில் வந்தான்.

வெளியில் வந்த பிறகு சிவராஜன் தேசத்துக்கு வேறு ஒரு துறையில் தொண்டு செய்ய ஆரம்பித்தான். அதாவது 'கறுப்பு மார்க்கெட்'டில் புகுந்து துப்பறிந்து அநியாயக்காரர்களைக் கண்டு பிடித்துக் கொடுக்கும் வேலையைத் தொடங்கினான். அந்த ஊருக்கு அப்போது தனராஜன் என்பவர் போலீஸ் இன்ஸ்பெக்டராக வந்திருந்தார். அவர் ஒரு யோக்யமான மனிதர். அதோடு புதிதாக உத்தியோகத்துக்கு வந்தவர். கறுப்பு மார்க்கெட் அநியாயங்களைக் கண்டு பிடிப்பதில் அவருக்கும் மிக்க ஊக்கம் இருந்தது. எனவே, சிவராஜனும் தனராஜனும் கட்டாயமாகச் சந்திக்கும்படி நேர்ந்தது. ஒருவருக்கொருவர் உதவி செய்ய முடிந்தது. யு. ஜி. வீரனாக இருந்து அனுபவம் பெற்றிருந்த சிவராஜன் காற்று நுழையாத இடம் எல்லாம் நுழைந்து பதுக்கப்பட்ட சாமான்களைக் கண்டு பிடித்தான். கண்டு பிடித்துத் தனராஜனுக்குத் தகவல் கொடுக்க வேண்டியதுதான் தாமதம். உடனே தனராஜன் தமது போலீஸ் அதிகாரத்தைப் பிரயோகித்து அக்கிரமக்காரனுக்குத் தண்டனை கிடைக்கச் செய்வார்.

இப்படி ஒரு தேசத் தொண்டரும் போலீஸ் உத்தியோகஸ்தரும் சேர்ந்து வேலை செய்ததின் காரணமாகப் பொது மக்கள் மிக்க நன்மை அடைந்து இருவரிடத்தும் மிக்க நன்றி பாராட்டினார்கள்.

ஆனால் அந்த நன்றி பூரண மடைவதற்கு இன்னும் ஒரே ஒரு காரியம் பாக்கி யிருந்தது. அந்த ஊரில் கறுப்பு மார்க்கெட் அரசர் என்று பிரசித்தி பெற்றிருந்த துரைராஜா என்பவரை மாட்டி வைத்து அவருடைய கொட்டத்தை அடக்கும் காரியம் மிச்ச மிருந்தது.

மிஸ்டர் துரைராஜா பூர்வத்தில் சாதாரண மனிதரா யிருந்தார். ஒரு ஜில்லா போர்டு கண்டிராக்டரிடம் அவ்வப்போது குமாஸ்தா வேலை பார்த்து வந்தார். அதாவது கண்டிராக்டர் ஏதாவது பெரிய கண்டிராக்ட் வேலை எடுக்கும்போது இவருக்கும் குமாஸ்தா வேலை கிடைக்கும். அவருடைய முக்கியமான வேலை கூலி ஆட்களிடம் வேலை வாங்குவதும், அவர்களுக்குச் சம்பளப் பட்டுவாடா செய்வதுந்தான். இந்த வேலையை அவர் நடத்தி வந்த போதுதான் தமக்குள்ளே புதைந்து மறைந்து கிடந்த அபார திறமைகளை அறியலானார். கூலிக்காரர்களின் சம்பளத்தில் கமிஷன் வாங்கி அவரும் கொத்து மேஸ்திரியும் பங்கு போட்டு எடுத்துக் கொண்டதில் முதன் முதலாக அவருடைய திறமை பிரகாசித்தது. இன்னும் கொஞ்ச நாளில் அவருடைய கற்பனா சக்தியும் பயன்படத் தொடங்கியது. அதாவது புதிய புதிய பெயர்களைச் சிருஷ்டிப்பதில் கற்பனா சக்தி. இந்த விஷயத்தில் பெயர் பெற்ற நாவலாசிரியர்கள், கதாசிரியர்கள் எல்லாரும் அவரைப் பார்த்துப் பொறாமைப்பட வேண்டியதுதான். 90 கூலி ஆட்கள் ஒரு தினம் வேலை செய்தால், இன்னும் ஒரு பத்துப் பன்னிரண்டு பெயர்களை வெகு சுலபமாகச் சிருஷ்டி செய்து சேர்த்து விடுவார். கூலி ஆட்களையும் கூலிப் பெண்களையும் போலவே கை யெழுத்துக் கூடப் போட்டு விடுவார்.

இப்படி யெல்லாம் துரை ராஜாவின் கற்பனைத் திறமையும் வர்த்தகத் திறமையும் பொருள் ஈட்டும் திறமையும் வளர்ந்து கொண்டிருந்த போது, அதை யெல்லாம் நன்கு பிரகாசிக்கச் செய்வதற்காகவே ஏற்பட்டது போல், இரண்டாவது உலக யுத்தம் ஆரம்பமாயிற்று. துரைராஜாவின் சக்கிர தசையும் அதே சமயத்தில் தொடங்கிற்று. கண்டிராக்டு உலகத்தில் தோலைக் கடித்துத் துருத்தியைக் கடித்து வேட்டைநாய் ஆனார்! இராணுவத்தில் சேருகிறவர்கள்

ரயில் பிரயாணம் போகும் மார்க்கத்தில் ஒரு ரயில்வே ஸ்டேஷனில் அவர்களுக்கு ரொட்டியும் டீயும் ஸப்ளை செய்யும் கண்டிராக்ட் முதலில் எடுத்தார். பிறகு இராணுவத்துக்கு வெங்காயம், கோழி முட்டை, ஆடுமாடு முதலிய ஆகாரப் பொருள்கள் சப்ளை செய்யும் கண்டிராக்ட் எடுத்தார். பிறகு 'ஏரோடிராம்' கட்டும் கண்டிராக்ட் எடுத்தார். பிறகு யுத்த காலத்தில் கிராக்கியாகக்கூடிய பொருள்களை யெல்லாம் அந்த ஜில்லாவில் வாங்கித் திரட்டி முடக்கினார். பிறகு இரண்டு மூன்று ஜில்லாக்களில் அந்தமாதிரி சாமான்களை முடக்கி வைக்கத் தொடங்கினார். இது காரணமாகச் சாமான் தேவையுள்ளவர்கள் — இராணுவத்தார் உள்பட — அவர் வைத்த விலைக்கே வாங்க வேண்டியதாயிற்று.

யுத்தக் கடன்களும் நன்கொடைகளும் ஏராளமாகக் கொடுத்து ஜில்லாவிலுள்ள சர்க்கார் உத்தியோகஸ்தர்களை யெல்லாம் அவர் வசப்படுத்திக் கொண்டார். பிறகு, சாக்ஷாத் ஹிஸ் எக்ஸெலென்ஸி கவர்னர் துரை அவர்களே ஸ்ரீ துரைராஜாவின் வீடு தேடி வந்து அவருடைய கையைப் பிடித்துக் குலுக்கும் பாக்கியத்தைப் பெற்றார். கவர்னர் துரையும் தாமும் பக்கத்திலே நின்று போட்டோ எடுத்துக் கொண்டு அந்தப் போட்டோவைத் தமது புதிய பங்களா முகப்பிலே மாட்டி அபூர்வ வேலைப்பாடமைந்த சரிகை மாலை ஒன்றை அந்தப் படத்தின் மேலே போட்டார்.



ஆகக்கூடி யுத்தம் முடிந்த சமயத்தில் ஸ்ரீ துரைராஜாதான் அந்த ஜில்லாவின் உண்மையான ராஜா என்று சொல்லும் நிலைமை ஏற்பட்டது. கலெக்டர் என்ன, ஜில்லா ஜட்ஜு என்ன, ஜில்லா போலீஸ் சூபரின்டெண்ட் என்ன, இவர்கள் எல்லாம் எந்தக் காரியத்துக்கும் ஸ்ரீ துரைராஜாவைக் கலந்து கொள்வது ஒரு சம்பிரதாயமாயிற்று. அவர்களுக் கெல்லாம் எந்தக் காரியம் ஆக வேண்டுமானாலும், எந்த சாமான் தேவை யென்றாலும் ஸ்ரீ துரைராஜாவையே கேட்பது வழக்கமாயிற்று. ஜில்லா கலெக்டர் துரையின் குமாரிக்குத் திருமணம் நடந்தபோது, எல்லா ஏற்பாடுகளையும் வகித்து நடத்தியவர் ஸ்ரீ துரைராஜா அவர்கள்தான். கலியாணப் பந்தலில் அக்கிர ஸ்தானம் வகித்து, வந்த விருந்தினரை முன்னால் நின்று வரவேற்று உபசரித்தவரும் அவரேதான்.

இது மட்டுமா? யுத்தம் முடிந்து சட்ட சபைத் தேர்தலுக்கு ஆட்கள் நிறுத்தப் பட்டபோது, ஸ்ரீ துரைராஜா எப்பேர்ப் பட்ட முன் யோசனைக்காரர் என்பது வெளியாயிற்று. சட்ட சபையில் தமக்கு வேண்டியவர்கள் இருப்பது எத்தனையோ விதத்தில் உபயோகமாயிருக்கு மென்று தெரிந்து அதற்குரிய முயற்சிகளைச் செய்யவேண்டிய விதத்தில் செய்தார். கடைசியாக, அவர் பொர்க செய்த அபேட்சகர்கள்தான் காங்கிரஸினால் ஒப்புக்கொள்ளப்பட்டார்கள் என்றால், ஸ்ரீ துரைராஜாவின் செல்வாக்கைப்பற்றி வேறு என்ன சொல்ல வேண்டும்?

அப்பேர்ப்பட்ட அபார சக்தி வாய்ந்த மகா திறமைசாலியை, பிளாக் மார்க்கெட்டில் பிடித்து மடக்கிவிடவென்று தேசத் தொண்டனான சிவராஜனும், போலீஸ்

அதிகாரி தனராஜனுமாகச் சேர்ந்து சதியாலோசனை செய்தார்கள். மத்தயானையோடு சண்டை போடுவதற்கு இரண்டு பூனைகள் போர் முரசு கொட்டிக் கொண்டு புறப்பட்டது போலவும், ராட்சதக் காட்டுப் பூனையோடு போராடுவதற்கு இரண்டு சுண்டெலிகள் தடபுடலாகக் கொடி போட்டுக் கொண்டு கிளம்பியது போலவும், எவரஸ்டு சிகரத்தை இடித்துத் தரைமட்ட மாக்குவோம் என்று இரண்டு சிட்டுக் குருவிகள் சிறகை அடித்துக் கொண்டு உயரப் பறக்கத் தொடங்கியது போலவும் தேசத் தொண்டன் சிவராஜும் போலீஸ் அதிகாரி தனராஜும் சேர்ந்து, கறுப்பு மார்க்கெட்டின் எவரெஸ்ட் சிகரமான கண்டிராக்டர் துரைராஜைக் கேஸில் மாட்டி விடுவது என்று தீர்மானித்தார்கள். அப்படித் தீர்மானித்து அந்தக் காரியத்தில் இறங்கினபோது தங்களுக்கு முன்னால் எப்பேர்ப்பட்ட இடையூறுகள், தடங்கல்கள், அபாயங்கள் எல்லாம் காத்திருக்கின்றன என்பதை அவர்கள் கொஞ்சம் கூடத் தெரிந்து கொள்ளவில்லை.

கண்டிராக்டர் துரைராஜ் அவர்களின் முன் யோசனையைப் பற்றி ஏற்கெனவே குறிப்பிட்டிருக்கிறோம். வரப்போகிறது ஜனங்களின் ராஜ்யம் என்பதைத் தெரிந்து கொண்டு அவர் அந்த ஜில்லா எம். எல். ஏ.க்களில் பலர் தம்முடைய ஆட்களாகவே இருக்கும்படியாக ஏற்பாடு செய்திருந்தார். தம்முடைய ஆட்களாயில்லாமல் வந்து விட்ட சிலரையும் தேர்தலுக்குப் பின்னர் சரிப்படுத்தியிருந்தார். எம். எல். ஏ.க்கள் மூலமாகச் சிபார்சு பெற்றுக் கிடைக்கும் விசேஷ வியாபார பெர்மிட்டுகள் எல்லாம் கை மாறி மாறிக் கடைசியாகத் தம்முடைய கைக்கே வந்து சேரும்படி பார்த்துக் கொண்டார். ஜில்லா அதிகாரிகள், எம்.எல்.ஏ.க்கள் ஆகிய செல்வாக்குள்ள மனிதர்கள் ஒவ்வொருவருக்கும் என்ன காரியம் ஆக வேண்டியிருந்தாலும் செய்து கொடுத்து அவர்களுடைய பூரண விசுவாசத்தையும் ஒத்துழைப்பையும் பெற்றிருந்தார்.

ஜில்லா ஜட்ஜின் வீட்டில் சர்க்கரை இல்லையா? கண்டிராக்டர் துரைராஜுக்



குச் சொல்லி அனுப்ப வேண்டியதுதான். அரை மணிக்கு சர்க்கரை அடுத்த நிமிஷத்தில் வந்துவிடும். முனிசிபல் சேர்மன் வீட்டில் உளுந்து இல்லையா? கண்டிராக்டர் துரைராஜின் காதில் போட வேண்டியது தான். அந்த நிமிஷமே அரை மூட்டை உளுந்து வந்துவிழும்! உள்ளூர் எம். எல். ஏ. காங்கிரஸ் தலைவருக்கு விருந்து கொடுக்கிறாரா? அதற்கு வேண்டிய சகல சாமக்கிரியைகளும் முதல் நாளே தயாராய் வந்து விடும். ஜில்லா ஆஸ்பத்திரியின் தலைமை டாக்டரின் வீட்டுக்குத் துணி வேணுமா? இதோ சாற்பது கஜம்!

இப்படியெல்லாம் துரைராஜ் தமது செல்வாக்கை அபரிமிதமாக வளர்த்துக் கொண்டிருந்தார். எனவே, சிவராஜும் தனராஜுமாகச் சேர்ந்து துரைராஜின் பேரில் கண் வைத்துப் பொறி வைத்திருக்கிறார்கள் என்று தெரிந்ததோ இல்லையோ, அப்பப்பா! அவர்கள் உள்ளான கிரப்பர்ந்தத்துக்கு அளவேயில்லை.

ஜில்லா மாஜிஸ்ட்ரேட்டும் ஜில்லா போலீஸ் ஸுபரிண்டெண்டும் ஒரு நாள் இதைப் பற்றி விசாரித்த பிறகு, அவர்கள் இருவருடைய முன்னிலையிலும் போலீஸ் இன்ஸ்பெக்டர் தனராஜன் அழைக்கப்பட்டார். கண்டிராக்டர் துரைராஜ் மேலே மந்திரி சபை வரையில் செல்வாக்குள்ளவரென்றும், அவர் விஷயத்தில் ரொம்ப ஜாக்கிரதையாக இருக்க வேண்டும் என்றும், போதுமான சாட்சியம் இல்லாமல் கேஸ் லீஸ் என்று கண்டுபிடித்தால் ஜில்லா அதிகாரிகள் எல்லாருக்குமே கெட்ட பெயர் வரும் என்றும், அவருடைய உத்தியோகத்துக்கும் ஆபத்து வரலாமென்றும் இரண்டு பெரிய உத்தியோகஸ்தர்களும் சேர்ந்து எச்சரிக்கை செய்தார்கள். அதையெல்லாம் தனராஜ் பொறுமையுடன் கேட்டுக் கொண்டார். பிறகு அவர் அந்த இரண்டு பெரிய அதிகாரிகளுக்கும் மேற்படி எச்சரிக்கை செய்ததற்காக மனப் பூர்வமாக நன்றி கூறினார். "ரொம்ப ஜாக்கிரதையாகவே காரியம் செய்கிறேன். சரியான தடையமும் சாட்சியமும் இல்லாமல் அவசரப்பட்டு ஒன்றும் செய்ய மாட்டேன். கூடிய சீக்கிரத்தில் கையும் களவுமாகப் பிடித்து விடலாம் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது!" என்று சொல்லி விட்டு வெளியேறினார். அவர் வெளியேறியதும், பெரிய உத்தியோகஸ்தர்கள் இருவரும் உதட்டைப் பிதுக்கிக் கொண்டு, ஒருவருக்கொருவர் சமிக்ஞை பாஷையினால் பேசிக் கொண்டார்கள்.

தேசத் தொண்டன் சிவராஜனை மேற்சொன்னதைக் காட்டிலும் அதிக கடுமையான தீவிரமான செல்வாக்குப் பிரயோகத்துக்கு உள்ளாகி வந்தான்.

அந்த ஜில்லாவின் பெரிய பெரிய காங்கிரஸ் பிரமுகர்கள் நாலா புறமும் வளைந்து கொண்டு அவனைத் தாக்கினார்கள். "இந்த மாதிரி காரியங்கள் நாடெங்கும்தான் நடக்கின்றன. துரைராஜ் நல்ல மனுஷர். தினம் பொழுது விடிந்தால் ஏதாவது நல்ல காரியத்துக்குப் பணம் வேண்டுமானால் அவர் முகத்திலேதானே விழிக்க வேண்டியிருக்கிறது? அவரைச் சும்மா விட்டு விடப்பா!" என்றார்கள்.

பிறகு, காங்கிரஸ் எம்.எல்.ஏ.க்கள் வந்து தாக்கினார்கள். அதற்குப் பிறகு இன்னும் பெரிய இடத்துத் தாக்குதல் ஏற்பட்டது. காங்கிரஸ் மந்திரி ஒருவர் சுற்றுப் பிரயாணத்தின் போது அந்த ஊருக்கு வந்து சேர்ந்தார். தேசத் தொண்டர் சிவராஜனுக்குத் தம்முடைய பேட்டியை அளித்தே தீரவேண்டும் என்றார். பெரிய மனிதர்கள் வந்து சிவராஜனைக் கைப்பிடியாக அழைத்துக் கொண்டு போனார்கள். சிவராஜன் வந்து விட்டான் என்று கேட்டதும், மந்திரி தம்முடனிருந்த அனைவரையும் போகச் சொல்லி விட்டுச் சிவராஜனுக்கு மட்டும் அந்தரங்கமாக பேட்டியளித்தார். அந்த பேட்டியில், இந்த மாகாணத்தில் காங்கிரஸ் மந்திரி சபைக்கு ஏற்பட்டிருக்கும் பேராபத்தைப் பற்றி எடுத்துச் சொன்னார். காங்கிரஸ் மந்திரி சபை கவிழ்ந்தால் காங்கிரஸின் கௌரவமே பறி போய் விடும் என்பதை வற்புறுத்தினார். காங்கிரஸ் மந்திரி சபையை நிலைநாட்ட எம். எல். ஏ.க்களின் வோட்டு வேண்டியிருக்கிறதென்றும், அந்த ஜில்லா எம். எல். ஏ.க்களில் பலர் மந்திரி சபையை ஆதரிப்பவர்கள் என்றும், ஆகையால் அவர்களுடைய செல்வாக்குக் குறையும்படியாக எந்தக் காரியமும் இந்த சமயத்தில் செய்யக் கூடாதென்றும் தெரிவித்தார். சுற்றி வளைத்துக் கடைசியில் விஷயத்துக்கு வந்தார். "சிவராஜன்! அநுபவஸ்தனுடைய என்னுடைய வார்த்தையைக் கேளுங்கள். மனிதர்கள் என்று இருந்தால் குறைகள் இருக்கத்தான் இருக்கும். எல்லாருமே மகாத்மா காந்தியாக இருந்துவிட முடியுமா? அப்படியிருந்தால் சுயராஜ்யத்துக்

காக இவ்வளவு கஷ்டப்படுவானேன்? நமக்குள்ளேயே ஒருவர் குற்றத்தை ஒருவர் எடுத்துக் காட்டிக் கொண்டேயிருந்தால், அதற்கு முடிவே கிடையாது. சமய சந்தர்ப்பங்களைப் பொறுத்தே நல்லது கெட்டதைத் நிர்மானிக்க வேண்டும். கறுப்பு மார்க்கெட்டைக் கண்டு பிடிப்பதில் தங்களுடைய ஆர்வத்தை ரொம்பவும் பாராட்டுகிறேன். ஆனால் கொஞ்ச நாளைக்கு அதை நிறுத்திவையுங்கள். நிறுத்தி வைத்தால் காங்கிரஸின் கௌரவத்தை நிலைநாட்டப் பெரிதும் உதவி செய்ததாகும்!" என்று பிரசங்கத்தை முடித்தார்.

எல்லாவற்றையும் கேட்டுக் கொண்டிருந்த சிவராஜன், "தயவு செய்து மன்னிக்க வேண்டும். காங்கிரஸை விடப் பெரிய ஸ்தாபனம் ஒன்று இருக்கிறது. சுயராஜ்யத்தை விடப் பெரிய இலட்சியமும் ஒன்று இருக்கிறது. அந்த ஸ்தாபனமும் இலட்சியமும் மனச் சாட்சிதான். மனச் சாட்சிக்கு விரோதமாக என்னால் ஒன்றும் செய்ய முடியாது!" என்று சொல்லிப் பெட்டியைச் சட்டென்று மூடித்துக் கொண்டு வெளிக் கிளம்பினான்.

மந்திரி வந்து விட்டுப் போன மூன்றாம் நாள் மாலை தேசத்தொண்டன் சிவராஜனைப் பார்ப்பதற்காக அவனுடைய அறைக்கு தனராஜ் வந்தார். ஒருவருக்கொருவர் தங்களுடைய சமீப காலத்து அநுபவங்களைச் சொல்லிக் கொண்டார்கள்.

கடைசியில், "நம்முடைய திட்டத்தில் ஏதாவது மாறுதல் உண்டா?" என்று தனராஜ் கேட்டார்.

"ஏன் இந்தக் கேள்வி? மாறுதல் எதற்காக ஏற்படவேண்டும்?" என்றான் சிவராஜ்.

"ஒருவேளை இவ்வளவு எம். எல். ஏ.க்கள், காங்கிரஸ் பிரமுகர்கள், இரண்டு பார்லிமெண்டரி செக்ரடரிகள், ஒரு மந்திரி இவ்வளவு பேரும் சொல்லியிருக்கிறார்களே? அவர்களுடைய பேச்சுக்கு மரியாதை செய்ய நீர் எண்ணவா மல்லவா?" என்றார் தனராஜ்.

"ஒரு ஜில்லா மாஜிஸ்ட்ரேட்டும் ஒரு ஜில்லா சூபரிண்டெண்டும் சொன்ன வார்த்தைக்கு நீர் மரியாதை செய்யாதபோது நான் மட்டும் மந்திரியின் பேச்சுக்கு ஏன் மரியாதை செய்ய வேண்டும்?" என்று சிவராஜ் திருப்பிக் கேட்டான்.

"அப்படியானால் சரி; ஆனாலும் முன்னைப் போல் நீர் அவ்வளவு உற்சாகமாயில்லையே என்று கேட்டேன்!" என்றார்.

"இல்லை, இல்லை! என்னுடைய உற்சாகக் குறைவுக்கு வேறு காரணம் இருக்கிறது" என்றான் சிவராஜ்.

"அது என்ன காரணமோ?"

"சொந்த விஷயம்; தங்களிடத்தில் கூடச் சொல்ல முடியாதது."

"அப்படியானால் நானும் அதைக் கேட்க விரும்பவில்லை," என்று இன்ஸ்பெக்டர் தனராஜ் சொல்லிவிட்டு மௌனமாயிருந்தார். அவர் எழுந்திருக்கும் வழியாகக் காணவில்லை. எனவே, சிவராஜ் சிறிது படபடப்புடனே "சரி; தாங்கள் போய் மற்றக் காரியங்களைப் பாருங்கள். நாளை இரவு பதினொரு மணிக்குக் குறிப்பிட்ட இடத்தில் சந்திப்போம்!" என்றான்.

மறுநாள் நள்ளிரவில், கண்டிராக்டர் துரைராஜின் கள்ள மார்க்கெட் வியாபாரத்தைக் கையும் களவுமாய்ப் பிடிக்க இருவரும் சேர்ந்து திட்டம் போட்டிருந்தார்கள். குறிப்பிட்ட ஓர் இடத்தில் துரைராஜ் கள்ள மார்க்கெட்டுக்கு அனுப்பும் சாமான் வண்டிகளைப் பிடித்து விடுவதென்று ஏற்பாடு செய்தார்கள். வண்டிகள் புறப்படும் இடத்திலிருந்து தொடர்ந்து வரக் காங்கிரஸ் தொண்டர்களும் போலீஸ் சேவகர்களும் ஒருவருக்கொருவர் தெரியாத முறையில இருவராலும் நியமிக்கப்பட்டிருந்தார்கள்.

இவ்வளவு முக்கியமான காரியம் நாளை இரவு நடைபெறுவதற்கு இருக்கும்போது இன்றைக்குச் சிவராஜ் தம்மை வீட்டுக்கு அனுப்புவதில் இவ்வளவு துரிதப்பட்டது இன்ஸ்பெக்டர் தனராஜுக்கு ஆநந்தமாகவில்லை! எனினும், சிவராஜ் அவ்விதம் சொன்னவுடனே அவர் கிளம்பி விட்டார். அறையின் வாசற்படியைத் தாண்டும்போது கடைக் கண்ணால் திரும்பிப் பார்த்தார். சிவராஜின் கையில் ஒரு கடிதம் இருப்பதைக் கண்டார். மனதிற்குள் "ஓஹோ! காதல் கடிதம் போல அல்லவா இருக்கிறது?" என்று எண்ணமிட்டுக் கொண்டே மாடிப் படிகளின் வழியாகக் கீழே இறங்கினார்.

ஒரு பெரிய மண்டிக் கடையின் மேல் மாடியில் இருந்த தனி அறை ஒன்றில் தேசத் தொண்டன் சிவராஜ் ஜாகை வைத்துக் கொண்டிருந்தான். அந்த அறைக்கு ஏறும் மச்சுப்படிகள் மண்டியின் பக்க வாட்டிலே சென்ற குறுகிய சந்தில் அமைக்கப்பட்டிருந்தன. இன்ஸ்பெக்டர் தனராஜ் மேற்படி மச்சுப்படிகளில் இறங்கிச்

சந்தின் வழியாக நடந்து பெரிய வீதியை அடைந்தபோது அதே சந்தில் இளம் பெண் ஒருத்தி பிரவேசிப்பதைப் பார்த்துத் திடுக்கிட்டார். வீதி திரும்பியதும் சற்று நின்று சந்திலே சென்ற பெண் என்ன செய்கிறாள் என்று பார்த்தார். தாம் இறங்கிவந்த மச்சுப் படிகளில் அந்தப் பெண் ஏறுவதைக் கண்டார். உடனே அவருடைய முகத்தில் ஒரு புன்னகை மலர்ந்தது. "அடாடா! இந்தச் சிவராஜைப் பரம யோக்கியன் என்று எண்ணிக் கொண்டிருந்தோமே? இப்படி ஒரு விவகாரம் இவன் வைத்துக் கொண்டிருக்கிறானா? அதனாலேதான் நம்மை அனுப்பி விடுவதற்கு அவ்வளவு அவசரப்பட்டான் போலும்!" என்று எண்ணிக் கொண்டார். வீடு நோக்கிச் சென்ற இன்ஸ்பெக்டர் தனராஜின் நடை வழக்கம் போல் அவ்வளவு வேகமாக இல்லை. நடு நடுவே தயங்கி நின்றார். ஆயினும் பிடிவாதமாக முன் வைத்த காலைப் பின் வாங்காமல் வீடுபோய்ச் சேர்ந்தார்.

இன்ஸ்பெக்டர் தனராஜ் அறையின் வாசற்படியைத் தாண்டிக்கொண்டிருக்கும் போதே சிவராஜ் மேஜைமேல் புத்தகத்துக்குள் வைத்திருந்த கடிதம் ஒன்றை எடுத்துப் படிக்கத் தொடங்கினான். ஏற்கெனவே பல முறை அவன் படித்த கடிதந்தான் அது. ஆயினும் அடங்காத ஆர்வத்துடன் அதை மறுபடியும் படித்தான். கடிதத்தில் பின்வருமாறு எழுதியிருந்தது:—

"தியாக வீர தேசத் தொண்டரான சிவராஜ் அவர்களுக்கு நமஸ்காரம்.

ஐயா!

நான் ஒரு அபலை ஸ்திரீ. அதிலும் பள்ளிக்கூட ஆசிரியை. உற்றார் உறவினர் இல்லாத அநாதை. குழந்தைப் பிராயத்தில் கணவனை இழந்த துர்ப்பாக்கியசாலி. ஏதோ பிறரை அண்டிப் பிழைக்காமல் சுதந்திர வாழ்வு நடத்த எண்ணிப் பள்ளிக்கூட ஆசிரியை ஆனேன். சில காலம் வரையில் என்னுடைய கடமையைச் செய்து கொண்டு சந்தோஷமாகத்தான் காலந் தள்ளினேன். ஆனால் சமீபகாலத்தில் ஒரு பெரிய ஆபத்துக்கு உள்ளாகியிருக்கிறேன். பெரிய பதவியில் உள்ள ஒருவர், பெரிய பொறுப்பு வகிக்கிறவர், என்னைத் தம்முடைய தீய எண்ணத்துக்கு உட்படுத்த முயன்று வருகிறார். அதனால் நான் அடைந்துள்ள மனத் துயரையும் வேதனையையும் சொல்ல முடியாது. அவ்வளவு பெரிய மனிதரை இந்த ஏகாங்கியான அபலைப் பெண்ணால் எத்தனை நாள் எதிர்த்து நிற்க முடியும்? அவருடைய ஆசைக்கு இணங்கா விட்டால் என்னுடைய பிழைப்பைக் கெடுத்து விடுவதாகவும், என்னை இந்த ஊரைவிட்டுத் துரத்தி விடுவதாகவும் பயமுறுத்துகிறார்.

திக்கில்லாத ஏழைப் பெண்ணாகிய நான் வேறு கதியில்லாமல் தங்களுடைய உதவியை நாடத் தீர்மானித்தேன். தேசத்துக்காகத் தாங்கள் எவ்வளவோ தீரச் செயல்கள் புரிந்திருக்கிறீர்கள் என்று கேள்விப்பட்டிருக்கிறேன். இப்போதும் பொது நன்மைக்காக எவ்வளவோ துணிச்சலான காரியங்கள் செய்து வருவதாகக் கேள்விப்படுகிறேன்.

இந்த ஏழையின் அபயக் குரலுக்குச் செவி சாய்க்கக் கூடாதா? இந்த அபலையின் கண்ணீரைத் துடைக்கக் கூடாதா?

இதற்கு மேல் கடிதத்தில் எழுத மனமில்லை; எழுதுவதற்குத் தைரியமும் இல்லை.

நாளை மாலை ...... மணிக்குத் தங்களைத் தங்கள் அறையில் தனியாகச் சந்திப்பதற்கு அநுமதி கோருகிறேன். அப்போது என் துயரத்தை விவரமாக நேரில் சொல்வேன். அச்சமயம் தங்களைத் தவிரத் தங்கள் அறையில் வேறு யாருமில்லாமல் பார்த்துக் கொள்ளக் கோருகிறேன்.

என் அபயக் குரலைக் கேட்டு என்னைத் தாங்கள் ரட்சித்தாலும் சரி; கைவிட்டாலும் சரி; எனக்கு வேறு கதி கிடையாது.

இப்படிக்கு,
ஒரு திக்கற்ற ஆசிரியை.

மேற்படி கடிதத்தை ஒன்பதாவது தடவையாகப் படித்துக் கொண்டிருந்த சிவராஜ் வாசற்படிக் கதவு கிறீச்சிடும் சத்தம் கேட்டு நிமிர்ந்து பார்த்தான்.

கண்ணில் முத்துப்போல் துளித்திருந்த கண்ணீருடன் வாசற்படியில் ஒரு பெண் நின்று கொண்டிருந்தாள். அவள்தான் மேற்படி கடிதத்தை எழுதிய அபலைப் பெண் என்பதை உடனே சிவராஜ் உணர்ந்து கொண்டான். (தொடரும்)

கல்கி
வாரப் பதிப்பு

★ **இந்தியா & சிலோன்**


வருஷச் சந்தா	...	ரூ.	13—0—0
ஆறு மாதச் சந்தா	...	ரூ.	6—8—0
தனிப் பிரதி	...	அணா	0—4—0

வெளி நாடு

வருஷச் சந்தா	...	ரூ.	16—4—0
ஆறு மாதச் சந்தா	...	ரூ.	8—2—0
தனிப் பிரதி	...	அணா	0—5—0

★ குறிப்பு:
சந்தா நேயர்கள் நமக்குக் கடிதம் எழுதும்போது, தங்கள் சந்தா நம்பரை அவசியம் குறிப்பிடவும்.

மானேஜர், கல்கி காரியாலயம், சென்னை.


எந்த ரஸ்தாவுக்கும்
எவ்வளவு பாரம் தாங்குவதற்கும்
அழுத்தமான
டயர்கள்
அத்தியாவசியம்
டன்லப் ஜயன்ட்கள்
TRADE MARK
DK-300TM

டீடீடியின் திறன் முழுதும்..

நியோஸிடில் உள்ளது

10% டீ. டீ. டி பௌடர்

இது கெய்கி தயாரிப்பு

O/K 4019 TAM.

★ நியோஸிட் நீடித்த சக்தியுள்ளது

★ அண்டும் சகல பூச்சிகளும் நாசமடையும்

★ மானிடர்களுக்கு கெடுதலில்லாதது

தென் இந்தியாவுக்கு விநியோகஸ்தர்கள்:
மெஸர்ஸ்
அடிஸன் அண்ட் கோ., லிட்.,
மௌண்ட் ரோட், மதராஸ்

DDT Geigy DDT

மைசூர் சமஸ்தானம், [illegible] ஜில்லாக்களுக்கு விநியோகஸ்தர்கள்:
மெஸர்ஸ் முகமத் ரஹீம் கனீ,
99-B, [illegible] ரோட்,
பெங்களூர் ஸிடி.

கெய்கி இன்வெஸ்ட்மெண்ட்ஸ் லிட்., நெவில் ஹவுஸ் [illegible] ரோட், பெலார்ட் எஸ்டேட், பம்பாய்

விநியோகஸ்தர்கள்: மைசூர் சமஸ்தானத்திற்கும், [illegible] ஜில்லாக்களுக்கும்: மெஸர்ஸ். மகமது ரஹீம் கனீ. 99-B, [illegible] ரோடு, பெங்களூர் ஸிடி.

தென்னிந்தியாவிற்கு: மெஸர்ஸ். அடிஸன் அண்டு கோ., லிமிடெட், மவுண்டு ரோடு, மதராஸ்.

ஏழையின் தியாகம்

☆ கு. ராஜகோபால் ☆

கிணற்றைச் சுற்றி நான்கைந்து பெண்கள் நின்றுகொண்டிருந்தனர். இருப்பதோ ஒரே ஒரு உருளை. ஆகவே ஒவ்வொருவராகத்தானே தண்ணீர் இறைக்க வேண்டும்? நான்கைந்து பெண்கள் — அதுவும் கிராமத்துப் பெண்கள் — கூடியிருக்கும் இடத்திலே நிசப்தமா நிலவும்? வீட்டுக்கு விருந்து வந்தது, கணவன் குடித்து விட்டு அடித்தது போன்ற பல விஷயங்கள் அம்பலத்தில் வந்து ஆடிக்கொண்டிருந்தன.

ராமாத்தாளுக்குத் திடீரென்று ஏதோ ஒரு விஷயம் ஞாபகம் வந்தது போலத் தோன்றியது. விரலைக் கடித்துக் கொண்டாள். இடுப்பிலிருந்த குடத்தைக் கிணற்றின் கைப்பிடிச் சுவரின் மேல் வைத்து விட்டு வீட்டை நோக்கி விறுவிறு வென்று நடந்தாள். தோழிகள் ஆவலோடு கேட்ட கேள்விகளுக்குப் பதிலே சொல்லாமல் மௌனமாகச் சென்றது மற்றவர்களுக்கு மிகவும் ஆச்சரியத்தையே கொடுத்தது.

ராமாத்தாளுடைய மனம் ஒரு நிலையில் இல்லை. கைகால் பதறியது. நெஞ்சு தடதட வென்று அடித்துக் கொண்டது. முகத்தில் விவரிக்க இயலாத ஒருவித பயம் குடிகொண்டு விட்டது. வீட்டுக்கும் கிணற்றுக்கும் இடையே இருந்த இருநூறு கஜ தூரமும் இருநூறு மைல்களாகத் தோன்றியது அவளுக்கு. எப்படியோ சமாளித்துக் கொண்டு வீட்டை நோக்கி நடந்து கொண்டிருந்தாள். அவளுடைய மனதில் ஒரு பயங்கர எண்ணம் தோன்றி அவளுடைய கால்களைப் பின்னியது. "சாமி, சங்கிலிக் கறுப்பா! என்னை இந்தத் தடவை காப்பாற்றி விடு! அவன் இதுவரை வீட்டுக்குத் திரும்பி வராமல் இருந்தால் உனக்குப் பால் பொங்கல் இடுகிறேன்!" என்று நெஞ்சார வாயார வேண்டிக் கொண்டாள்.

அப்பாடா! கடைசியில் வீட்டு வாசலை அடைந்து விட்டாள். பாதித் திறந்திருந்த கதவைக் கண்டதும் கொஞ்ச நஞ்சமிருந்த தைரியமும் போய் விட்டது. சங்கிலிக் கறுப்பன் அவளுடைய பால் பொங்கலுக்கு ஆசைப்பட்டு அவளைக் காப்பாற்ற முன் வரவில்லை. ராமாத்தாளுக்கு உலகமே சுற்றுவது போலத் தோன்றியது. இருந்தாலும் தைரியத்தைக் கைவிடாமல் உள்ளே சென்றாள். ஆம், அவள் எது கூடாதென்று பிரார்த்தித்துக் கொண்டாளோ, அது நடந்தே விட்டது.

ராமாத்தாள் சமையலறையிலுள்ள சட்டி பானைகளை ஒழுங்காக அடுக்கித்தான் வைப்பது வழக்கம். அவளுடைய வீடு ஒரு சிறு குடிசைதான் என்றாலும் அதை அவள் வெகு சுத்தமாகவே வைத்திருந்தாள். எந்தச் சாமானையும் அவள் அஜாக்கிரதையாகக் கீழே வைத்ததே கிடையாது. அப்படியிருந்தும் அன்று அவளுடைய துரதிருஷ்டம், அதை — அவளுடைய வாழ்வின் இன்பத்தையே உருக்கி வார்க்கப்பட்டிருந்த அந்த அபூர்வ வஸ்துவை மறந்து போய்க் கீழே விட்டு விட்டுப் போய்விட்டாள். அப்படி என்ன, அவ்வளவு விலை யுயர்ந்ததா, அது? அதை வேறொருவர் எடுத்துக் கொண்டு போய் விட்டால் குடி முழுகிப் பெருத்த நஷ்டம் வந்து விடுமா? அதெல்லாம் ஒன்றுமில்லை. அதை இழப்பதனால் பெருத்த நஷ்டம் ஏற்பட்டு விடுமென்று பயந்து ஓடி வரவில்லை, அவள். இன்றைக் கெல்லாம் இருந்தால் அதன் மதிப்பு ஒரு ரூபாய்க்கு மேல் இராது. அவள் ஓடி வந்தது பொருள் நஷ்டத்தைக் குறித்ததல்ல. ஆனால்......

அவள் உள்ளே நுழைவதற்கும் அவளுடைய சாத்தி வேலாத்தாள் அந்த அருமையான வஸ்துவைக் குனிந்து எடுப்பதற்கும் சரியாக இருந்தது. வேலாத்தாள் அந்த அபூர்வ வஸ்துவைக் கையில் எடுத்துக் கொண்டு நிமிர்ந்தாள். எதிரே ராமாத்தாள் பயமே உருவெடுத்தது போல் நிற்கக் கண்டாள். ராமாத்தாள் ஏதோ சொல்ல நினைத்தாள் என்பது அவளுடைய முகத்திலிருந்து தெரிந்து விட்டது. ஆனால் அவளால் பேச முடியவில்லை. நாக்கு வறண்டுபோய் ஒட்டிக் கொண்டு விட்டது.

"ஏ பொம்பளை! எது இந்த மோதிரம்? இத்தினி நாளா நான் பார்த்ததில்லையே!" என்றாள் வேலாத்தாள் அதிகாரத்துடன்.

ராமாத்தாள் கண்களிலிருந்து கலகல வெனக் கண்ணீர் வழிந்தது. சாத்திக்கு ஒன்றுமே தோன்றவில்லை. எதற்கு அவள் அழுகிறாளென்பதை அவள் உணர முடியாமல், அவளுடைய கண்ணீரைக் கண்டு இரங்கிப் பக்கத்தில் வந்து பரிவுடன் கேட்டாள் :

“ராமாத்தா! ஏன் இப்படி அழுகிறே?”

ராமாத்தாளின் கை அவளையுமறியாமல் நீண்டது. பிச்சை கேட்கும் பாவனையில் தட்டுத் தடுமாறிக்கொண்டு, “ஆத்தா! அதை எங்கிட்டக் கொடு!” என்றாள்.

வேலாத்தாள் பேசாமல் அவளுடைய கையில் அந்த வெள்ளி மோதிரத்தை வைத்தாள். ராமாத்தாளின் கைதான் நடுங்கி யிருக்க வேண்டும். இல்லை யென்றால், அந்த மோதிரம் ‘கல்’ என்ற சத்தத்துடன் கீழே விழுவானேன்?

“ஆமாம், உனக்கு ஏது அந்த மோதிரம்?” என்று கேட்டாள் வேலாத்தாள்.

“பொன்னு மாமன் கொடுத்தது!” என்றாள் ராமாத்தாள். அவளுடைய குரல் நடுங்கியது. இந்த விஷயம் சாத்திக்குத் தெரிந்து விட்டதால் ஏற்படப் போகும் பயங்கர விளைவுகளை எண்ணி அவள் மனம் நடுங்கியது.

ராமாத்தாளின் நிலையைக் கண்டு சாத்திக்குச் சற்றே கருணை பிறந்திருக்க வேண்டும். இல்லாவிட்டால் அவள் அவ்வளவு அன்பாகப் பேசுவானேன்? பொன்னுவின் பெயரைக் கேட்டதுமே சாத்திக்கு விஷயம் விளங்கி விட்டது. ஆகவே, அவள் அன்பு கலந்த குரலில் சற்றுக் கடிந்து கொண்டு, “அடி பாவி! குடியைக் கெடுக்க இருந்தயே! இப்படியும் செய்யலாமா? அவன் பார்த்தா கொலையல்லவா விழுந்துடும்!” என்றாள்.

தன் தவறை உணர்ந்தவள் போலத் தலை குனிந்து கொண்டு நின்றாள் ராமாத்தாள்.

ஒழுவிக்கு என்ன தோன்றியதோ என்னவோ, அவளுடைய முதுகைத் தட்டிக் கொடுத்தாள். “இதோ பார், இன்னுமா உனக்கு அந்தப் பழைய நினைப்பு? இதென்னத்துக்கு இந்தக் கருமம்? எடுத்துக் கிட்டுப் போயி எங்கனாச்சும் குளத்திலே குட்டையிலே போட்டுத் தலை முழுகி விடு! அதைப்பத்தி நினைச்ச இனிமே என்ன பிரயோசனம்? இதெல்லாம் அவனுக்குத் தெரிஞ்சா சும்மா விடுவானா?” என்று உபதேசம் செய்தாள்.



ராமாத்தாளும் அதற்குச் சம்மதித்தாள். ஆம், அனாவசியமாகப் போனதை நினைத்து வருத்தப்பட்டுப் பயன் என்ன?

★

ராமாத்தாள் பருவமடைந்த பொழுது அவளுடைய தாய் தகப்பன்மாருக்கு ஒரு பெரிய சங்கடம் உண்டாயிற்று. உலக சமாதானப் பிரச்னை கூட இவ்வளவு தூரம் சம்பந்தப்பட்டவர்களுடைய மண்டையை உடைத்திருக்காது. ஆனால் ராமாத்தாளுடைய கல்யாணப் பிரச்னை அவளுடைய

தாய் தந்தையரின் மண்டையைப் பிளந்து கொண்டிருந்தது. பிரச்னை ஒன்றும் பிரமாத மானதல்ல. தகுந்த வரன் கிடைக்கவில்லையே என்ற கவலையும் இல்லை. வரன் ஒன்றுக்கு இரண்டாகக் கிடைத்துவிட்டது தான் தர்ம சங்கடமாயிருந்தது.

முதல் முறைமைக்காரன் பழனிக் கவுண்டன். ஜாதி முறைமைப்படி அவன் தான் மாப்பிள்ளை ஆகவேண்டியவன். ஆனால் ராமாத்தாளுக்கோ அவள் தகப்பனுக்கோ அவனைக் கண்டால் கட்டோடு பிடிக்கவில்லை. குடிகாரக் கவுண்டனை மாப்பிள்ளையாக அடைய யாருக்குத்தான் பிடிக்கும்? அது தவிர, சதா சூதாட்டம்; சில்லறை சகவாசம்; அவனுக்கென்று ஒரு 'ஜமா'. ஊரில் அடிதடி என்றால் அவன் ஆஜராகாமல் இருக்க மாட்டான். ஏன்? அவனே தான் அதற்குக் காரண பூதமாகவும் இருப்பான். ஊரிலேயே அவனைக் கண்டால் ஒருவருக்கும் பிடிக்காது.

இரண்டாவது முறைமைக்காரன் பொன்னக் கவுண்டன். பழனிக் கவுண்டனின் சித்தப்பன் மகன். மகா மானி. கிராமத்திலேயே ரொம்ப ஒழுங்கான புள்ளி பொன்னன். தப்பு தண்டா நடக்கும் இடத்தின் திசையில் தலை வைத்துக்கூடப் படுக்க மாட்டான். ராமாத்தாளின் தகப்பனுக்கு அவன்மேல்தான் நாட்டம், எப்படியாவது பழனிக் கவுண்டனை நிராகரித்து விட்டு அவனையே மாப்பிள்ளையாக்கிக் கொள்ளும் சமயத்தை எதிர்பார்த்துக் கொண்டிருந்தார்கள். அதற்காக அவர்கள் வீண் நம்பிக்கை வைத்துக் கொண்டு பகற் கனவு கண்டு வந்தார்கள். அடிதடி, சூது, கலாட்டா இவைகளில் சிக்கி, பழனிக் கவுண்டன் போலீஸிடம் அகப்பட்டுக் கொண்டால் எவ்வளவு நன்றாயிருக்கும்? — இதற்காக அவர்கள் தங்கள் இஷ்ட தெய்வங்களையெல்லாம் வேண்டிக் கொண்டார்கள். கிராமத்திலே இம்மாதிரி நடப்பது வெகு சகஜம். இந்த விஷயம் எப்படியோ பழனிக் கவுண்டன் காதுவரை எட்டிவிட்டது. அவனும் ஜாக்கிரதையானான்.

ராமாத்தாளும் பொன்னனும் ஓரிரு சந்தர்ப்பங்களில் களத்து மேட்டில் சந்தித்ததுண்டு. அப்பொழுதெல்லாம் அவர்கள் எதிர் காலத்தை நினைத்து இன்பக் கனவுகள் கண்டு கொண்டிருந்தார்கள். நாள் ஆக ஆக அவர்களுக்கிடையில் நட்பு வளர்ந்தது. அன்று மாலை அந்தி வானத்தின் அழகிலே ஈடுபட்டவளாய்த் தலையில் புல் கட்டைச் சுமந்து கொண்டு ஒய்யார நடை போட்டுக் கொண்டு வந்துகொண்டிருந்தாள் ராமாத்தாள். யாரோ பின்பக்கமாக வந்து, "ஏ, பிள்ளை! புல் விலைக்கா?" என்று கேட்டது போலத் தோன்றியது. திரும்பினாள். பொன்னன்! இருவரும் 'களுக்'கென்று சிரித்தனர்.

அன்று பொன்னன் பக்கத்தூர் சந்தைக்குப் போய்விட்டு வந்துகொண்டிருந்தான். அவளுக்கென்று வாங்கி வந்திருந்த வெள்ளி மோதிரம் அவள் விரலுக்குச் சரியாக இருக்கிறதா என்று அங்கேயே சோதித்துப் பார்த்துவிட விரும்பினான். ஆகவே, அவள் கையைப் பிடித்து அதை அவளுடைய விரலில் இட்டான். என்ன பொருத்தம்! மோதிரம் சரியாக இருந்தது. அதற்குள் தூரத்தே பழனிக் கவுண்டன் வருவது கண்டு அவள் கையை விட்டு விட்டான் அவன். அவளும் குறிப்பறிந்து விறுவிறு வென்று வீட்டை நோக்கி நடந்தாள்.



பழனிக் கவுண்டனுக்குச் சந்தேகம் வலுத்தது. இனி காத்திருந்தால் கைமீறிப் போகுமென்று கண்டு கொண்டான். பஞ்சாயத்திலே முறையிட்டான். முறைமையிருக்க முறைமை தவறிப் பெண் கொடுக்க முயற்சிப்பதாகவும், மீறி ஏதாவது அப்படி நடந்துவிட்டால் வெட்டுப் பழி குத்துப் பழி நேருமென்றும், பிறகு தன்னைக் கேட்கக் கூடாதென்றும் உறுதியாகக் கூறி எச்சரித்தான். கடைசியில் விஷயம் முற்றி வீண் கலகத்தில் முடியுமென்று அறிந்த ஊரார் பழனிக் கவுண்டன் சார்பாகவே பேசினர். பாவம், ராமாத்தாளும் அவள் தகப்பனும் என்ன செய்ய முடியும்? ராமாத்தாள் பழனிக் கவுண்டனுடைய மனைவியானாள்.



"அடடட! என்னங்க, என்னையிலிருந்து இந்த இன்ஷூரன்ஸ் வேலை பார்க்கிறீங்க?"

"இல்லே ஸார்! ரயில்லே ஒரே நெருக்கமா யிருக்கல்லவா? இந்தப் பையைக் கையிலே வைத்திருந்தா ஒருத்தரும் கிட்டே நெருங்கி உட்காரமாட்டாங்க ளல்லவா?"

பொன்னன் அதன் பிறகு அதிக நாள் அங்கே தங்கவில்லை. ஊரை விட்டுப் பட்டணத்தை நோக்கிப் போய்விட்டான். ஏதோ வருஷத்திற்கொரு முறை கிராமத்துக்கு வருவான். அவ்வளவுதான்; எக்கியமாகவே இருந்து வாழ்நாளைக் கழித்துவிடத் தீர்மானித்துக் கொண்டு விட்டான் போலும்!

ராமாத்தாள் தன் மனதிலிருந்து பொன்னனின் நினைவை அழித்துவிட எவ்வளவோ முயன்ருள். முடிந்தால்தானே? அவன் கொடுத்த மோதிரத்தை மட்டும் வெகு ஜாக்கிரதையாக வைத்திருந்தாள். சமயம் வாய்க்கும்போது அதை எடுத்துப் பார்த்து மகிழ்வாள். அதைக் காண்பது அவனையே காண்பதுபோலிருந்தது அவளுக்கு. அன்று அதை எடுத்துப் பார்த்துக் கொண்டிருந்தவள் அடுப்பில் கொதிக்கும் சாதத்தைக் கிளறி விடுவதற்காக அதைக் கீழே வைத்து விட்டுப் போனுள். சாதம் அடிப்பிடிக்கும்போல் இருந்தது. தண்ணீர் ஊற்றலா மென்று தவலையைப் பார்த்தாள்; தண்ணீர் இல்லை. உடனே பயம் பற்றிக் கொண்டது. சோறு சரியா யில்லா விட்டால் கணவனிடமிருந்து கிடைக்கும் உதை அவளை வைக்கி விட்டது. சட்டென்று குடத்தைத் தூக்கிக் கொண்டு கிணற்றை நோக்கி நடந்தாள். கிணற்றடியிலேதான் அவளுக்குத் தான் செய்த பெருந் தவறு ஞாபகத்திற்கு வந்தது. சோறு கெட்டு விடுமே என்ற பயம் ஓடி விட்டது; வேறு பயம் குடி கொண்டது.

வேலாத்தாள் அப்படி ஒன்றும் கெட்ட சுபாவமுடையவள் அல்ல. அவள் பழனிக் கவுண்டனின் அக்கா. காற்பத்தைந்து வயதிருக்கும். கணவனற்றவள். சதா ஏதோ முணுமுணுத்துக் கொண்டே இருப்பாள்.

ராமாத்தாளுக்கு எந்தக் காரியத்திலும் மனம் ஓடவில்லை. மறுபடி வேலாத்தாளிடம் வந்தாள். "ஆத்தா! சாமி சாக்ஷியா கேக்கிறேன். என் உசிரு உங்ககையிலேதான் இருக்கு. அவுகளுக்குத் தெரிஞ்சா கொன்னு போடுவாங்க!" என்று கூறிக் கெஞ்சினுள்.

வேலாத்தாளின் மனம் இளகி விட்டது. "சே! காலென்ன, சின்னப் புள்ளையா? பயப்படாதே! சும்மா இரு. உனக்கு ஒரு கெடுதலும் செய்ய மாட்டேன்!" என்று ஆறுதல் சொன்ளுள். ராமாத்தாளும் ஒருவிதமாகச் சமாதான மடைந்தாள்.

★

நாட்கள்கழிந்தன. வீட்டிற்குள் இருப்பது ஏதோ முள்ளின்மேல் இருப்பதுபோல் இருந்தது ராமாத்தாளுக்கு. வேலாத்தாள் எப்பொழுதும் போல் தான் உண்டு, தன் காரியம் உண்டு என்றுதான் இருந்தாள்; ஆனாலும் ராமாத்தாளின் மனம் மட்டும் குறு குறு வென்று சதா சந்தேகத்திலேயே ஆழ்ந்திருந்தது. அது மட்டு மல்ல; அவள் ஆறுமாதக் கர்ப்பவதியாக இருந்தாள். முன்பெல்லாம் மிகவும் சகஜமாக "ஆத்தா! என்னுல் நடக்க முடியலே! இடுப்பெல்லாம் நோவுது. நீதான் செண்டு கொடம் தண்ணி கொண்டாயேன்!" என்று கூறிக் காரியத்தைச் சாதித்துக் கொண்டு விடுவாள். இப்பொழுது அவளால் ஒன்றும் சொல்ல முடிவதில்லை. ஏதாவது சொன்ளுல் தன்னை அதிகாரம் செய்வதாக நினைத்துக் கொண்டு தன் ரகசியத்தை வெளி விட்டு விட்டால்...? ஆகவே, தன் சக்திக்கு மீறிய காரியங்களைக் கூடச் சகித்துக் கொண்டு செய்து வந்தாள் ராமாத்தாள்.

இதெல்லாம் வேலாத்தாள் கண்ணிலும் படாமல் இல்லை. பாவம்! ராமாத்தாள் படும் கஷ்டம் அவளால் பார்க்க முடிய வில்லை. அவள் மனதில் குடிகொண்டிருக்

கும் சந்தேகத்தையும், பயத்தையும் போக்குவதற்கு அவளுக்கு வழி ஒன்றும் தெரியவில்லை. அவன் மட்டும் என்ன? நிம்மதியாகவா இருந்தான்? முன்போல் சகஜமாக, "இந்தா, ராமாத்தா! இன்னி ராவிக்கிச் கூழு சோறு ஆக்கிப் போடு!" என்று அதிகாரம் செய்ய முடியவில்லை. ராமாத்தாள், தன் ரகசியம் தெரிந்து விட்டதால்தான் தன்னை இப்படியெல்லாம் அதிகாரம் செய்கிறான் என்று அவள் நினைத்து விட்டால் என்ன செய்வது?

இருவரும் சேர்ந்து அந்த வீட்டிலேயே வசிப்பது வரவரக் கடினமெனத் தோன்றியது. வேலாத்தான் இரவும் பகலுமாக யோசித்தான். பாவம், வயிற்றுப் பிள்ளைக் காரி. இதே கவலையில் எங்காவது குழந்தைக்குக் கஷ்டம் ஏற்பட்டால் என்ன செய்வது? கல்யாணமாகி எத்தனையோ நாட்களுக் கப்புறம், பிறக்குமா வென்று தவங் கிடந்து பிறக்கப் போகும் குழந்தை அது. இரவிலே வெகு நேரம் வரை யோசித்தான் வேலாத்தான். கடைசியில் ஏதோ ஒரு முடிவிற்கு வந்தவனாய்த் தன் படுக்கையை விட்டு எழுந்தான்.

"ராமாத்தா! நான் போறேன். நீ கொளந்தையைப் பெத்துகிட்டுச் சுகமா இரு!" என்று மெல்லிய குரலில் கூறினான்.

"எங்கே? இதை விட்டா வேறெ கதி உனக்கு?" என்று கேட்டாள் ராமாத்தாள்.

"அதைப் பத்தி நீ கவலைப்படாதே! ஜாக்கிரதை, உடம்பைப் பார்த்துக்கோ!" என்று சொல்லிவிட்டு வேலாத்தான் எங்கேயோ போய்விட்டான்.


அவன் திடீரென்று கிராமத்தை விட்டு மறைந்தது எல்லோருக்கும் ஆச்சரியத் தைக் கொடுத்தது.

★

தங்கள் இடையில் புதியதொரு கிழவன் வந்து பிச்சை யெடுக்க ஆரம்பித்திருப் பதைக் கண்ட பட்டணத்துப் பழைய பிச்சைக்காரர்களுக்கு முதலில் ஆச்சரிய மாகத்தான் இருந்தது. நாளடைவில் அவனும் அவர்களில் ஒருத்தனாகித் தெரு வோரத்தில் உட்கார்ந்து பிச்சையெடுத்துக் கொண்டிருந்தான்.

அநேகர் அவ்வழியே சென்றனர். ஆனால் அவர்களில் ஒருவரும் அந்தக் கந்தைக்குள் அடங்கிக் கிடந்த, பழுத்துத் திரைத்திருந்த உடலின் உள்ளே வீசும் தியாகச் சுடரின் ஒரு பொறியைக்கூடக் காணவில்லை. ஆனால் அவர்களெல்லோரும் தியாகத்தைப் பற்றிப் பேசாத நாளே கிடையாது. ஆம், உலகமறியச் செய்யப்படும்—அதுவும் சுய நலங் கருதிச் செய்யப்படும்—தான தருமங் களைத்தானே தியாகமென்று இந்த உலகம் போற்றிப் பறை சாற்றுகிறது? ஏழையின் தியாகத்தைக் கேட்பார் யார்?

ஆள் மாறாட்டம்!



பாப்பா மலர்

மாந்தோப்பிலே!

என்னென்

"ஏண்டா, இன்று கணக்குப் பரீட்சை ஆயிற்றே, நீ என்ன செய்யப் போகிறாய்?" என்று தன் நண்பனை மணியைக் கேட்டான் கோபு.

"இருவரும் இன்று பள்ளிக்கூடம் போகாமல் 'மட்டம்' போட்டுவிடுவோம்! நாளைக்குக் கணக்கு வாத்தியார் 'ஏன் வரவில்லை?' என்று கேட்டால், உடம்பு சரியாக இல்லாததால் வரவில்லை என்று சொல்லிவிடலாம்!" என்றான் மணி.

"அதுதான் சரியான வழி! இன்று சாப்பிட்டுவிட்டு வழக்கம்போல் வீட்டை விட்டுக் கிளம்பி விடுவோம். நான் முன்பு ஒரு நாள் உன்னிடம் சொன்னேனே, ஒரு மாந்தோப்பு இருக்கிறது என்று! ஞாபகமிருக்கிறதா? அங்கே இன்று போய், ஒருவருக்கும் தெரியாமல் மரத்திலிருந்து நல்ல மாம்பழங்களாகப் பறித்துத் தின்போம்!" என்று உற்சாகத்துடன் கூறினான் கோபு. மணியும் 'ஆகட்டும்' என்று ஒப்புக் கொண்டான்.

அன்று வழக்கம்போல் ஒன்பது மணிக்குச் சாப்பிட்டு விட்டு, மணியும் கோபுவும் வீட்டிலிருந்து பள்ளிக்கூடம் செல்பவர்கள் போல் கிளம்பி, மாந்தோப்பை அடைந்தனர். வெகு சிரமத்துடன் இருவரும் ஒரு பெரிய மாமரத்தின் மீது ஏறிப் பழங்களைப் பறிக்க ஆரம்பித்தனர். அப்பொழுது எங்கிருந்தோ காவற்காரன் வந்துவிடவே, எப்படியாவது அவனிடம் உதை வாங்காமல் தப்பித்தால் போதும் என்று இருவரும் ஓரே குறித்து ஓடத் தொடங்கினர். கடைசியில் ஒரு தனிமையான இடத்திற்கு வந்து உட்கார்ந்து கொண்டு, தங்கள் கைகால்களைத் தடவிக் கொண்டனர்!

சாயங்காலம் மணி நான்கு அடித்துக் கொஞ்சநேரங் கழித்து, இருவரும் வீட்டை நோக்கிப் புறப்பட்டனர். வழியில் அவர்களுடைய வகுப்புப் பையன்கள் பள்ளிக்கூடத்திலிருந்து வீடு நோக்கி வந்து கொண்டிருந்ததைக் கண்டனர்.

மணியையும் கோபுவையும் பார்த்துவிட்ட ஒரு பையன், "ஏண்டா, கோபு, மணி! இருவரும் ஏன் இன்று பள்ளிக்கூடம் வரவில்லை? நீங்கள் துரதிர்ஷ்டசாலிகள்!" என்றான்.

மணியும் கோபுவும் ஆச்சரியத்துடன், "ஏன்? என்ன நடந்தது?" என்று கேட்டார்கள்.

"இன்று மத்தியானம் நம் பள்ளிக்கூடத்திற்கு யாரோ ஒரு ஜமீன்தார் வந்து எல்லா வகுப்புகளையும் பார்வை யிட்டார். எல்லோருக்கும் பிஸ்கோத்துகள், பழங்கள் எல்லாம் வழங்கினார்! அவர் வந்ததனால், இன்று நடக்க வேண்டிய கணக்குப் பரீட்சை கூட நடக்கவில்லை! நாளைக்கு நடக்கும் என்று கணக்கு வாத்தியார் சொல்லி விட்டார்!" என்றான் அந்தப் பையன். மணியின் முகத்திலும் கோபுவின் முகத்திலும் அசடு வழிந்தது!



நீலாம்பரி

சுந்தா

"நாலு நல்ல மிளகு, இரண்டு பட்ட மிளகாய், ஒரு துண்டு இஞ்சி — இத்தனையையும் ஒரு கரண்டி நல்லெண்ணெயில் போட்டு, மணக்க மணக்கக் காய்ச்ச வேண்டும். இப்படிக் காய்ச்சிய எண்ணெயை உச்சந் தலையில் கொத்துக் கொத்தாய் வார்த்து, தட்டிக் கொட்டி இறக்க வேண்டும். அரை மணி நேரம் நன்றாய் ஊறிய பிறகு, ஆவிச் சூட்டு வெந்நீரில் ஆனந்தமாய் ஸ்நானம் செய்ய வேண்டும். தலை துவட்டிக் கொண்டதும், நாலு மிளகுடன் இரண்டு உப்புக்கல் சேர்த்துக் கடித்துத் தின்ன வேண்டும். வயிற்றில் கபகப வென்று பசி எடுத்ததும், காரசாரமான பொரித்த குழம்பு விட்டு, கடச்கடச் சாப்பிட வேண்டும். இத்தனையும் செய்து விட்டுப் படுக்கை விரித்துப் படுத்தால், கண்ணைச் சுழற்றிக் கொண்டு தூக்கம் வருகிறதா இல்லையா, பார்!"

இவ்வாறு ஒரு பெரியவர் யோசனை கூறினார். அவர் நீட்டி முழக்கிச் சொன்ன போது, தூக்கம் வரும் போலத்தான் தோன்றிற்று. ஆனால், செய்து பார்த்த போதோ வரவில்லை.

அந்தச் சமயத்தில், அதாவது ஐந்தாறு வருஷங்களுக்கு முன்னால், தூக்கம் சரியாக வராமல் ரொம்பவும் கஷ்டப்பட்டுக் கொண்டிருந்தேன். அப்போதுதான் மேலே குறிப்பிட்ட பெரியவர் எனக்கு அப்படி யோசனை கூறினார்.

வேறொரு பெரியவர் சொன்னார்: பெரிதாகப் பத்து மண் பானைகள் வாங்கிக் கொண்டு வந்து, நிழலாடும் கொட்டிலில் மணல் மேடு கட்டி அவற்றைப் பதித்து வை. ஆற்றிலிருந்து குடம் குடமாக ஜலம் கொண்டு வரச் சொல்லி, அந்தப் பானைகளை நிரப்பு. பச்சை நெல்லிக்காய் ஐந்து படி கனிசமாக வாங்கி, ஒவ்வொரு பானையிலும் ஒவ்வொரு படி கொட்டி, காற்றுப் புகாமல் மூடி வை. இன்று கொட்டிய ஜலத்தை நாளை எடுத்துக் குளிக்க வேண்டும். வெறுமனே குளித்தால் பிரயோஜனமில்லை. தலையில் எலுமிச்சஞ் சார் வைத்துக் குளுகுளு வென்று தேய்த்து இறக்கிய பிறகு, ஜலத்தைத் தாரை தாரையாய் விடச் சொல்லிக் குளிக்க வேண்டும். குளித்ததற்கு அப்புறம், மிளகு ரஸம் விட்டுச் சாதத்தைக் கரைத்துக் குடிக்க வேண்டும். பாதி குடிக்கும்போதே கொட்டாவி வருகிறதா இல்லையா, பார்!"

இதைச் செய்து பார்த்தும் பயனில்லை. மற்றும் பலரும் பலவிதச் சிகிச்சைகள் கூறினார்கள். ஒவ்வொன்றையும் ஒவ்வொரு தினம் சோதித்துப் பார்க்கலானேன்:— தலையைத் தரையில் ஊன்றிச் சிரசாசனம் போட்டேன். 'ஓம் நம்' என்று ஜபம் செய்தேன். ஆற்று மணலில் மூச்சிழுக்க ஓடி விட்டு வந்து படுத்தேன். உள் அறையிலும், வெட்ட வெளியிலும், மரத்தடியிலும் மாறி மாறிப் படுத்தேன். கட்டில் மாறித் தரையிலும், தரை மாறிக் கட்டிலிலும் படுத்தேன். கால் பிடிக்கச் சொன்னேன்; கண்ணைக் கட்டச் சொன்னேன்; கஷாயங்கள் சாப்பிட்டேன்; மாத்திரைகள் விழுங்கினேன்; காப்பி சாப்பிடாமலிருந்தேன். ஒன்றிலிருந்து ஆயிரம் வரை கூட்டியும், ஆயிரத்திலிருந்து ஒன்றுவரை கழித்தும் எண்ணினேன். ஒரு மந்தையிலிருந்து ஒவ்வொரு ஆடாக வேலியைத் தாண்டி வருவதாக நினைத்துப் பார்த்தேன். கும்பகர்ணப் படலம் படித்தேன்; கந்தபுராணம் படித்தேன். ஒன்றிலும் பலன் காணவில்லை!

ஊர் முழுவதும் அடங்கி ஒடுங்கி உறங்கிக் கொண்டிருக்கையில் எனக்கு மாத்திரம் தூக்கம் வராமல் நான் பட்ட பாடு பயங்கரமானது. தலையிலே கல்லைத் தூக்கி வைத்தது போல் ஒரு பாரம். எவ்வளவு தண்ணீர் குடித்தும் அடங்காத் தாகம் தொண்டையை வறட்டும். கலிக்கம் ஊற்றியது போல் கண்களில் ஒரே எரிச்சல். 'தடால் தடால்' என்று மார்புச் சுவரிலே இருதயம் மோதி அடிக்கும். அறிந்தும் அறியாமலும் செய்த பல தவறுகளுக் கெல்லாம் தண்டனையோ இந்த வேதனை என்று தோன்றும். அந்தகாரத்திலிருந்து ஒரு கோரக் குரல், "ஏன் அப்படிச் செய்தாய்?" என்று திரும்பத் திரும்பக் கேட்கும். அதை இடைமறித்து, "படுபாவி, படுபாவி!" என்று

இன்னொரு குரல், சம்பச் சத்தம் போன்ற குரல் பழித்துக் கூறும். ஆந்தையும் வௌவாலும் கோட்டானும் இடையிடையே கத்துவது என்னைப் பரிகசித்துச் சிரிப்பது போலத் தோன்றும். இத்தனையோடு, சாத்தே ஒரு நாய் ஊளையிட ஆரம்பித்து விட்டால் போதும், 'ஹோ'வென்று அலறி, ஊரைக் கலக்கி எழுப்பவேண்டும் போல் வெறி உண்டாகும்.

நல்ல வேளை; இப்படித் தூக்கம் வராமல் ரொம்ப நாள் அவஸ்தைப் படவில்லை. தூக்கா நோய் தொடர்ந்து பிடித்திருந்தால், நான் போயிருக்க வேண்டிய இடமே வேறு. "தூக்கம் வரவில்லையே!" என்று கவலைப் படுவதையும், அதற்காகச் சிகிச்சைகள் செய்து கொள்வதையும் நிறுத்திக் கொண்டதுமே, தூக்கம் ஓரே ஓட்டமாக ஓடி வந்தது.

தூக்கம் எப்படி வருகிறது அல்லது உண்டாகிறது என்பதை உயிர் நூல் புலவர்களும் மனோதத்துவ நிபுணர்களும் விளக்கிக் கூறியிருக்கிறார்கள். அதை யெல்லாம் படித்துப் பார்த்த பிறகுகூட, "நித்ரா தேவி என்று ஒருத்தி இருக்கிறாள். அவள் தான் நித்திரை இன்பத்தை ஊட்டுகிறாள்!" என்று கற்பனை செய்யத் தோன்றுகிறது. அங்கங்கள் அசைவற்றுத் தளர்ந்து, அறிவு மயங்கி, இமைகள் மூடுகிற வேளையில் பல வித மாயக் காட்சிகள் ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு விதமாக மங்கி மங்கிப் புலப்பட்டு, மேலும் மங்கலாகி மறைகின்றன:


கருநீலப் பூப்பந்து ஒன்று அந்தரத்தில் ஜாலக் கோலங்களிட்டு ஆடுகிறது. அருகே அணுகி வருகிறது; தொலைவிலே தாவிச் செல்கிறது; தனித்தனியாகவும் வட்டம் வட்டமாகவும் சுற்றி ஆடுகிறது; திடீரென வெடித்துச் சிதறுகிறது. கருநீல மலர்கள் மாரியென உதிர்கின்றன. எங்கும் மலர்கள், மலர்கள்! பரிமளம் கமழ்கிறது; மயக்கம் வருகிறது. புஷ்பக் குவியலில் புதைந்து புதைந்து புளகாங்கிதம் அடைகிறேன். இன்ப மயக்கம் அதிகரித்து அதிகரித்து, சூனியத்தில் முடிகிறது.

தென்றலின் மெல்லிய புலம்பல் அழைக்கிறது. ஆவலுடன் அத்திசையே செல்கிறேன். மெல்லோசை எட்டி எட்டிச் செல்கிறது. மேலும் மேலும் தொடர்ந்து செல்கிறேன். கால்கள் சோர்ந்து, தள்ளாடி தள்ளாடி நடக்கிறேன். அயர்வுற்று குழைந்து குழைந்து கரைந்து போகிறேன்.

சிப்பி வடிவமான படகிலே சயனித்திருக்கிறேன். மெள்ள மெள்ள ஓடும் புனலோடு நகர்ந்து நகர்ந்து செல்கிறது படகு. கரைகளிலிருந்து தளிர்க் கரங்கள் சாமரம் வீசுகின்றன. பெயர் தெரியாப் பட்சிகளின் இன்னிசை தவழ்ந்து தவழ்ந்து வருகிறது. பவள மண்டபத்தைக் கடந்து படகு செல்லுகையில், ஒரு சுழியில் அகப்பட்டுச் சுழல்கிறது. சுழன்று சுழன்று, கீழே கீழே மூழ்கி மறைகிறேன்.

சயனித்திருக்கும் கட்டில் முன்னும் பின்னும் ஆடுகிறது. பின்னர் உயர்ந்து உயர்ந்து வீசி ஆடுகிறது. பரமானந்தமாயும் இருக்கிறது; பயமாயும் இருக்கிறது. முன்பு எப்போதோ கேட்ட ஆசைக் குரல் தாலாட்டுப் பாடுகிறது. முன்பு எப்போதோ கண்ட அன்பு முகம் தோன்றித் தோன்றி மறைகிறது. ஊசலாட்டம் குறைந்து தணிகிறது. தாலாட்டும் தணிந்து தணிந்து கேட்கிறது. பிறகு நிச்சலனம், நிசப்தம்.

இப்படியெல்லாம் அனுபவித்துத் தூக்கத்தை வர்ணிப்பது கண்டு என்னைச் சுத்தத் 'தூங்கு மூஞ்சி' என்று நினைக்கலாம். பார்க்கப் போனால் யார்தான் 'தூங்குமூஞ்சி' இல்லை? யாருக்குத்தான் தூக்கத்தின்மேல் ஆசையில்லை? எதற்காகப் படுக்கை அறை என்று ஜோடித்து வைத்துக் கொள்கிறார்கள்? எதற்காகக் கட்டிலும் மெத்தையும் தலையணைகளும் விதவிதமாகச் செய்து போட்டுக் கொள்கிறார்கள்? எதற்காக அயலூருக்குப் போகும் போதுங்கூடப் பெட்டியுடன் படுக்கையையும் சுற்றிக் கொண்டு போகிறார்கள்? எதற்காக 'நிம்மதியாய்த் தூங்க வேண்டும், நிம்மதியாய்த் தூங்க வேண்டும்' என்று



"......தவறுகளுக்கெல்லாம் தண்டனையோ இந்த வேதனை.........?"

பேச்சுக்குப் பேச்சு பல்லவி பாடுகிறார்கள்?

“சராசரி மனிதன் ஒருவன் இருபத்தி நாலு மணி நேரத்தில் எட்டு மணி நேரம் தூங்குகிறான்” என்று நிபுணர்கள் கணக்குச் சொல்கிறார்கள். இந்தக் கணக்குப்படி பார்த்தால இப்போது நான் சராசரி மனிதன் அல்ல. ஏனெனில் பத்து மணி நேரம், பதினொரு மணி நேரங்கூடத் தூங்குகிறேன். இதன் காரணத்தால் எத்தனையோ அருணோதயங்களை வீண் போக விட்டிருக்கிறேன்; எத்தனையோ புஸ்தகங்களைப் படிக்க முடியாமல் இருந்திருக்கிறேன்; எத்தனையோ அரிய சந்தர்ப்பங்களைத் தவற விட்டிருக்கிறேன்.

நான் அதிக நேரம் தூங்குவதால் எனக்கு நஷ்டமே தவிர, பிறருக்கு நஷ்டம் ஏதுமில்லை; லாபந்தான் என்று சொல்ல வேண்டும். எனக்கு மிச்சமாகும் ஜாக்ர காலத்தில் என் சொந்த அலுவல்களை மாத்திரந்தான் கவனிக்க முடிகிறது. நித்திரை நேரம் குறைந்து ஜாக்ர நேரம் அதிகமானால் என் சொந்த அலுவல்களைக் கவனிப்பதோடு, பிறர் அலுவல்களில் தலையிடவும் கூடுமல்லவா? பிறர் அலுவல்களில் தலையிடுவது என்றால் என்ன? பிறர் காரியங்களைக் கெடுப்பது என்றுதான் அர்த்தம். பிறர் காரியங்களைக் கெடுப்பதோடு பிறர் வாழ்வைக் கெடுக்கவும் புத்தி போகலாம். நீங்கள் வேண்டுமானால் கவனித்துப் பாருங்கள்: பொய் புனை பேசுகிறவர், சூது வாது பயில்கிறவர், சதி சூழ்ச்சி செய்கிறவர், வஞ்சனை துரோகம் செய்கிறவர், இந்த அழகான உலகத்தை அலங்கோலப் படுத்துகிறவர் — இவர்களெல்லாம் சராசரி நேரத்துக்குக் குறைவாகத் தூங்குகிறவர்களாகவே இருப்பார்கள்.

உலகம் நலமடைவதற்காகத் தூக்கம் தவிர்ப்போரும் உண்டுதான். ஆனால் அப்படிப்பட்டவர் கோடியில் ஒருவரே!

காலக்ஷேபம்

அவன் என்ன செய்வது?

ஒரு சிறுவன் ஒரு தோட்டத்தில் மாங்காய் திருடி விட்டான். அதைப் பார்த்த தோட்டக்காரன், அவனை அழைத்துக் கொண்டு போய்த் தன் எஜமானனிடம் விட்டான்.

எஜமான், சிறு பையன் என்று இரக்கப்பட்டு, “தம்பி! இனிமேல் நீ இந்தமாதிரி கெட்ட செய்கைகளை யெல்லாம் செய்யாதே! கெட்ட மனிதர்கள் சகவாசமே கூடாது. கெட்ட மனிதர்களைக் கண்டால் காததூரம் ஓடி ஒளிந்து கொள்ள வேண்டும்!” என்று சொன்னார்.

பையன்:—அதற்குத்தான் இந்தத் தோட்டக்காரனைக் கண்டதும் நான் ஓடி ஒளிந்து கொள்ளலாம் என்று இருந்தேன். அதற்குள் வந்துதான் அவன் என்னைப் பிடித்துக் கொண்டு விட்டானே!

★

பையனின் சந்தேகம்!

விஞ்ஞான ஆசிரியர் (மிக்க உற்சாகத்துடன்):- இன்றைய மனுஷன் பறக்கக்கூடக் கற்றுக் கொண்டு விட்டான். ஒரு பறவை செய்யக் கூடியதை யெல்லாம் மனிதனும் செய்ய முடியும் என்று காண்பித்து விட்டான்.........

பையன்:—ஒன்றே ஒன்று பண்ண முடியுமா, ஸார்?

ஆசிரியர்:—என்ன?

பையன்:—மனிதன் பறவையைப் போல் தந்திக் கம்பிகளின் மேல் உட்கார்ந்து கூவ முடியுமா, ஸார்!

அவருடைய பழக்கம்!

ராமாயணப் பிரசங்கியின் மனைவி:—ஏண்டி, அம்புஜம்! அவர் அன்றைக்குப் பாதிக் கதை சொல்லிக் கொண்டிருக்கச்சே, உங்காத்துக் காரர் எழுந்து வெளியே போயிட்டாரேடி! என்னடி இது, அக்கிரமமாக இருக்கு!

அம்புஜம்:—அதை ஏன் கேட்கிறேள்! அவருக்குத் தூக்கத்திலே நடந்து நடந்து பழக்கம், மாமி!

★

நற்சாக்ஷிப் பத்திரம்!

மானேஜர்:—நீ திவான்பகதூர் திருவேங்கடம் பிள்ளையிடம் வேலை பார்த்ததாகச் சொல்லுகிறாயே, அவரிடமிருந்து நற்சாக்ஷிப் பத்திரம் வாங்கியிருக்கிறாயா?

வேலைக்கு வந்தவன்:—வெறும் கடுதாசி என்னத்துக்குங்க? இதோ பாருங்க, அவரு பேர் போட்ட பௌண்டன் பேனாவையே வைத்திருக்கிறேன்!

★

ஜெயிலின் விஷயம்

வக்கீல் (எதிர்க் கட்சியைச் சேர்ந்த சாட்சியிடம்):—நீ இதற்கு முன் ஜெயிலுக்குப் போனதுண்டா?

சாட்சி:—ஆகா! போயிருக்கிறேனுங்க!

வக்கீல்:—எதற்காக?

சாட்சி:—வெள்ளையடிக்கக் கூப்பிட்டிருந்தாங்க, போயிருந்தேனுங்க!

மனமாற்றம்

ராஜம் நரசிம்மன்



“என்ன மாமி, சித்திரை பிறக்கப் போகிறதே! இந்த வருஷமாவது சாரதாவுக்குக் கல்யாணம் உண்டா?” என்று கேட்டேன், அடுத்த வீட்டு அலமேலு மாமியை.

அம்மாமியின் முகம் சுண்டிவிட்டது. “என்னவோ அம்மா, எங்களாலானவரை நாங்களும் பிரயத்தனப்பட்டுக் கொண்டுதானிருக்கிறோம். பிராப்தம் எப்படியோ, யார் கண்டது?” என்றாள் ஒரு பெருமூச்சுடன்.

அலமேலு மாமியின் கணவர் அனந்தநாராயண சர்மா இவ்வூர் உயர்தரப் பள்ளியில் உபாத்தியாயர். சாரதா இத் தம்பதிகளின் ஒரே பெண். பதினாறு வயதாகிறது. எலுமிச்சம் பழ நிறம்; மூக்கும் விழியுமாய்ப் பார்வைக்கு லக்ஷணமாக இருக்கிறாள். இத்துடன் பருவகால சோபை அவளுடைய அங்கங்களில் மின்வெட்டுகிறது. ஆனால், பொதுவாக வரன் மார்க்கெட்டில் இதையெல்லாம் யார் கவனிக்கிறார்கள்? பணம்தானே பிரதானம்? பாவம், சர்மாவுக்கு வரும் சம்பளம் குடும்பச் செலவுக்கே போதாமலிருக்கிறதே, ஆயிரம், இரண்டாயிரமென்று வரதக்ஷிணை கொடுக்க அவருக்குச் சக்தி ஏது?

“ஏன், பத்து நாட்களுக்கு முன் தஞ்சனூரிலிருந்து ஏதோ ஒரு ஜாதகம் வந்திருப்பதாகச் சொன்னீர்களே?” என்று மேலும் கேட்டு வைத்தேன்.

“அதுவா? ஆயிரத்து ஐந்நூறு ரூபாய் ரொக்கமாக வேண்டுமாம், அந்தப் பேராசை பிடித்தவர்களுக்கு!” என்றாள் அம்மாமி. அவளுடைய குரலில் ஒருவித வெறுப்பு தொனித்தது.

“பையன் எதுவரை படிச்சிருக்கான்? ஏதாவது உத்தியோகம் உண்டா?”

“என்னவோ படிச்சிருக்கான் எப். ஏ. வரை. ஏதோ கம்பெனியில் வேலையாம்!”

“சம்பளம்?”

“அப்படி ஒண்ணும் பிரமாதமாக இல்லை. எண்பது ரூபாய் வாங்குகிறானாம்.”

“என்னவோ மாமி, இந்தக் காலத்திலே அது பிரமாதம்தான். இந்த நிலைமையிலே அவனுக்கு ஆயிரத்து ஐந்நூறு ரூபாய் கேட்டது அப்படியொன்றும் அதிகமில்லை என்றுதான் எனக்குத் தோன்றுகிறது!”

அலமேலு மாமி ஒரு கணம் என்னை உற்றுப் பார்த்த பின், “உனக்கென்னடியம்மா, சொல்லுவதற்கு? நீ பாக்யசாலி; பிள்ளையைப் பெற்றவள். உனக்கும் ஒரு பெண் இருந்தால் அப்போது என் கஷ்டம் தெரியும். சர்க்கார் ஏதேதோ விஷயங்களில் தங்கள் கவனத்தைத் திருப்புகிறார்களே தவிர, இந்த வரதக்ஷிணைக் கொடுமையை ஒழிக்க ஒரு சட்டம் கொண்டு வரக் காணோம்!”

“சட்டம் கொண்டு வந்து விட்டால் மட்டும் கஷ்டம் தீர்ந்து விடுமா, மாமி? ரொக்கமாக வாங்கக் கூடாது என்று சட்டம் வந்தால், பிள்ளை வீட்டார் சோகக் கேட்டுக் காரியத்தைச் சாதித்துக் கொள்ளுகிறார்கள்! இல்லாவிடில் மற்ற சாமான்

களைப்போல இதற்கும் 'பிளாக் மார்க்கெட்' ஏற்படுகிறது. வரதக்ஷிணை வழக்கம் ஒழியவேண்டுமானால் பிள்ளையைப் பெற்றோர்களிடையே மனமாற்றம் ஏற்பட வேண்டும், மாமி!"

"உம்...... அவர்களுடைய மனமாவது, மாறவாவது!" என்று சொல்லி, மீண்டும் ஒரு பெருமூச்சு விட்டாள் அலமேலு அம்மாமி.

• •

மேற்கூறிய சம்பாஷணை நான்கு வருஷங்களுக்கு முன்



னால் நடைபெற்றது. அதன் பின் எத்தனையோ சம்பவங்கள் நிகழ்ந்து விட்டன. சாரதாவுக்கு விவாகமாகிப் புக்ககம் போய்விட்டாள். என் எட்டு வயதுப் பையன் ரகுவுக்கு ஒரு தங்கையும் தோன்றி விட்டாள். பர்மாவில் இருந்த சர்மாவின் தம்பியும் அவன் மனைவியும் ஜப்பான்காரன் போட்ட குண்டுக்குப் பலியாகி விட்டனர். அச்சமயம் பள்ளியில் இருந்த அவர்களுடைய பையன் சபேசன் எப்படியோ தப்பித் தன் பெரியப்பாவின் பாதுகாப்பில் வந்து சேர்ந்தான். அவனைக் கண்டதும் சர்மாவுக்கு முதலில் கொஞ்சம் யோசனையாய்த்தான் இருந்தது. எல்லாம் இல்லாத குறைதான்! சாரதா புக்ககம் போன பிறகு, "அப்பாடி! நம் குடும்பத்தில் ஒரு ஜீவன் குறைந்தது!" என்று அவர் கொஞ்சம் ஆறுதல் அடைந்திருந்தார். அந்த 'ஜீவ'னும் சும்மாவா குறைந்தது? சர்மாவுக்கு இரண்டாயிரம் ரூபாய் கடனை வைத்துவிட்டு அல்லவா குறைந்திருக்கிறது? அதை வேறு அவர் இனிமேல் அடைத்தாக வேண்டாமா? இந்தச் சமயத்தில் அந்தக் குறைந்த ஜீவனுக்குப் பதிலாகச் சபேசன் வந்து சேர்ந்தால் சர்மா யோசனை செய்யாமல் என்ன செய்வார்?

நல்ல வேளை, சபேசன் அப்படி யொன்றும் வெறுங் கையுடன் பெரியப்பாவை நம்பி வந்து விடவில்லை. கையில் பத்தாயிரம் ரூபாய் ரொக்கத்துடன்தான் வந்திருந்தான். அதை அறிந்ததும் சர்மாவின் சந்தோஷத்துக்குக் கேட்க வேண்டுமா? அவரைப் பிடித்திருந்த தரித்திரமே அன்றுடன் தொலைந்தது. அலமேலு மாமிக்கோ அவன் மீது வெகு பிரியம். தன் சொந்த மகனைப் போல் பாதுகாத்து வந்தாள். போன வருஷம் தான் சபேசன் எஸ். எஸ். எல். ஸி. பரீக்ஷையில் தேறினான். உத்தியோக வேட்டை நடந்து கொண்டிருந்தது. தற்செயலாக, நேற்று மாலை சர்மாவுக்கும் அம்மாமிக்கும் நடைபெற்ற சம்பாஷணையை நான் கேட்க நேர்ந்தது. என்ன! அவர்களா அப்படிப் பேசினார்கள்?

"என்னடி, ஊரிலே யாரோ சாமிநாத ஐயராம். நம் சபேசனுக்குத் தம் பெண்ணைக் கொடுப்பதாகச் சொல்லுகிறார்!" என்றார் சர்மா.

"வரதக்ஷிணை எவ்வளவு கொடுப்பார்களாம்?" என்று உடனே கேட்டாள் அலமேலு மாமி.

"இவ்வளவு வேண்டும்னு நாம்தானேடி கேட்கணும்?"


"இரண்டாயிரத்துக்குக் குறையக் கூடாது! சொல்லி விடுங்கள், அவர்களிடம்!"

"இரண்டாயிரமா? அவர்கள் சம்மதிக்கணுமேடி! சபேசனுக்கு உத்தியோகம் கூட இல்லையே!"

"உத்தியோகத்திற்கென்ன? இன்று இல்லாவிடில் நாளைக்குத் தானுகக் கிடைக்கிறது. இந்த விஷயங்களிலெல்லாம் நீங்கள் கொஞ்சம் கண்டிப்பாய் இருக்கணும். உங்களால் முடியாவிட்டால் பேசாமலிருங்கள். நான் பார்த்துக் கொள்ளுகிறேன்!" என்றாள் அம்மாமி.

அவளுடைய மனமாற்றத்தைக் கண்டு நான் ஆச்சரியப் படவில்லை. தனக்கொரு நியாயம், ஊருக்கொரு நியாயம் என்பதுதான் உலக இயல்பாயிற்றே!

ஒரு ரகசியம்; உங்களிடம் இப்போதே சொல்லி வைக்கிறேன்: நான்கூட ரகுவுக்கு வரதக்ஷிணையாக ரூபாய் இரண்டாயிரம் வாங்குவது என்றும், அவன் தங்கை கமலாவை வரதக்ஷிணை இல்லாத இடத்தில் கொடுப்பதென்றும் எண்ணிக் கொண்டிருக்கிறேன்!


அழகிய இவை இப்பொழுது கிடைக்கும்!
மிருதுவாக எழுதும்
EVERSHARP
எவர்ஷார்ப்
பேனக்களும் பென்சில்களும்
எவர்ஷார்ப்
எவர்ஷார்ப்
எவர்ஷார்ப்
ரூ. 45
ரூ. 24
எவர்ஷார்ப் வாங்குங்கள் அது மிகச்சிறந்தது!



சந்திர ஹாரம்

ஆசிரியர்: பிரேம்சந்த் | மொழிபெயர்ப்பு: ரா. வீழிநாதன்

சுமார் பத்து மணி இருக்கும். மறுபடி யும் மேள வாத்திய முழக்கம் கேட்டது. விசாரித்ததில் பரிசம் கொண்டுவரப் போகி றார்கள் என்று தெரியவந்தது. கல்யாண வீட்டில் எந்தக் காரியமும் மேளமில்லாமல் தான் நடப்பதில்லையே! மாப்பிள்ளை சாப்பிட வருகிறாரா? உடனே மேளம்! சம்பந்தி அழைப்பா? உடனே மேளம்! சிறிது நேரத்துக் கொருதரம் 'மேளக்காரன் எங்கே? மேளக் காரன் எங்கே?' என்ற குரல் எழாமல் இருப்பதில்லை. ஆகவே, பரிசம் வருகிறது என்று தெரிந்ததும் வீட்டில் ஒரே கலகலப்பு ஏற்பட்டது. குழந்தை குட்டிகள், ஆடவர், பெண்டிர் எல்லாருமே பரிசத்தைப் பார்க்க ஆவலுற்றனர். தூங்கிப் போனவர்கள் கூட விழித்துக் கொண்டு பரிசத்தை எதிர் பார்த்தவாறு உட்கார்ந்திருந்தனர். சிறிது நேரத்துக் கெல்லாம் கொட்டு மேளத்து டன், சீர் வகைகள் எல்லாம் கொண்டு வந்து வைக்கப்பட்டன. வேலையில் ஈடுபட்டிருந் தவர்கள் கூடத் தங்கள் தங்கள் வேலையை அப்படியே போட்டு விட்டுப் பரிசத் தைப் பார்ப்பதற்காக ஓடோடியும் வந்தனர். மானகிக்கு நா வறண்டு போயிருந்தது. தண் ணீர் சாப்பிட வேண்டும் என்று உள்ளே எழுந்து போனவள், 'பரிசம்' என்று கேள் விப் பட்டதும், தாகத்துக்குத் தண்ணீர் சாப்பிடுவதைக் கூட மறந்து கூடத்துக்கு ஓடி வந்தாள். தாகம் எங்கேயோ பறந்து விட்டது. தீனதயாள் பாபுவுக்கு வேலை மிகுதியினால் சாப்பிடக் கூடப் பொழுது இல்லை. அவருக்குப் பசி கண்ணை இருட்டிக் கொண்டிருந்தது. சாப்பிட இலையில் உட் கார்ந்திருந்தார். 'பரிசம் வந்துவிட்டது' என்ற சமாசாரம் தெரிந்ததும், 'அப்புறம் சாப்பிட்டுக் கொள்ளலாம்' என்று எண் ணிக் கையை அலம்பிக் கொண்டு வெகு ஆவலுடன் அங்கு வந்து சேர்ந்தார்.

மானகி ஒவ்வொரு சாமானாக எடுத்துப் பார்த்த வண்ணம் பக்கத்தில் இருந்தவர் களுக்கும் காட்டலானாள். அங்கேயிருந்த வர்கள் அனைவருமே, அந்தக் கலையில் தேர்ந்தவர்கள். ஆடவர்களுக்கோ, தங்கள் தங்கள் மனைவிகளுக்கு நகைகள் செய்து போட்டு அழகு பார்த்த அனுபவம் உண்டு. பெண்டிர்களோ அவற்றை அணிந்து கொண்ட அனுபவம் பெற்றவர்கள். அப்படி யிருக்கும் பொழுது அவர்களுக்கு நகை யைப் பற்றிய குற்றம் குறைகள்—பெரு மைகள் முதலிய விஷயம் தெரியாமல் இருக்குமா?

'இந்த அடுக்கு மல்லிகை ரொம்ப அழகாக இருக்கிறதே! நாலு பவுன் இருக்குமா?'

'நாலு பவுனா? நன்றாய்ச் சொன்னாய்! ஐந்தரைப் பவுனுக்கு ஒரு குன்றுமணி கூடக் குறையாது!'

'இதோ பார்த்தாயா, வங்கியை? என்ன பணிக்கு! இதைச் செய்த தட்டான் ரொம்பக் கை தேர்ந்தவனாகத்தான் இருக்க வேண்டும்! இது பன்னிரண்டு பவுனுக்குக் குறையாது!'

'பன்னிரண்டு பவுனா? பன்னிரண்டு பவு னுக்கு இது மாதிரி செய்ய முடியுமா? பதினாறு பவுனுக்கு ஒரு இம்மி கூடக் குறைந்தால் என்னை ஏன் என்று கேள். ஆனால் நீ சொல்லுகிறது போல அவ்வளவு

அழகு ஒன்றும் இல்லை! இதோ பார்த்தாயா, கல்லிழைத்த கங்கணத்தை! ஆகா, என்ன வேலைப்பாடு! கண்ணைப் பறித்துக்கொண்டு போகிறதே! நகை செய்தாலும் இது மாதிரி யல்லவா செய்ய வேண்டும்!'

'ரொம்ப உயர்ந்த வைரம். இல்லை யென்றால் இவ்வளவு நீரோட்டம் இருக்குமா?'

'அப்பப்பா! என்ன பிரகாசம் என்கிறாய்!'

'எங்கே அந்த வைர அட்டிகையை எடு, பார்ப்போம். எப்படித்தான் இவ்வளவு அழகாக வேலை செய்தானோ!'

'அதோ பார்த்தாயா, பதக்கத்தை! சின்னச் சின்ன முத்தாக அழகாகக் கட்டி யிருக்கிறானே!'

'இதென்ன, தங்க ஒட்டியாணம் மாதிரியே இருக்கிறதே! வெள்ளியில் தங்கமுலாம் பூசினதுதானோ?—பூ வேலை வேறு செய் திருக்கிறாப் போலிருக்கிறதே! மணல் தக்காளிக்காய் மணி வேறு தொங்குகிறது! பேஷ்!'

'எந்த ஊர்த் தட்டான் வேலையோ?'

'கேட்பானேன்? யாராவது வங்காளித் தட்டான்தான் செய்திருக்க வேண்டும்! இல்லை யென்றால் இவ்வளவு அழகா யிருக்குமா?'

'எல்லாம் நம் ஊர்த் தட்டான்களும் இப்படி யெல்லாம் செய்வான்கள்!'

இம்மாதிரி விமரிசனங்கள் எல்லாம் அங்கே நடந்து கொண்டிருந்தன. நடுவில் யாரோ ஒருத்தி, "ஆமாம், அதிலே சந்திர ஹாரம் இல்லையா, என்ன?" என்று கேட்டாள்.

"சந்திர ஹாரத்தைத்தான் காணோம். பாக்கி யெல்லாம் இருக்கிறது!" என்று மாணவி சிறிது வருத்தம் தோய்ந்த குரலில் சொன்னாள்.

"சந்திர ஹாரம் இல்லையா? இதென்ன இது? ஆச்சரியமா யிருக்கிறதே!" என்று நீட்டி முழக்கிக் கொண்டு வியப்புடன் ஒருத்தி கேட்டாள்.

நீனதயாள் பாபு வெகு சாதாரணமாக, "சந்திர ஹாரம் மட்டும்தானே இல்லை! பாக்கி யெல்லாம் இருக்கிறதோ, இல் லையோ? அதுவே யதேஷ்டம்!" என்றார்.

"என்ன இருந்தாலும் சந்திர ஹாரம் இல்லையென்றால் கல்யாணம் சிறக்கத்தான் சிறக்காது!" என்றாள் வேறொருத்தி.

மாணவி நகைத் தாம்பாளத்தை ஒரு கையால் அலட்சியமாக நகர்த்தி விட்டு, "கல்யாணத்துக்குச் சந்திர ஹாரம் போட்டுக் கொள்ளுவதென்றால் அதிருஷ் டம் வேண்டாமா? நம் பெண் அதிருஷ்டக் கட்டையாக இருக்கும் பொழுது யாரை நொந்து கொண்டு என்ன பிரயோசனம்?" என்று வருத்தத்துடன் சொன்னாள்.

அங்கே குழுமி யிருந்த கூட்டத்துக்குப் பின்னால், சற்று இருட்டாக இருந்த ஒரு மூலையில் நம்பிக்கையும் ஆசையும் ஒருங்கே கூடிய பத்மா நின்று கொண்டு அவர்கள் பேசும் பேச்சைக் கேட்டுக் கொண்டிருந் தாள். எவ்வளவோ நகைகளின் பெயர்கள் அந்தக் கூட்டத்தின் பேச்சில் அடிபட்டன. சந்திர ஹாரத்தின் பெயரைச் சொல்லு வார்தான் அங்கே யாரும் இல்லை. அவ ளுடைய இதயம் 'படபட' என்று அடித்துக் கொண்டது. நிஜமாகவே 'சந்திர ஹாரம்' இல்லையா? ஒரு வேளை எல்லாவற்றிற்கும் கீழே இருக்கும் என்று அவள் தன் மனதைத் தேற்றிக் கொண்டாள். கடைசி யில் சந்திர ஹாரம் இல்லை என்று தெரிந்த



னும், அவளுக்கு மனதை என்னவோ செய்தது. அவளுக்கு உடலில் ஓடிக் கொண்டிருந்த இரத்த ஓட்டமே நின்று விட்டது போன்ற உணர்ச்சி உண்டாயிற்று. கண்களை இருட்டின. கைகால்கள் சோர்வுற்றன. தள்ளாடிக் கொண்டே தன் அறையை அடைந்தாள். அவளையும் அறியாமல் அவளுக்கு அழுகை பீறிட்டுக் கொண்டு வந்தது.

சந்திர ஹாரம் அணிந்து கொள்ள வேண்டும் என்ற ஆசை அவளுடைய உள்ளத்தில் ஏழு வருஷங்களுக்கு முன்பே உதித்தது. சின்னஞ் சிறு வித்திலிருந்து முளைத்து எழும் மரம், தளிர்த்துத் தழைத்து ஓங்கி வளர்ந்து பூவும் பிஞ்சுமாகக் குலுங்கிக் காட்சி அளிக்கிறதல்லவா? அதேபோல அவளுடைய உள்ளத்து ஆசையும் ஓங்கி வளர்ந்து, சந்திர ஹாரத்துக்காகக் கல்யாண காலத்தை எதிர் பார்த்துக்கொண்டிருந்தது! காற்றில் களி நடம் புரியும் பசு மரம் இடியுண்டு எரிந்து சாம்பலாகி விடுவது போல, இன்று அவளுடைய உள்ளத்து ஆசையிலும் மண் விழுந்தது. 'கட்டாயம் கல்யாணத்தன்று சந்திர ஹாரம் கிடைத்து விடும்' என்று எண்ணி நாட்களை ஓட்டி வந்த அவளுடைய நம்பிக்கையைப் பாழும் தெய்வம் குட்டிச்சுவராக்கி விட்டது. அவளுடைய மனம் எண்ணுத எண்ணமெல்லாம் எண்ணி அலைபாய்ந்தது. அந்தப் பரிசுத் தாம்பாளத்தைத் தூக்கி அப்படியே நெருப்பில் போட்டு விட்டால் என்ன என்றுகூட எண்ணினாள். கடைசியாக அங்கிருந்த சிவபிரானது மண் உருவச் சிலைக்கு வந்தது ஆபத்து! தனக்கு வந்த ஆத்திரத்தில் அதை எடுத்துப் பூமியில் வீசி எறிந்தாள். அவளுடைய பெருநாளைய நம்பிக்கை சிதறியது போலவே அந்த மண் சிலையும் சுக்கு நூறாக உடைந்து பூமியில் சிதறியது. "இனிமேல் நான் நகைகளைக் கையால் கூடத் தொடப் போவதில்லை. எனக்கு எதற்கு நகை? அழகில்லாதவர்கள் நகைகள் போட்டுக் கொள்வது நியாயம். கடவுள் புண்ணியத்தில் எனக்கு வேண்டிய அழகிருக்கிறது. நகைகள் போட்டுக் கொண்டு அழகுக்கு அழகு செய்யவே வேண்டாம். நகை போட்டுக்



சொன்னா விட்டால், நான் ஒன்றும் குறைந்து போய்விட மாட்டேன். எதெல்லாம் மலிவாகக் கிடைத்ததோ, அதையெல்லாம் வாங்கிக் கொண்டு வந்தார்கள். எது கொஞ்சம் விலை அதிகமோ, அதைப் பற்றிப் பேச்சே எடுக்கவில்லை. நல்ல ஆட்கள், இவர்கள்! எண்ணிக்கை அதிகம் இருக்க வேண்டும் என்ற எண்ணமாயிருந்தால், இவர்கள் செலவழித்த இந்த ரூபாய்க்கு இதைவிட இன்னும் இரண்டு பங்கு அதிக நகைகள் வாங்கிக் கொண்டு வந்திருக்கலாமே!'' என்று மனம் போன போக்குப்படி ஏதேதோ எண்ணிக் கொண்டிருந்தாள்.

இதே சமயம் பரிசம் வந்திருக்கும் விஷயத்தை அவளுக்குத் தெரிவிக்கும் எண்ணத்துடன், மூன்று தோழிகள் அவளுடைய அறைக்குள் நுழைந்தார்கள். அவர்களைக் கண்டதும் பத்மா கண்களைத் துடைத்துக் கொண்டு சிரித்த முகத்துடன் அவர்களை வரவேற்க முயன்றாள்.

ராதா என்ற தோழி புன்முறுவலுடன், "பத்மா, நீ ரொம்ப அதிருஷ்டக்காரியடி! பூர்வ ஜன்மத்திலே நீ என்ன தவம் பண்ணினாயோ? இது மாதிரிப் பரிசம் வைத்து நான் இன்று வரை பார்த்ததே யில்லை. உன் ஆசைக்கு ஏற்றாற்போல் பரிசமும் கிடைத்திருக்கிறது!'' என்றாள்.

பத்மா, தன் நீண்ட அகன்ற கருவிழிகளை மிளிர்த்தி ஒரு தடவை அவளை ஏறத் தாழப் பார்த்தாள். அவள் பார்த்த பார்வை, 'அவளுக்கு வாழ்க்கையில் நம்பிக்கையோ இன்பமோ இல்லை' என்று சொல்வது போலிருந்தது. "ஆமாம் அம்மா, என் ஆசை அடங்கவே பரிசமும் வந்திருக்கிறது!'' என்று ஆற்றமாட்டாக் குறையாக இரண்டு அர்த்தமும் தொனிக்குமாறு பதில் அளித்தாள்.

அவளுடைய சொல்லில் தொனித்த மன வேதனையை மூன்று தோழிகளில் ஒருத்திகூடப் புரிந்து கொள்ளவில்லை. மூவரும் அவள் என்ன சொல்லுகிறாள் என்று புரியாமல் வியப்புடன் அவளையே பார்த்தனர்.

"நகைகள் செய்த தட்டான் ரொம்பக் கைதேர்ந்தவன் போலிருக்கிறது. எல்லாம் எவ்வளவு அழகாயிருக்கிறது, தெரியுமா?'' என்றாள் வாஸந்தி என்ற தோழி.

"பரிசம் என்றால் பார்ப்பவர்கள் கண்ணைப் பறிக்கும்படி இப்படியல்லவா இருக்க வேண்டும்!'' என்றாள் நளினி என்ற இன்னொரு தோழி.

"உன் மாமியார் ரொம்ப ரொம்பக் கெட்டிக்காரியம்மா! ஒரு நகை கூட விடவில்லை!'' என்றாள் வாஸந்தி.

பத்மா முகத்தை ஒரு புறம் கோணிக் கொண்டவாறே, "அப்படித்தானே இருக்க வேண்டும்!'' என்றாள்.

"எல்லாம் வாங்கியிருக்கிறார்கள். ஆனால் சந்திர ஹாரம் மட்டுந்தான் வாங்கவில்லை. அதுதான் ஒரு குறையாக இருக்கிறது!'' என்றாள் ராதா.

"சந்திர ஹாரம் இல்லாவிட்டால் என்ன? அதற்குப் பதிலாகத்தான் வைர அட்டிகை வாங்கியிருக்கிறார்களே! அது போதாதா?'' என்றாள் நளினி.

"ஆமாம், நளினி! நீ சொல்கிறது ரொம்ப நியாயம். மனிதனுக்கு ஒரே ஒரு கண் மட்டும் இல்லை என்றால் உயிர் போய் விடுமா? பாக்கி அவயவங்கள் எல்லாம் சரியாக இருந்தால் போதாதோ?'' என்று குத்தலாகப் பத்மா சொன்னாள்.

குழந்தைகளின் வாயிலிருந்து பெரிய தனமான வார்த்தைகள் வெளி வரும் பொழுது நமக்கு நம்மையறியாமலே சிரிப்பு வந்துவிடுகிறதல்லவா? அதேபோல் பத்மாவின் நகைப் பைத்தியம் பிடித்த உள்ளத்திலிருந்து குத்தலாக எழுந்த வார்த்தைகளைக் கேட்டு ராதாவும் வாஸந்தியும் சிரிப்பை அடக்க மாட்டாமல் சிரித்து விட்டனர். ஆனால் நளினிக்கு மட்டும் சிரிப்பே வரவில்லை. அவள் பொய் அனுதாபம் காட்டிக் கொண்டு, "என்னவெல்லாமோ இல்லாததெல்லாம் வாங்கிக்கொண்டு வந்தார்களே, நகைகளில் எல்லாம் மிகவும் முக்கியமான சந்திர ஹாரம் வாங்கிக் கொண்டு வரவில்லையே! இவர்களுடைய மூளையை என்னவென்று சொல்லுவது? உனக்கு வாய்க்கப்போகும் கணவரிடமே, 'இது எந்த ஊர் வழக்கம்? வழக்கமில்லாத வழக்கத்தை இப்படிச் செய்யலாமா?' என்று கேட்டுவிடுகிறேன். எனக்கென்ன பயம்?'' என்றாள்.

நளினி இப்படியெல்லாம் பேசுவதைக் கண்டு பத்மா தப்பர்த்தம் எடுத்துக் கொள்ளாமல் இருக்க வேண்டுமே என்று இரண்டு தோழிகளும் பயந்தனர். நளினியை வாயை மூடிக் கொள்ளும்படி அடிக்கடி ஜாடை காட்டினர். ஆனால் பத்மாவுக்கு நளினி செய்த பரிகாசம் உண்மையான அனுதாபமாகவே பட்டது. அவள் கண்களில் நீர்

ததும்ப, "கேட்டு என்ன பிரயோசனம்? நடந்தது நடந்து விட்டது!" என்றான்.

"கேட்பதோடு மட்டும் நிறுத்திக் கொள்வேனா? அவரைக் கண்ணில் விரலை விட்டு ஆட்டி அழ வைத்துவிட மாட்டேனா? எனக்குப் பரிசத்தின் பொழுது கங்கணம் வரவில்லை. 'எல்லா நகைகளையும் வீசி எறிந்து விட்டால் என்ன?' என்று ஆத்திரம் ஆத்திரமாக வந்தது. கங்கணம் செய்து வருகிற வரை நானும் தூங்கவில்லை; பிறரையும் தூங்கவிடவில்லை. அது மாதிரி செய்தால்தான் அவர்கள் சரிப்பட்டு வருவார்கள்!" என்றாள் கனினி.

"பத்மாவுக்குச் சந்திர ஹாரம் செய்து வராது என்று என்ன நிச்சயம்?" என்று ஒரு சந்தேகத்தை எழுப்பினாள் ராதா.

"செய்து வராது என்று நான் எங்கே சொன்னேன்? இந்தச் சமயம் செய்யவில்லை. பத்துப் பதினேந்து ரூபாயில் முடியுமானால் உடனே செய்து போட்டு விடுவார்கள்! அதற்கு அறுநூறு எழுநூறு ரூபாய்க்குக் குறையாமல் அல்லவா வேண்டும்? நல்ல தட்டானும் சீக்கிரம் கிடைத்திருக்க மாட்டான். அதனால்தான் பின்னால் செய்துபோடலாம் என்று எண்ணியிருப்பார்கள்" என்றாள் கனினி.

பத்மாவின் உடைந்த உள்ளத்தில் கனினியின் சொற்கள் மறுபடியும் நம்பிக்கையை வரவழைத்தன. அவள் தழதழத்த குரலில், "என்ன இருந்தாலும் இப்பொழுது செய்து போடாதவர்கள் அப்புறம் எப்பொழுது செய்து போடப் போகிறார்கள்? அதுதான் யோசிக்கிறேன்" என்றாள்.

சாதாவும் வாஸந்தியும் கனினியை மனதுக்குள்ளேயே வைது கொண்டு, 'உனக்கு அறைதான் கேட்கிறது' என்று ஜாடை காட்டிப் பேசாமல் இருக்கும்படி சொல்லிப் பார்த்தனர். ஆனால் கனினி அவளைப் பரிகாசம் செய்வது என்று கங்கணம் கட்டிக் கொண்டிருந்தாள். "அதெல்லாம் ஒன்றும் யோசிக்காதே, பத்மா! பிடிவாதம் பிடித்தால் எதுவும் நடந்துவிடும். மாமனார், மாமியாருக்கு எப்பொழுதும் ஞாபக மூட்டிக் கொண்டே இருக்க வேண்டும். கணவரிடம் இரண்டு நாள் கோபித்துக் கொண்டு எப்படியாவது காரியத்தைச் சாதித்துக் கொள்ளப் பார்க்க வேண்டும். அடிக்கடி வீட்டில் உள்ளவர்களிடம் நச்சரித்துக் கொண்டே இருக்க வேண்டும். 'இதேதடா, பெரிய தொணதொணப்பாய் இருக்கிறதே! சந்திர ஹாரத்தைச் செய்து போட்டே விடுவோம்!' என்ற நிலைமைக்கு அவர்களைக் கொண்டு வந்து விட்டுவிட வேண்டும். கொஞ்சம் முன்னே பின்னே யோசித்தாயானால் உன் காரியம் கைகூடவே கூடாது. புரிந்ததா?" என்று உபதேசம் செய்ய ஆரம்பித்து விட்டாள் கனினி.

ராதா சிரிப்பை அடக்கிக் கொண்டு, "பத்மாவினாலே காரியத்தைச் சாதிக்க முடியாவிட்டால் ஒத்தாசைக்கு உன்னைக் கூப்பிட்டுக் கொள்ளலாமோ இல்லையோ? ஆமாம், நீ இப்பொழுது வரப் போகிறாயா? அல்லது இங்கே உட்கார்ந்து கொண்டு இவளுக்கு உபதேசம் செய்யப் போகிறாயா?" என்று கேட்டாள்.

"இதோ வந்துவிட்டேன்!—என்னடி அம்மா, உங்களுக்கு இவ்வளவு அவசரம்? ஏன் பத்மா, உன் அம்மாவிடம்தான் ஒரு நல்ல சந்திர ஹாரம் இருக்கிறதே! அதை உனக்குக் கொடுத்துவிட மாட்டாளோ?" என்று கேட்டாள் கனினி.

பத்மா ஒரு பெருமூச்சு விட்டவாறு, "அதை யெப்படி நம்புவது? கொடுக்க



மாட்டாள் என்றுதான் எனக்குத் தோன்றுகிறது" என்றாள்.

"ஒரு தடவை அவளைக் கேட்டுத்தான் பார்த்துவிடேன்! இனிமேல் இவ்வளவு வயது கழித்து அவன் எங்கே போட்டுக் கொள்ளப் போகிறான்?" என்றாள் கமினி.

"அதெல்லாம் நான் கேட்க மாட்டேன்."

"நான் வேண்டுமானால் கேட்கட்டுமா?"

"வேண்டாம் அம்மா, நீ அசட்டுப்பிசட்டு என்று கேட்டு விடாதே! அவனுக்கு என் மேல் பிரியமிருந்தால் தானாகக் கொடுக்கிறான்" என்றாள் பத்மா.

வாஸந்தி, கமினியின் கைகளைப் பிடித்து இழுத்துக் கொண்டே, "நீ வரப் போகிறாயா? இல்லை, இங்கேயே உட்கார்ந்திருக்கப் போகிறாயா?" என்று கேட்டாள்.

கமினி எழுந்தாள். ஆனால் பத்மா அவளை வழிமறித்து, "சற்றுக் கழித்துப் போகலாம், உட்காரு!" என்றாள்.

"இந்த இரண்டு கோட்டான்களும் ஒரு நிமிஷம் உட்காருவோம் என்றால் உட்கார விட மாட்டோம் என்கிறதுகளே! 'தொண தொண' வென்று பிடுங்கித் தின்கிறதுகள்" என்றாள் கமினி.

"ஆமாம், நாங்கள் கோட்டான்கள்! கோட்டான்களுக்குத் தோழியான நீ என்னவாம்?" என்றாள் வாஸந்தி.

கமினி சிரித்துக் கொண்டே, "என் வாஸந்தி, ஒரு வருஷம் புக்ககத்தி லிருந்து விட்டு வந்திருக்கிறாயே! உனக்குப் புக்ககத்திலே என்னென்ன நகைகள் பண்ணிப் போட்டிருக்கிறார்கள்?" என்று கேட்டாள்.

"ஆமாம், நீ மூன்று வருஷம் இருந்து விட்டு வந்திருக்கிறாயே! நீ என்ன வெல்லாம் செய்து போட்டுக் கொண்டிருக்கிறாயாம்?" என்று கேட்டாள் வாஸந்தி.

"என்னை விட்டுத் தள்ளு! என் கணவர் நான் சொல்வதைக் கேட்டால்தானே, ஏதாவது பண்ணிப் போடச் சொல்வதற்கு?" என்றாள் கமினி.

"அன்பாய் இருந்தால் போதாதோ? நகைகள் செய்து போட்டுத்தான் ஆக வேண்டுமோ?" என்றாள் ராதா.

"வெறும் அன்பு மட்டும் இருந்து என்ன பிரயோசனம்?" என்று ஆரம்பித்தாள் கமினி.

இதற்குள் பத்மாவின் தாயார் அங்கே வந்து, "நீங்கள் மூன்று பேரும் இங்கே உட்கார்ந்து கொண்டு என்ன செய்து கொண்டிருக்கிறீர்கள்? வாருங்கள், உள்ளே கொஞ்சம் கூடமாட இருந்து பரிமாறுங்கள்!" என்றாள்.

மூன்று யுவதிகளும் எழுந்து போய் விட்டனர். தாயாரின் கழுத்தில் சந்திர ஹாரம் ஏறி யிருப்பதைக் கண்ட பத்மா மனதுக்குள், "இன்னும் அம்மாவுக்கு நகையாசை போகவில்லை, பார்த்தாயா?" என்று சொல்லிக் கொண்டாள். (தொடரும்)

படித்துப்பார்!

பாரதியும் கவிதையும்

[ஆசிரியை: ஸ்ரீமதி தங்கம்மாள் பாரதி: பிரசுரம்: புதுமைப் பதிப்பகம், காரைக்குடி: விலை: ரூ. 2—8—0.]


தமிழ் நாட்டின் அமரகவியாகிய ஸ்ரீ பாரதியாரைப் பற்றி எத்தனை புத்தகங்கள் வெளி வந்தாலும் தமிழ் மக்களுக்கு அலுப்புத் தட்டவா போகிறது? அதிலும், பாரதியாரின் அருமைப் புதல்வியாகிய ஸ்ரீமதி தங்கம்மாள் பாரதியே தம்முடைய தந்தையாரைப் பற்றி எழுதிய புத்தகம் என்றால் தமிழ் மக்களுக்கு அதில் ஒரு தனி மதிப்பும் பெருமையும் இருப்பதில் வியப்பு எதுவும் இல்லை. ஸ்ரீமதி தங்கம்மாள் பாரதி இந்தப் புத்தகத்திலே தம்முடைய தந்தையாரின் வாழ்க்கையிலே நடந்த பல ரஸமான சம்பவங்களை யெல்லாம் தொகுத்துக் கொடுத்திருக்கிறார். இதில் பல, எந்தப் புத்தகத்திலாவது பத்திரிகையிலாவது வெளி வராதவையாகும். ஒவ்வொரு சம்பவமும் பாரதியாருடைய வாழ்க்கையின் ஒரு பகுதியையோ, அவருடைய பல்வேறு குண அம்சங்களின் ஒரு பகுதியையோ பளிச்சென்று எடுத்துக்காட்டுகிறது.

பிரசுரகர்த்தர்கள் கூறுவதுபோல இந்தப் புத்தகம் "பாரதியாரின் மேதா விலாசத்தை அறிய உதவியாய் இருக்கும்" என்பதில் எள்ளளவும் சந்தேகம் இல்லை.

அந்தமான் கைதி

[ஆசிரியர்: ஸ்ரீ கு. ஸா. கிருஷ்ணமூர்த்தி: பிரசுரம்: தமிழகம், புதுக்கோட்டை; விலை: ரூ. 2—8—0.]

பதினைந்து ஆண்டுகள் நாடகத் தொழிலிலேயே ஈடுபட்டவரான ஸ்ரீ கு. ஸா. கிருஷ்ணமூர்த்தி அவர்களால் எழுதப்பட்டு, பல அறிஞர்களாலும் பத்திரிகாசிரியர்களாலும் பாராட்டப்பட்டு, நாடகக் கலைஞர்களான டி. கே. எஸ். ஸகோதரர்களால் நடிக்கப்பட்டு, எண்ணற்ற தமிழ் மக்களால் பார்த்து அனுபவிக்கப்பட்டுப் பிரசித்தி யடைந்த 'அந்தமான் கைதி' இப்போது இரண்டாம் பதிப்பாக வெளியாகி யிருக்கிறது.


*சித்ரா:
குறுகுறுவென்ற கருவிழிகள் ...
மாசற்ற மதிவதனம் ...
உங்கள் சருமத்திற்கு உங்களால் முடியுமான முக்கிய பராமரிப்பு, அதை செம்மையாகச் சுத்தம் செய்வதே யென்பது நீங்களும் அறிவீர்கள், இல்லையா? .. நறுமணங்கமழும் பாண்ட்ஸின் உதவியால், வதனத்தை சுத்தமாகவும் காந்தி யோங்கவும் வைத்துக் கொள்ளுங்கள்.
என்னே *அவளது எழில்!
அவள் பாண்ட்ஸ்
உபயோகிக்கிறாள்!
பாண்ட்ஸ் இணைமுறை
POND'S
பாண்ட்ஸ் கோல்ட் க்ரீம்: தினம் இரண்டு வேளை விரல் நுனிகளால் கோல்ட் க்ரீம் மெதுவாகத் தடவி, முகத்தை செம்மையாகச் சுத்தம் செய்யுங்கள். பாண்ட்ஸ் டிஷ்யூவால் துடைத்துக் களையவும்.
POND'S
பாண்ட்ஸ் வானிஷிங் க்ரீம்: பின்பு வானிஷிங் க்ரீம் தடவுங்கள். அது சருமத்திலுள் மறைகிறது—சருமத்திற்கு பாதுகாப்பளிக்கிறது.
பாண்ட்ஸ் பௌடர்: பின்னர் வேண்டுமானால் கொஞ்சம் பௌடரும் தடவிக் கொள்ளுங்கள். முகம் பூவிதழ்போன்ற மோகன காந்தியுடன் விளங்கும்.
பாண்ட்ஸ் க்ரீம்ஸ்
வியாபார விவரங்களுக்கு:
எல். டி. ஸெய்மூர் & கோ.
(இந்தியா) லிட்.
பம்பாய்—கல்கத்தா—காராச்சி—சென்னை.
Copyright: Pond's Extract Co.
JWT.

இது என்ன பழக்கம்?

எஸ்.வி.எஸ்.

நான் வாரா வாரம் நடக்கும் ஒரு பிரசங்கத்துக்குத் தவறாமல் போவது வழக்கம். அங்கு வரும் மகாஜனங்களில் ஒருவர், தலையில் சரிகைத் தலைப்பாகை வைத்துக் கொண்டு என்னைப் போலவே தவறாமல் வருவார். ஒரு நாள் அவர் தம்முடைய தலைப்பாகையை விட்டுவிட்டு வெறும் தலையுடன் வந்து சேர்ந்தார். அப்போது என்னை என்ன வேதனை செய்தது என்கிறீர்கள்? "ஐயா, தங்கள் தலைப்பாகை எங்கே? அதை எங்கே வைத்து விட்டீர்கள்? நான் வேண்டுமானால் போய்க் கொண்டுவரட்டுமா? தயவு செய்து இனிமேல் தலைப்பாகையில்லாமல் உங்கள் தலையைக் காட்டாதீர்கள்!" என்று சொல்ல வேண்டும்போலிருந்தது!

* * *

ஐந்து நிமிஷத்தில் செய்யக் கூடிய வேலையை எங்கள் காரியாலயத்திலிருக்கும் ஒரு பையன் ரொம்ப சுறுசுறுப்பாக ஐம்பது நிமிஷத்தில் செய்து விடுவான்!

ஒரு தடவை ஏதோ ஓர் அவசர காரியத்தை முன்னிட்டு அவனை வெளியே அனுப்பியிருந்தோம். வெகு நாழிகையாகி விட்டது. காத்துக் காத்து நாங்கள் அலுத்துப் போனபோது அவன் ஒரு மாதிரி தென்பட்டான்.

"அதோ வருகிறானே!" என்றார் ஒருவர்.

"அவன்தானோ என்னவோ?" என்றார் இன்னொருவர்.

"தலையைச் சாய்த்துக்கொண்டு நடந்து வருவதிலிருந்தே தெரியவில்லையா?" என்றார் முதல் நண்பர்.

பார்த்தீர்களா, உருவம் தெளிவாகத் தெரியாத தூரத்திலிருக்கும்போதே அவனை அடையாளம் சொல்லுவது தலையைச் சாய்த்து நடக்கும் பழக்கந்தானே?

"அது சரி, அவன்தான் காலதாமதம் செய்வான் என்று தெரியுமே, அவசர காரியத்துக்கு அவனை ஏன் அனுப்பினீர்கள் என்கிறீர்களா?"

நாங்கள் என்ன செய்வோம்? அவசர காரியமானாலும் அவனை அனுப்புவதே எங்கள் பழக்கமாகி விட்டது!

* * *

பேச்சிலும் சில பழக்க வழக்கங்களைச் சிலர் கைக் கொண்டிருப்பார்கள். ஏன், எங்கள் நாராயணய்யங்காரை எடுத்துக் கொள்ளுங்களேன். மகாத்மா காந்தி நவகாளியில் காலால் நடந்து செல்கிறார் என்றால் உடனே அவர், "நான் எப்படித் தெரியுமோ இல்லையோ!" என்று மகாத்மா காந்தியைப்போல் நடக்க ஆரம்பித்து விடுவார். அதனாலேயே அவருக்கு 'நான் எப்படி நாராயணய்யங்கார்' என்ற பெயர் நிலைத்து விட்டது!

* * *

"இதெல்லாம் ஒரு பழக்கத்தில் சேர்ந்ததா? காப்பி குடிப்பதைப் பற்றிச் சொல்லுங்கள் — அது பழக்கம்!" என்று சிலர் சொல்லலாம்.

அதுவும் உண்மைதான். என் மனைவிக்கு எப்படியோ காப்பி குடிக்கும் பழக்கமே கிடையாது. அவள் வந்ததும் வராததுமாக என் காப்பிக்குத் தடை உத்தரவு போட்டு, காப்பிப் பழக்கத்தை விட்டுவிடச் சொல்லிப் பிரேரேபித்தான். "இதில் என்ன கஷ்டம்? இதுவரை ஆயிரம் தடவை விட்டிருக்கிறேன், இப்போது ஆயிரத்தோராவது தடவையாக விட்டுவிடுகிறேன்!" என்று சொல்லிக்கொண்டே, அவள் கொண்டு வந்த காப்பியைக் குடித்து வைத்தேன்.



"நாளைக் காலை இன்னொரு தடவை காப்பி குடித்துவிட்டு ஆயிரத்து இரண்டாவது தடவையாக விட்டு விடுவீர்களாக்கும்!" என்றாள் அவள் ஆத்திரத்துடன்.

ஆபீஸ் விட்டு, மாலை நான் வீட்டுக்குப் போனதும் சாதாரணமாகக் காப்பி என்னைத் தேடி வரும். ஒரு நாள் அவ்விதம் வரவில்லை. நான் ரொம்பக் கோபமாக, "இன்று காப்பி கீப்பி உண்டா, கிடையாதா?" என்று இரைந்தேன்.

"இன்று காப்பிதான் உண்டு; கீப்பி கிடையாது!" என்று சொல்லிக் கொண்டு காப்பி டம்ளருடன் என் முன் தோன்றினான் என் இல்லாள்.

வாஸ்தவம்; நமக்கு இரட்டை இரட்டையாக வார்த்தைகளைச் சொல்லிப் பழக்கமாகி விட்டது. 'காப்பி கீப்பி' 'வண்டி கிண்டி' 'சாப்பாடு கீப்பாடு' 'வடை கிடை' என்று சாதாரணமாக, பொருளுள்ள ஒரு வார்த்தையும், அந்த வார்த்தைக்கு ஏற்ற எதுகையுள்ள ஒரு பொருளற்ற வார்த்தையும் சொல்வது நம் வழக்கமாகி விட்டது.

ஆனால் பொருளற்ற ஒரு வார்த்தைக்கு நாம் எவ்வளவு பொருள் அளித்திருக்கிறோம், தெரியுமா? அந்த வார்த்தைக்கு அப்படிப்பட்ட பொருள் எப்படி வந்தது என்று வியந்து விழி பிதுங்கிப்போகிறீர்கள் அல்லவா? இதோ சொல்லுகிறேன்.

உங்களை ஒரு நண்பர் மாதம் முதல் தேதி வாக்கில், "ஸார், சம்பளம் கிம்பளம் வாங்கி விட்டீர்களா?" என்று கேட்டால் அவரைச் சும்மா விடுவீர்களா?

"ஸார், நான் சம்பளந்தான் வாங்குகிறேன். கிம்பளம் வாங்குகிற பழக்கம் கிடையாது!" என்று ஆத்திரத்துடன் சொல்வீர்கள் அல்லவா?

"கிம்பளம் வாங்குகிற பழக்கம் என்றால் என்ன?" என்று கேட்பது காதில் விழுகிறது.

ரகசியமாகச் சொல்லுகிறேன். வலது கையால் செய்யும் தானம் தர்மம் இடது கைக்குத் தெரியக் கூடாது என்பார்கள். அப்படியே இன்று சில மகானுபாவர் வலது கைக்குத் தெரியாமல் இடது கையால் வாங்குகிறார்கள். அந்த வழக்கத்துக்குத்தான் 'கிம்பளம்' என்று பெயராம்.

இப்படி நம்மிடை எத்தனையோ பழக்க வழக்கங்கள். 'பழக்க வழக்கம்' என்ற வார்த்தையே வேடிக்கையாக இருக்கிறதல்லவா?

இதை யெல்லாம் பார்த்து அனுபவிப்பது எப்படியோ என் பழக்கமாகி விட்டது.




பிரசங்கி:—இன்று நமது சபைக்குத் தலைமை வகிக்கும் அதிகாரியைக் கற்பகக் களஞ்சியம் என்று சொன்னாலும் மிகையாகாது.........!

சபையில் ஒருவர்:—இது என்ன, ஐயா! அவரைக் களஞ்சியம் என்று சொல்வதைக் காட்டிலும் குதிர் என்று சொல்வது இன்னும் கொஞ்சம் பொருத்தமாக இருக்குமே!



INDIA SUPER
INDIA Super CYCLE TYRES
டயர்களுக்குள் மிகவும் சிறந்தது

ஸ்டிரைக் விஷயம்



"இது என்ன? ஒரு கம்பெனியில் இரண்டே இரண்டு பேர் மட்டுமா பூரண வேலை நிறுத்தம் செய்வார்கள்? மற்றவர்களெல்லாம்.........!"

"இல்லை ஸார்! அந்தக் கம்பெனியில் வேலை செய்பவர்களே இரண்டு பேர்தான்!"



"அடே, அப்பா! மதுரைவீரன் பீடி கம்பெனியில் இத்தனை தொழிலாளிகளா?"

"இல்லை ஸார், இல்லை! அந்தக் கம்பெனியில் மொத்தம் 15 பேர்தான். பாக்கி எல்லாரையும் விளம்பரத்துக்காகக் கம்பெனிக்காரர்களே அமர்த்தி அனுப்பி இருக்கிறார்கள்!"

ரொம்ப அவசரம்

பகீரதன்

“சாமி, ரொம்ப அவசரங்க! என் மனைவி காலையிலிருந்து வயிற்று வலியால் துடிதுடிக்கிறாளுங்க! ஏழையைக் காப்பாற்ற வேணுங்க!” என்று டாக்டர் பங்காரு நாயுடுவினிடம் பல்லைக் காட்டிக்கொண்டு நின்றான் பழனிசாமி.

“பணம் கொண்டு வந்திருக்கிறாயா, பணம்?” என்றார் டாக்டர் பங்காரு நாயுடு.

“சாமி, நான் ஏழைங்க; பணத்துக்கு எங்கே போவேனுங்க?”

“இதோ பாரு, ரூபாய் பத்து இல்லாமல் நான் எங்கேயும் போவதில்லை!”

“அப்படிச் சொல்லாதீங்க, சாமி! ஏழை மீது கொஞ்சம் தயவு செய்யுங்க! ஏதோ கையிலே இருப்பதைக் கொடுக்கிறேனுங்க! எப்படியாச்சும் அவளைக் காப்பாற்றி விட்டுடுங்க. உங்க புண்ணியத்திலே பொழைச்சுப் போறேனுங்க......”

“என்னப்பா, இது? தர்ம வைத்திய சாலையா? போ, வெளியே! உங்களுக்கெல்லாம்தான் ஆஸ்பத்திரி கட்டி வைத்திருக்கிறதே, அங்கே போய்த் தொலைகிறதுதானே?” என்று எரிந்து விழுந்தார் டாக்டர்.

பழனிசாமி அதற்குமேல் அங்கே நிற்கவில்லை. டாக்டரைத் திரும்பித் திரும்பிப் பார்த்துக்கொண்டே தயங்கித் தயங்கி வெளியே சென்றான்.

இந்தச் சமயத்தில் டெலிபோன் மணி அடிக்கவே, அவசர அவசரமாக ரிஸீவரைக் கையிலெடுத்தார் டாக்டர்.

“ஹலோ! யார் அது? டாக்டரா?”

“ஆமாம், நான்தான் டாக்டர் பங்காரு நாயுடு பேசுகிறேன்!”

“அப்படியா? நான்தான் ராவ்பகதூர் ராதாகிருஷ்ணன். என் மனைவிக்கு இருந்தாற்போலிருந்து மயக்கம் வந்துவிட்டது! ரொம்ப அவசரம்! உடனே வரவேண்டும்!”

“ராவ்பகதூரா! இதோ, ஒரு நிமிஷத்தில் வந்துவிட்டேன்!” என்று சொல்லி ‘டக்’கென்று ரிஸீவரைக் கீழே வைத்துவிட்டு, டாக்டர் உடனே காரை எடுத்துக்கொண்டு கிளம்பினார்.

ராவ்பகதூரின் வீட்டை யடைந்ததும், வாசலில் காத்து நின்ற காவற்காரனிடம், “எஜமான் எங்கே யிருக்கிறார்?” என்று கேட்டார்.

“மாடியில் இருக்கிறாருங்க!” என்றான் அவன். அவ்வளவுதான்; அங்கிருந்து ஒரே தாவாகத் தாவி மேல் மூச்சு கீழ் மூச்சு வாங்க மாடிக்குச் சென்றார் டாக்டர்.

அங்கே ஒரு கடிகாரத்தைக் கையில் வைத்துக் கொண்டு ராவ்பகதூரும், அவருக்குப் பக்கத்தில் ஒரு பெண்மணியும் நின்று கொண்டிருந்தார்கள்.

டாக்டரைக் கண்டதும், “அடே! பத்தே நிமிஷத்தில் வந்து விட்டீர்களே!” என்றார் ராவ்பகதூர் ஆச்சரியத்துடன்.

“வழியில் ரயில்வே கேட்டை மூடி விட்டான். இல்லா விட்டால் ஐந்தே நிமிஷத்தில் வந்திருப்பேன்!—அதிருக்கட்டும், தங்கள் மனைவி எங்கே?”

“இதோ, என் பக்கத்திலேயே நிற்கிறாளே, இவள்தான் என் மனைவி!”

“என்ன! இந்த அம்மாளின் உடம்புக்கு ஒன்றுமில்லை போலிருக்கிறதே! ‘ரொம்ப அவசரம்!’ என்று ‘போன்’ பண்ணினீர்களே!” என்று டாக்டர் ஒன்றும் புரியாமல் கேட்டார்.

“அவள் உடம்புக்கு ஒன்றுமில்லை. ‘ரொம்ப அவசரம்’ என்றால் தாங்கள் இங்கே வருவதற்கு எத்தனை நிமிஷங்கள் ஆகும் என்பதைத் தெரிந்து கொள்வதற்காகத்தான் ‘போன்’ செய்தோம்!” என்று சொல்லி விட்டு, ராவ்பகதூரும் அவர் மனைவியும் ‘கொல்’லென்று சிரித்தார்கள்.

பாவம், அவசர அவசரமாக ஓடோடியும் வந்த டாக்டர், அவசர அவசரமாகவே தம் வீட்டுக்குத் திரும்பினார். வழியில் சோகமே உருவாய்ச் சென்று கொண்டிருந்த பழனிசாமி, டாக்டரைச் சிறிது நேரம் யோசிக்க வைத்தான்!



இருமல்களுக்கும்
ஜலதோஷங்களுக்கும்
ஸிரோலின்
'ரோச்'
உலகு பூராவும் உபயோகிக்கப்படுவது



'ஆஸ்ப்ரோ'
இதோ வந்துவிட்டது!
ASPRO
போலிகளை வாங்காதீர்கள்.
ஒவ்வொரு வில்லையின்மேலும்
'ஆஸ்ப்ரோ' என்ற வார்த்தை
இருப்பதைக் கவனிக்கவும்
'ஆஸ்ப்ரோ' வலியையும்
ஜுரத்தையும் 10 நிமிஷங்க
ளில் போக்கும். இருத
யத்துக்காவது வயிற்
றுக்காவது கெடுதி
செய்யாது
'ஆஸ்ப்ரோ'
கட்டுப்பாடு செய்யப்பட்ட
விலைகள் :
3 வில்லைகள் கொண்ட
பாக்கட் . . . 1 அணா
30 வில்லைகள் கொண்ட
பாக்கட் . . . 10 அணா
'ஆஸ்ப்ரோ'
எங்கும் கிடைக்கும்.

Edited, Printed and Published by R. Krishnamurthy at the "Kalki" Press
116-119, Sladens Garden, Poonamalle High Road, Kilpauk, Madras.

கல்கி



KALKI ஏப்ரல் 20, 1947

4 அணா

REGD. No. M. 4392



நறுமணங்கமழ் குளிர்ச்சி . . . .

காலை வேளை குன்றின் மீதிருப்பது போல

உஷ்ணமான நாட்களில் அவ்வளவு சுகமளித்து உற்சாக மூட்டுவது—கோட்டி தயாரிப்பு லவண்டர் திரவம். அழகிற்கு இயற்கையான அற்புத வாசனை தான். ஆனால் கோட்டி மேதை அதை இன்னும் அதி சிலாக்கியமாக்கி விட்டார். சருமத்தின் மீதோ, ஆடையின் ஓர் ஓரத்திலோ இலேசாகத் தடவுங்கள், அல்லது உங்கள் அறையில் தெளியுங்கள். உடனே எங்கும் நறுமணமயமானதோர் புதுமை நிலைத்து விடும்.

லவண்டர் திரவம்

கோட்டி தயாரிப்பு



PARFUMS DE LUXE

PRODUITS DE BEAUTE

ஏஜண்டுகள் :

டி. ஏ. டேய்லர் & கம்பெனி (மதராஸ்) லிமிடெட்

100, அரமனைக்காரத் தெரு, ஜி. டி., மதராஸ்